www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
රූපා 10/00
දිනමුරසු වාරමලර්
டிச.04-10,1994

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 79



எக்ஸ்ரே ரிப்போர்ட்

## புதிய ஜனாதிபதியும் புலிகளின் வியூகமும்!

அரசியல் அலசல்

## கொழும்பு குண்டு வெடிப்புகள் புலிகளின் புதிய தகவல்!

சிங்காரமான சினிவிசிட்

அற்புதமான நாவல் தொடர்

## தாய்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்ட

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

முரசின்-
அரசியல் விமர்சனங்களின்
காரமும்-கணிப்பும் குறித்து
கசந்த சிலர் தொடர்பாக
வருத்தப்படவில்லை - பொறுத்திருந்தோம்.

விமர்சனங்கள் என்பது
உள்ளதை மறைத்து-
வெள்ளையடிக்கும் விவகாரமல்ல;
பூசி மெழுகும் வேலையுமல்ல!

வெள்ளையடிப்பது விரும்பக்கூடியதுதான்.
ஆனால்- இடிந்து விழும் சுவரை
இற்றுப் போய் அத்திவாரமே ஆடும்போது
'அழகாக இருக்கிறது-
ஆரோக்கியமாக இருக்கிறது' என்று
வெளிக்காட்ட நினைத்து
வெள்ளையடிப்பது போல் விமர்சிக்கின்றார்களே,
அதனைத்தான் விரும்ப முடியாதிருக்கிறது.

காமினி கொலை விவகாரத்தில்கூட
பளிச்சென்று தெரிந்த உண்மையை
மக்களிடம் இருந்து மறைக்க
சிலர் பட்ட பாடுதான் எத்தனை?!

புலிகள் கூட மறைக்க வேண்டும்;
மறுக்க வேண்டும் என்று
நினைக்கவில்லை - அவசரப்படவில்லை.

புலிகள் பொய் சொல்லவில்லை.
அரசியல் விவேகம் கருதி
ஒத்துக்கொண்டு உரிமை கோரவில்லையே தவிர
காமினி கொலையை
வரவேற்றிருக்கிறார்கள் - வாழ்த்தியிருக்கிறார்கள்.

சில அரசியல் கொலைகளை
புலிகள் உடனே மறுத்ததுண்டு!
என்றாலும், காலம் செல்ல-
சூழல் மாற அந்த கொலைகளை
மறைமுகமாய் ஏற்றனர் புலிகள்.

தன்னை நம்பி மடிந்த உறுப்பினர்களின்
தியாகங்களை மறைத்துக் கொண்டிருக்க
பிரபாகரன் எப்படி விரும்ப முடியும்?
பொட்டம்மான் என்று ஒருவர் இல்லையென்று
மாத்தையாதான் சொன்னாரே தவிர
பிரபா ஒருபோதும் சொன்னதில்லை.
பிரபாவிடம் உள்ள தனித்துவம்
அதுதான்.

பிரபா நினைத்திருந்தால்
தேர்தல் முடிந்த பின்பாவது
காமினி கொலையை மறுத்து
அறிக்கை விட்டிருக்கலாம்.
பேச்சுக்கு எதிரான முயற்சி என்று
கூறியிருக்கலாம்.

உடனே அதனை வைத்தே
ஆயிரம் கதை பின்னவும்
சிலர் தயாராகவும் இருக்கிறார்கள்.

ஆனால், பிரபா அப்படிச் செய்யவில்லை.
அரசியல் ஆலோசகர் பாலசிங்கம்
என்ன சொல்கிறார் என்றால்,
"குண்டு வெடிப்பைச் செய்தது யார்?
என்று பாராமல்
குண்டு வெடிப்பில் செத்தது யார்?"
என்றுதான் பார்க்க வேண்டும் என்கிறார்.

இதற்குப் பின்னரும் சிலர்
புலிகள் நேரடியாக ஒப்புக்கொள்ளவில்லையே
என்று வாதம் செய்தால்
அவர்களை விட்டு விட வேண்டும்.
தூங்குவது போல நடிப்பவர்களை
தொல்லைப் படுத்தக் கூடாது.

"இந்தப் பிறப்பில் செய்த
அநியாயங்களுக்கு இந்த பிறவியிலேயே
போய்ச் சேருகிறார்கள்"
என்று அன்ரன் பாலசிங்கம்
அடித்துக் கூறிவிட்டார்.

அது அவரது கருத்து.
அன்புக்குரிய நம் அஹிம்சைவாதிகள்
அதுபற்றி என்ன நினைக்கிறார்கள்?
அறிய ஆவல்!

முரசைப் பொறுத்தவரை
அதன் விமர்சனைங்கள் உடனே
கசந்தாலும், காலத்தால் அங்கீகரிக்கப்படும்.

அவ்வப்போது உள்ள விருப்பம் தீர
வாசகருக்கு போடும் தீனியல்ல
அரசியல் விமர்சனம்.

கடந்தகால - நிகழ்கால சூழலைவைத்து
இனிவரும் சூழ்நிலையை ஓரளவேனும்
எடுத்துக்காட்டவேண்டும்.
ஒரு வாரமோ ஒரு மாதமோ சென்று
விமர்சனத்தை புரட்டிப் பார்த்தால்
அதில் குறைந்தது நூற்றுக்கு 50 வீதமாவது
அடுத்து நடக்கப்போவதை முன்கூட்டியே
எடுத்துச் சொன்னதாக இருக்கவேண்டும்.

இல்லாவிட்டால் எல்லோரும் எழுதமுடியும்;
பேனா இருந்தால் போதும் என்றாகிவிடும்.

முரசு அந்தவகையில் சேராது.
நூற்றுக்கு நூறு சரியாகச் சொல்ல
நாம் ஒன்றும் முக்காலமும் அறிந்தவர்களல்ல.
ஆனால், நூற்றுக்கு 50 வீதத்துக்கு மேலே
முரசின் கணிப்புக்கள் உண்மை என்பதை
உத்தரவாதப்படுத்தும் விமர்சனங்களே
அரசியலைப் பொறுத்தவரை முரசில் இடம்பெறும்.

மருந்து கசப்பாக இருப்பதற்காக
வைத்தியர் கொடுக்காமல் விடலாமோ?
கசப்பாக இருந்தாலும் - முரசின்
விமர்சனங்கள் உண்மை சொல்லும்.
சில சமயம் அப்படிச் சொல்ல
இயலாத சூழல் ஏற்பட்டால்கூட
முரசு பொய் சொல்லாது என்பது உறுதி.

□□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## ஆலோசனைக் கர்த்தர்!


"எனக்குச் சொல்லும்" (உன் 1:7)

"எனக்குச் சொல்லும் ஆண்டவரே" என்று தம்மைத் தாழ்த்தி கிறிஸ்துவின் பாதபடியில் அமர்ந்து அவரது வார்த்தைகளை ஆவலுடன் கேட்போமாக! "கர்த்தாவே சொல்லும்; அடியேன் கேட்கின்றேன்" என்று பணிவன்போடு சிறுவனான சாமுவேல் சொன்னபோது கர்த்தர் எவ்வளவு மகத்துவமான காரியங்களை அவனுக்கு அறிவித்தார்.

ஒவ்வொரு காரியங்களிலும் "ஆண்டவரே எனக்குச் சொல்லும்" என்று நாம் கர்த்தரிடம் ஆலோசனை கேட்பது கர்த்தருடைய சித்தத்தின்படி நாம் நடந்து கொள்ள உதவியாயிருக்கும். அவர் நமது ஆலோசனைக் கர்த்தரல்லவா? "நான் உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை கூறுவேன்" என்று வாக்குப் பண்ணியிருக்கிறார் அல்லவா?

எம். தில்லைராஜா-பசறை.

# ஆன்மீகம்



## கேள்வியின்றி சுவர்க்கம் செல்பவர்கள்

கியாமத்து நாளில் உலக மக்கள் யாவரும் ஓரிடத்தில் ஒன்று கூடுவர். அங்கு ஒரு மலக்கு அறிவிக்கும் அறிவிப்பை அனைவரும் கேட்பர்.

"சுகம், துக்கம் ஆகிய எல்லா நிலைகளிலும் அல்லாஹ்வைப் புகழ்ந்தவர்கள் எங்கே?" என்று அறிவிக்கப்படும். அதைக் கேட்டு ஒரு கூட்டத்தினர் எழுந்து எவ்வித கேள்வி கணக்குமின்றி சுவர்க்கம் செல்வர்.

பிறகு ஓர் அறிவிப்பு "இரவு நேரங்களில் தங்களின் விலாக்களை படுக்கையை விட்டு தூரமாக்கி தூங்காது விழித்திருந்து வணக்கங்களில் ஈடுபட்டவர்கள் எங்கே?" என்று அறிவிக்கப்படும். அப்பொழுது ஒரு கூட்டத்தினர் எழுந்து எவ்வித கேள்வி கணக்குமின்றி சுவர்க்கம் செல்வர்.

அடுத்து ஓர் அறிவிப்பு - எவருடைய வியாபாரமும் கொடுக்கல் வாங்கலும் அல்லாஹ்வுடைய திக்ரை விட்டும் அவர்களை மறக்கச் செய்ய வில்லையோ அப்படிப்பட்ட மனிதர்கள் எங்கே? என்று கூறப்படும். அப்பொழுதும் ஒரு கூட்டத்தினர் எழுந்து எவ்வித கேள்வி கணக்குமின்றி சுவர்க்கம் செல்வர் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

## கவிதைப்போட்டி இல-76

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**பாழ்பட்ட வெள்ளம்**

பத்தியெரிஞ்சி
பாழ்பட்டுப் போனவெள்ளம்
என்னுடைய
முத்திரைக் கூப்பனையும்
முடிவெடுத்துப் போட்டுதய்யோ!

கு.திருமால்-அமிர்தகழி.

### வியக்கப்பட்டவை

**தாயே உன் பரிதவிப்பு**

தாயே உன் பரிதவிப்பு
தரணிக்கே தெரியுமம்மா!
தான் தோன்றி இனவாதம்
தலை பறித்த சோகமயம்!
மும் மணியின் ஆசி யிங்கு,
மும் மொழியைச் சிரிக்க
வைப்பதெப்போதோ?

நிஜந்திக்கா கனகசிங்கம்
மட்டக்களப்பு.

**மாறியது வாழ்வு**

களம் கொண்ட பூமிதனில்
கையளவு வாழ்க்கையூடே
மடிந்து போன மானிடத்தில்
ஒடிந்து நிற்கும் மனமொன்று.

தெ.லோஜனா-கொழும்பு-15.

**யாவிலும் பெண்**

ஆள்வதும் பெண்
அழிப்பதும் பெண்
இப்போ...
அழுவதும் பெண்.

கரீமா என்.யூனுஸ்
கலாவெவ.

**தீனிகள்**

குடும்பத் தோப்பின்
குருத் தோலைகளை
கோரப் போர்-தன்
தீராப் பசிக்குத்
தீனியாக்கிக்
கொண்டதாலா
இங்கு இந்த
பழுத்தோலை
பரிதவிக்கிறது.

த.தயாபரன்
ஆரையம்பதி-03.

**துயர் போக்கும் வழி**

அழுது புலம்பி
ஆகும் பலன் ஏதுமில்லை
அனுதாப அலைகள்
அனைவருக்கும் அடிப்பதில்லை
தொழுது வணங்கி
துயர் போக்கும் வழியைப் பார்.

எம்.எஸ்.புகாரி-சாய்ந்தமருது-4.

**சோகம்**

யுத்தம் உனை
விவாகரத்து
செய்த
சோகமோ-

கே.கேதீஸ்வரன்
சாலியபுரம்.

**அழுகின்ற தேசம்**

ஆயுதக்
கீறல்களால்
அழுகின்ற
தேசத்தை
சமாதானச்
சிசு பிறந்து
சிரிக்க வைப்ப
தெப்போது?

ரேணுகா நிபாய்தீன்
ஏறாவூர்-02.

**மறையாது**

ஒப்பாரி வைப்பதுவும்
ஒலமிட்டு அழுவதுவும்
சத்தியமாய்
நம் நாட்டில்
என்றென்றும்
மறையாது.

சுஸ்தா பத்மநாதன்
மட்டக்களப்பு.

**தாயுடையது அல்ல**

ஆச்சியே
அழாதே!
ஆட்சி
தாயுடையதல்ல,
மகளுடையது.

என்.எம்.எம்.நின்சல்
எதுன்கஹகொடுவ.



**என் பேரன் வருவானோ?**

புத்தொளி விசும்
புதிய அரசாங்கம்
இத் தீவில் நிலைத்தாலும்
இராணுவக் கொடுமைகளால்
செத்தழிந்த என் பேரன்
சிரித்தோடி வருவானோ?

செ.குணரத்தினம்-அமிர்தகழி.

**கண்ணீர்**

இரக்கமின்றி மனிதப்
பூவுதிர்த்திப் பிஞ்சுதிர்த்திக்
காயுதிர்த்திக் கனியுதிர்த்தும்
செயல் சகியாக்
கிழம் உதிர்த்தும்
ரத்தக் கண்ணீர்.

வ.முரளீதரன்
களுவாஞ்சிக்குடி.

**அழுகை**

ஆழ்வதற்கு
ஒன்றுமில்லை.
என்னிடம்
அழுகையை
தவிர.

பூ.இதயரெத்தினம்
ஆரையம்பதி-03.

**மலருமா?**

அலறலும், புலம்பலும் அடங்கி,
அனைவரும் உறவினில் நெருங்கி,
விசும்பலை விரட்டிடும் நந்நாள்,
விரைவினில் மலருமா பொன்னாள்?

இஸ்மத் இப்திகார்-ஏறாவூர்-02.

**ஒப்பாரி**

நன்றி கெட்ட புத்திரர்
நடுத் தெருவில் விட்டதால்-இங்கு
ஒண்டுகூடித் திண்ணையில்
ஒப்பாரி நடக்குதோ?

ச.மகாலிங்கம்-வெளிமடை.

**கண்ணீர் அஞ்சலி**

போரினால்
இளமையிலே
உதிர்ந்து விட்ட
மலர்களுக்காய்
மாதா இவளின்
கண்ணீர் அஞ்சலியோ?

கிறேஸ் தங்கராசா-வந்தாறுமூலை.

**மனித அக்கிரமம்**

ஐயோ!
கண்கள் மூடி
கைகள் மறைத்தும்
மனித அக்கிரமம்
மனதில் தெரியுதே!

ஆர்.ராம்குமார்
கண்டி.

## கவிதைப் போட்டி இல-79



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 10.12.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 79
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

## வாசகர் சாலை

சிந்தனையூட்டும் எம் இனிய முரசே! நீ வாரா வாரம் அள்ளித்தரும் அறுசுவை உணவை யார்தான் புசிக்காமல் இருப்பர். அதிலும் குறிப்பாக ரசிகனின் இலக்கிய நயம், மகாபாரதத் தொடர், எக்ஸ்ரே ரிப்போர்ட், பாப்பா முரசு ஆகியன எங்களின் உள்ளத்தை கொள்ளை கொண்டுவிட்டன. முரசே உனக்கு பலகோடி வணக்கங்கள். வாழ்க உமது பணி வளர்க தமிழ்.

திருமதி சந்திராணி
தங்கத்துரை-சவளக்கடை-07.

□□

தினமுரசு வழங்கும் எக்ஸ்ரே ரிப்போர்ட்-நாரதரின் பகுதியை என்னால் பாராட்டாமல் இருக்கமுடியவில்லை. நவ.06-12.94 வெளியான முரசில் 'ஜனாதிபதி 'தேர்தலில் வெற்றிபெற அனுதாப அலை மட்டும் போதாது, ஆளுமையுள்ள தலைவரும் வேண்டும்' என்பதை ஐ.தே.கட்சி உணரும் என்று கூறிய வார்த்தை தற்போது பலித்து விட்டது அல்லவா?

க.லிங்கேஸ்வரன்-
பெரியநீலாவணை-01.

□□

எம் இதயத்தில் மலர்ந்து விட்ட முரசே, நீ சுமந்துவரும் ரசிகனின் கொலை விழும் நேரம், இலக்கிய நயம் ஆகியவை முக்கனி சுவையுடன் எம்மை தித்திக்க வைக்கிறது. முரசே! நீ என்றும் வாசகர்களாகிய எம் நெஞ்சங்களில் நிலைத்து நின்றிட, உனக்கு எம் உளம் கனிந்த வாழ்த்துக்கள்.

செல்விகள் - மோகனா அர்ஜுனன், அனிதா ராஜேந்திரன், எல்.செல்வமணி, எல்.சரோஜாதேவி, எஸ்.ராஜேஸ்வரி, எஸ்.ஜசிந்தா-செல்வன்கள் வி.புண்ணியமூர்த்தி, வி.அருள், வி.பிரேம், ஏ.மனோ, எஸ்.சுவேந்திரன்-இரத்தினபுரி.

□□

அன்பின் முரசே,

இன்று இளம் உள்ளங்களின் இதயத்தில் இடம் பிடித்துவிட்டாய். முத்தமிழையும் சுமந்துவந்து என் கரத்தில் தவழும் இனிய முரசே, உன் சேவை வளர என் வாழ்த்துக்கள் கோடி பல.

தே.கணபதி-புஸ்ஸல்லாவ.



அன்பே வா...
முரசே வா...
முரசு எந்தன் கையில் இருந்தால்.
டேக்கிட் ஈஸி பொலிசி.

சிஹானா.ஏ.குத்தூஸ்-புத்தளம்.

□□

அன்பின் அறுசுவையூட்டும் முரசே!

நீ ஏந்திவரும் விடயங்களோ ஆயிரம். அதில் ஆன்மீகம், மருத்துவம் என்பனவற்றில் இருந்து என் இதயத்தை கொள்ளை கொள்ளும் ரசிகனின் இலக்கியப் பகுதி சுப்பறோ...சுப்பர். அந்த ரசிகனுக்கு எனது ஆயிரம் முத்தங்கள். முரசே, நீ இத்துடன் நில்லாது உலகில் உள்ள ஒவ்வொரு தமிழனின் கரங்களிலும் நீ தவழ வேண்டும். உன் புகழ் பரவ வேண்டும். உன் பணி தொடர வேண்டும் என்று கூறி உனை மனதார வாழ்த்துகிறேன்.

இ.ரவீந்திரன்-சுவிஸ்.

□□

அன்பின் அருமை மிகு முரசே, உனது சகல அம்சங்களும் மிகவும் அருமையானதே. நீ வாரா வாரம் அள்ளிச் சொரியும் அம்சங்கள் அனைத்தும் சிந்தித்து செயல் புரியும் ஆற்றல் மிகுந்ததே. உனக்கு எனது அன்பான வாழ்த்துக்கள் பல.

சி.ஜெயாபரன் (ஜீவா)
மூதூர்.

□□

மை டியர் ஸ்வீட் முரசே!

உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல, உன்னை படிக்காத மனமும் மனதல்ல. பல மைல்களுக்கப்பால் கடல் கடந்து தொழில் புரியும் எங்களைப் போன்ற எத்தனையோ ஆயிரக் கணக்கான இதயங்களை உன் வசப்படுத்தி திக்கெட்டும் தேன் சுவை தரும் இனிய முரசே, நீ தாங்கி வரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. உன் சேவை தொடர எங்களது இனிய வாழ்த்துக்கள் என்றும் உனக்கு உரித்தாவதோடு எங்களையும் உனது பட்டியலில் சேர்த்துக்கொள்வாயாக...

செல்விகள்-மல்லிகா,
கிறேஸ்-குவைட்.

□□

அற்புதங்கள் பல செய்யும் தினமுரசே, உன் பொற்பாதம் பணிகின்றேன் தங்க முரசே, நீ கொண்டுவரும் அனைத்து அம்சங்களும், மகாபாரதமும் அருமை. உனக்கு என் நல்வாழ்த்துக்கள்.

எஸ்.கலைக்குமார்-பதுளை.

□□

அன்பின் முரசே,

உன்னைப் பற்றிய விமர்சனங்களை இரத்தத்தால் எழுத வேண்டும்போல் உள்ளது. ஏனெனில் நீ என் இரத்தத்தில் கலந்துவிட்டாய்.

ச.சஞ்ஜீவ்-களுவாஞ்சிக்குடி.

□□

தித்திக்கும் தேன் முரசே,
தெவிட்டாத தினமுரசே,

நீ வாரா வாரம் தாங்கிவரும் சிறுகதைகள், தேன் கிண்ணம், பாப்பா முரசு, லேடிஸ் ஸ்பெஷல் இவைகளை வாசிப்பதில் வஞ்சி எனக்குத் தணியாத ஆவல்தான். வாரா வாரம் உனக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கின்றேன்.

சித்ரா மாணிக்கம்-மாத்தளை.

www.padippakam.com

# “நாம் விடுதலைக்காக போராடும் மக்கள் இயக்கம்”

# “தமிழீழ தேசிய அபிலாசைகளை நிறைவுசெய்யும் தீர்வே இறுதியானது”

## “சுயாட்சித் திட்டங்களை பரிசீலிக்க தயார்” -எவ்வாறான சுயாட்சி என்று கூறவில்லை!

- அடிப்படை பிரச்சனைகள் பற்றி பேசு முன்பாக உடனடிப் பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும்.
- சந்திரிக்கா அரசு சமாதானம் பற்றிப் பேசிக்கொண்டு இராணுவத்தை பலப்படுத்துகிறது.
- நாம் விடுதலைக்காக போராடும் மக்கள் இயக்கம். சலுகைகளுக்காக கைகட்டி நிற்கும் சாதாரண கூட்டமல்ல.
- சமாதானக் கதவுகளை நாம் மூடவில்லை. அரசு இராணுவத்திற்கு அழுத்தம் கொடுக்க விரும்பவில்லை. அவ்வாறான நிலையில் சமாதான சூழ்நிலை சாத்தியமல்ல.

புலிகள் உருவாக்கியுள்ள தன்னாட்சி கட்டமைப்புக்களை கருத்தில் கொண்டு சுயாட்சித் திட்டங்களை அரசு முன்வைத்தால் பரிசீலிக்கத் தயார் என்று பிரபா கூறியுள்ளார். ஆனால் எவ்வாறான சுயாட்சித் திட்டம் என்று எதனையும் அவர் குறிப்பிடவில்லை.

புலிகளின் மாவீரர் தினத்தை முன்னிட்டு புலிகளின் அமைப்பின் 'தலைவர் வே. பிரபாகரன் 26.11.94 இரவு 11.45க்கு 'புலிகளின் குரல்' வானொலியில் உரையாற்றினார்.

அவரது பேச்சின் பிரதான பகுதிகள் கீழே தரப்படுகின்றன:

இன்றைய தினத்தை விடுதலைத் திருநாளாக- எமது தேசத்தின் திருநாளாக- எமது போராட்டத்தின் எழுச்சி தினமாக நாம் கொண்டாடுகிறோம். எமது தேசம் விடுதலை பெற வேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக தன்னாட்சி உரிமையுடன் தன்மானத்துடன் வாழ வேண்டும் என்ற உயரிய இலட்சியத்திற்காக, தமது இன்னுயிர்களை அர்ப்பணம் செய்த, எம்முயிர் போராளிகளை, எமது இதயக் கோயில்களில் பூசிக்கும் புனித நாள்.

விடுதலைக்காக எமது தேசம் மதிப்பிட முடியாத, பெருவிலையை கொடுத்திருக்கிறது. விடுதலைக்காக இந்த மண்ணில் இரத்தாறு ஓடியிருக்கிறது. விடுதலைக்காக இந்த பூமி ரணகளமாக மாறியிருக்கிறது. விடுதலைக்காக எமது வீரர்கள் இன்றும் செத்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்த நிலத்தில் புதையுண்டு இருக்கும் ஆயிரம், ஆயிரம் சமாதி கற்களும் விடுதலையை குறியாக கோரி நிற்கின்றன. வீதிகளில், சந்துகளில், சுவர்களில் நாம் சந்திக்கும் மாவீரர்கள் திருவுருவங்களும் விடுதலைச் சாட்சிகளாகவே எமக்குக் காட்சி தருகின்றன.

### ஆட்சி மாற்றம்

சிறிலங்காவில் பெரியதொரு அரசியல் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. புதிய ஆணையுடன், புதிய அணுகுமுறையுடன் புதிய அரசு ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது. சந்திரிகா அரசு சமாதானக் கரத்தை நீட்டியபொழுது நட்புறவுடன் நாம் அதைப் பற்றிக்கொண்டோம். நிபந்தனைகள் எதையும் விதிக்காமல், நிர்ப்பந்தங்கள் போடாது நாம் பேச்சுவார்த்தையில் பங்குபற்றினோம். முதல் கட்டமாக தொடங்கிய இந்த பேச்சுவார்த்தைகளின்போது நாம் எமது மக்களின் நலன்களுக்கே முதன்மை கொடுத்தோம்.

தமிழர் பிரச்சினைக்கு சமாதான வழி மூலம் தீர்வுகாண்பதை சிங்கள இராணுவம் விரும்புவதாக தெரியவில்லை. இராணுவத்தின் விட்டுக்கொடாத கடும் போக்கும், போர் நடவடிக்கைகளும், யுத்த தயாரிப்பு வேலைகளும் இந்த உண்மையையே எடுத்துக்காட்டுகின்றன. சந்திரிகா அரசும் இராணுவ அணுகுமுறையை கைவிட்டதாக தெரியவில்லை. இராணுவத்தின் இறுக்கமான நிலைப்பாட்டுக்கு மாறாக செயற்படவும் அரசு விரும்பவில்லை. இராணுவத்திற்கு எவ்வித அழுத்தம் கொடுப்பதற்கும் அரசு தயாராக இல்லை. இப்படியானதொரு நிலைமையில் சமாதான சூழ்நிலையோ, இயல்பு நிலையோ ஏற்படுவது இலகுவான காரியமல்ல.

எனவே அரசுக்கு சமாதான பாதையில் உண்மையான-நேர்மையான அக்கறை இருக்குமானால் ஆயுதப்படைகளும் அந்த வழிக்கு இட்டுச் செல்லப்படுவதே சுலபமாக இருக்க முடியும். போர் நடவடிக் கைகளை நிறுத்துவது, பொருளாதாரத் தடைகளை நீக்குவதும், போக்குவரத்துப் பாதையை திறப்பதும், கடல் வலய தடையை நீக்குவதும், அகதிகளை மீளக் குடியமர்த்து வதும், எல்லாமே ஆயுத படைகளின் நிலைப்பாட்டிலேயே தங்கியிருக்கின்றன.

### முதல் கட்டம்

நாம் சமாதானத்தின் பாதைக்கு இடையூறாக நிற்கவில்லை. நாம் சமாதானத்தின் கதவுகளை சாத்திவிடவும் இல்லை. நாம் சமாதான பேச்சுகளுக்கு தயாராகவே இருக்கிறோம். பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடருமானால் நாம் அதில் பங்குகொள்வோம். எமது மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சனைகளுக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டுமென்பதையே நாம் விரும்புகிறோம். எமது மக்களின் நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் பெறுவதனால் சந்திரிகா அரசு முதல் கட்டமாக எமது மக்களின் அவசரப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு, தமிழர் தாயகத்தில் சமாதான சூழலையும், இயல்பு நிலையையும் தோற்றுவிக்கவேண்டும்.

தமிழர்களின் தேசிய போராட்டம் 40 ஆண்டு காலத்திற்கு மேலான, நீண்ட சிக்கலான வரலாற்று சூழல்களால் உருவாக்கப்பட்டு பெரு வளர்ச்சி கண்டிருக்கின்றனது. இன்றைய அதன் பரிமாணம் வேறு. வடிவம் வேறு. நீண்ட காலமாக இரத்தம் சிந்திப் போராடிய எமது இயக்கம், இப்போது தமிழ்ப் பகுதிகளில் தன்னாட்சி கட்டமைப்புகளை நிறுவும் அளவுக்கு போராட்டத்தை உயர்ந்தபடி நிலைக்கு எடுத்துச் சென்றிருக்கிறது. இன்று நாம் மிகவும் பலமான- உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். இவ்வலுவான அத்திவாரத்தை இட்டுத் தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

நாம் ஒரு பலமான சக்தியாக, வலுவான தளத்தில் நிற்பதால்தான் சிங்கள அரசு எம்முடன் பேச்சுக்களை வளர்க்க விரும்புகின்றது. சமாதான வழியில் தமிழரின் தேசிய பிரச்சனைக்கு தீர்வுகாண, சந்திரிகா அரசு முயற்சிகளை எடுக்குமானால், நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். தமிழர்களின் பிரச்சனைக்கு உருப்படியான சுயாட்சித் தீர்வு திட்டங்கள் முன்வைக்கப்படுமானால் நாம் அதனை பரிசீலனை செய்ய தயாராக இருக்கிறோம்.

எனது அன்பார்ந்த தமிழ் மக்களே!

நாம் விடுதலைக்காக போராடும் ஒரு மக்கள் இயக்கம். நாம் சலுகைகளுக்காக கை கட்டி நிற்கும் ஒரு சாதாரண கூட்டமல்ல.

### தேசிய அபிலாஷைகள்

எமது தாயக மண்ணில், வரலாற்று ரீதியாக எமக்கே உரித்தான எமது சொந்தமான மண்ணில் நாம் கௌரவமாகவும், நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் வாழ வேண்டும் என்பதே எமது குறிக்கோள். இதுவே எமது தேசத்தின் அபிலாசை. இந்த தேசிய அபிலாசையை நிறைவு செய்யும் ஒரு தீர்வையே நாம் வேண்டி நிற்கிறோம். அப்படியான தீர்வே நிரந்தர தீர்வாக அமையும். அந்த தீர்வே நிரந்தரமான சமாதானத்தை தோற்றுவிக்கும். அந்த தீர்வு எமக்கு கிட்டும்வரை நாம் ஒன்றுபட்ட மக்களாக, ஒன்று திரண்ட தேசமாக தளராத உறுதியுடன் இருக்க வேண்டும். இன்றைய தேசிய நாளில் எமது தேசத்தின் விடுதலைக்காக மரணித்த, எமது மாவீரர்களை நாம் நெஞ்சில் நிறுத்தி நினைவு கூரும் இந்த புனித நாளில், நாம் எமது குறிக்கோளை உறுதியாக பற்றிக் கொள்வோமென உறுதி மொழி செய்வோம்.

சுதந்திரத்தின் ஆலயங்களான மாவீரர் துயிலும் இல்லங்களில் தீபத்தின் கூடரொளிகளை நாம் ஏற்றி வைக்கும்போது அந்த அற்புதமானவர்களின் ஆன்ம அபிலாசைக்கு நாம் செலுத்தும் காணிக்கையாக இந்த உறுதி மொழியை நாம் செய்து கொள்வோமாக.

-புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்-

## “கட்டியெழுப்பப்படவுள்ள தமிழீழத்தில் கம்பியூட்டர் யுகம் வளரவேண்டும்”

(நமது நிருபர்)

யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பின் புகைப்படப் பிரிவு, தொழில் நுட்பப் பிரிவு கலைஞர்கள், தொழிநுட்ப உதவியாளர்கள் ஆகியோரை சமீபத்தில் (22.11.94) பிரபாகரன் சந்தித்து உரையாடினார்.

அப்போது பிரபாகரன் கூறியதாவது:

“கட்டியெழுப்பப்படவுள்ள தமிழீழத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் ஆயுதத்தை மட்டும் நம்பியிருக்கக்கூடாது. பல துறைகளிலும் நாம் வளரவேண்டும். எதிர்காலத்தில் எலக்ரோனிக் கம்யூட்டர் யுகம் வரப்போகின்றது. அதில் நாம் எவ்வளவு வேகமாக வளர்கிறோமோ அதன் மூலம்தான் மாற்றத்தை அடைவோம். தமிழீழத்தில் எடுக்கப்படும் திரைப்படங்களில் தனியே போராளிகளை மட்டும் காண்பிக்காது, இந்தப் போராட்டத்தில் மக்கள் படும் துன்பங்களையும் காண்பிக்க வேண்டும்.

“திருப்தியடைந்த மனிதர்களாக இருப்பது வளர்ச்சிக்கு உரியதல்ல. திருப்தியடையாத மனிதர்களாக இருந்தால்தான் தொடர்ந்து நாம் முயற்சி செய்து கொண்டிருப்போம்.”

இவ்வாறு வே. பிரபாகரன் தெரிவித்திருக்கிறார்.

## புலிகளின் அணிகள் ஊர்வலம்!
## ‘சமாதான பேச்சுக்கள் பிரசார உத்திகளாம்!’

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் புலிகளின் மாவீரர் தின பொதுக்கூட்டம் 27.11.94 அன்று நடைபெற்றது.

புலிகளின் இராணுவ அணி, மகளிர் அணி, கடற்புலிகள் அணி, காவல்துறை, பாடசாலை மாணவர் அணிகள் யாழ்ப்பாணம் பலாலி வீதி இலுப்பையடிச் சந்தியிலிருந்து யாழ் பல்கலைக்கழகம் வரை அணிவகுத்து ஊர்வலமாகச் சென்றன.

பொதுக்கூட்டத்தில் பிரபா கலந்து கொள்ளவில்லை. தமிழீழ அரசியல் பொறுப்பாளர் தமிழ் செல்வன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

“எமது தலைமையின் காலத்தில் எமது உரிமைகளைப் பெற்றுவிடவேண்டும்.

“தமிழ் மக்களுக்காக உரிமைகளை கொடுக்கும்படி சிங்கள மக்கள் சந்திரிகா அரசுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளனர். ஜனாதிபதி தேர்தலின்பின் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட சந்திரிகா மாறிவிட்டார். நாம் பல பக்கங்களையும் ஆராய்ந்து போராட்டத்தை முன்னெடுப்போம்.

நம்மை இராணுவரீதியாக அச்சுறுத்தி தீர்வை முன்வைக்க சந்திரிகா அரசு முயல்கிறது. சமாதானம் பற்றி சந்திரிக்கா விடுத்த அறிவிப்புக்கள் தேர்தலுக்கான பிரசார வித்தைகளாகவுள்ளன. எங்களுடைய கடந்தகால வரலாறுகளை எண்ணிப்பார்க்க வேண்டும். கடந்தகால வரலாறுகள், பாடங்களிலிருந்து உருவானவரே எமது தலைவர். நாம் விழிப்புடனும் உறுதியுடனும் இருக்க வேண்டும்” என்று 'தமிழீழ அரசியல் பொறுப்பாளர்' தமிழ்செல்வன் கூறினார். வே.பாலகுமாரன், இம்மானுவேல் அடிகளார், பா. நடேசன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

## பனம்பொருள் சபையில் பல இலட்சம் மோசடி
## ஊழல் குற்றச்சாட்டை விசாரிக்க கூட்டணி தடை!

(நமது நிருபர்)

பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவராக இருந்து ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் காரணமாக புதிய அரசால் வீட்டுக்கு அனுப்பப்பட்டவர் கே.நடராசா.

ஊழல் குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணைகளை தடுக்கவும், முக்கிய ஆவணங்கள், மற்றும் சாட்சிகளை மறைக்கவும், தடுக்கவும் பல முயற்சிகளில் ஈடுபட்ட இவர் மீண்டும் பதவிக்கு வர முயலுகிறார்.

அவரது முயற்சிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் சிலர் ஆதரவாக செயற்பட்டு வருகின்றனர் என்று தெரிகிறது.

13 வருடகாலமாக பதவியில் இருந்து ருசி கண்ட ஒருவருக்கு பதிலாக வேறு ஒரு தமிழரை கூட்டணியினர் சிபாரிசு செய்யலாம் அல்லவா?

ஆனால், பின்னணியில் பல சுவாரசியமான சங்கதிகள் இருக்கின்றன. இவைபற்றி வரும் வாரம் முரசு விபரமாக தெரிவிக்கும்.

திரு.வாசுதேவ நாணயக்காரா பா.உ. அவர்கள் ஜனாதிபதிக்கு கடந்த 24.11.94 அனுப்பியுள்ள கடிதம் கீழே தரப்படுகிறது.

ஒரு முக்கிய குறிப்பு:

திரு.வாசுதேவ நாணயக்காராவை சந்தித்து அவரை திருப்தி செய்யவும் முயற்சிகள் நடந்தன. பனப்பொருள் அபிவிருத்தி சபைக்கு தலைவராக நாணயமான தமிழர் நியமிக்கப்பட்டால் நான் ஆதரிப்பேன். கே.நடராசா தமிழர்தான் ஆனால் நாணயமான தமிழரல்ல என்று அவர் நேரடியாகவே தெரிவித்து விட்டாராம்.

இனி-வாசுதேவ நாணயக்காரா ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம்:

**மேன்மை தாங்கிய ஜனாதிபதி அவர்களே,**

*பனம் பொருள் அபிவிருத்தி சபையின் முன்னாள் தலைவரான திரு.கே.நடராஜா, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் நல்லாதரவுடன் மீண்டும் அந்தச் சபையின் தலைவராக வருவதற்கு பெரு முயற்சி எடுத்து வருவதாக நான் அறிகிறேன்.*

*அந்த அமைப்பின் தலைவராக 13 ஆண்டுகள் சேவைபுரிந்த அவரைப் பற்றி ஏராளமான முறைப்பாடுகள் எனக்குக் கிடைத்துள்ளன. நிர்வாகச் சீர்கேடு, ஒழுங்கற்ற நிதி செலவினங்கள், மோசடி மற்றும் ஊழல் போன்ற பல தவறுகளுக்குரிய அவர்மீதான பல குற்றச்சாட்டுக்கள் கிடைத்துள்ளன.*

*பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள லஞ்ச ஊழல் விசாரணைக் குழுவினால் இவருடைய கடந்தகால நடவடிக்கைகள் விசாரிக்கப்படவேண்டும்.*

*குற்றச் சாட்டுகள் சிலவற்றை இங்கே தருகிறேன்:*

*1. ஊழியர்களின் சேமலாப நிதிக்காக வசூலிக்கப்பட்ட தொகை மத்திய வங்கிக்குச் செலுத்தப்படவில்லை. 700,000.00 ரூபாய் வரை இதுவரை செலுத்தப்படவில்லை. இந்நிதி தொடர்பாக திரு.நடராஜாமீதான வழக்கொன்று அம்பாந்தோட்டை தொழில் நீதி மன்றத்தில் நடைபெற்று வருகிறது. சேமலாப நிதி வழங்கப்படாமை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் பணி புரிந்த சில செயலதிகாரிகள் பதவியை ராஜினாமாச் செய்துள்ளனர்.*

*2. கணக்கு வழக்குத் தொடர்பான 1992-93க்குரிய முக்கிய ஆவணங்கள் காணப்படவில்லை.*

*3. கொடுப்பனவுகள் தொடர்பான சகல காசோலைகளையும் அத்தாட்சிப்படுத்தி, இசைவினை அளித்து உறுதிப்படுத்தி ஒப்பமிடும் சகலவற்றையும் அவரே செய்து வந்தார்.*

*4. யாழ் மாவட்டத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கான சம்பளத்துக்கென 1991 மார்ச் மாதம் ரூ 300,000.00க்கான பணம் கொழும்பு வங்கியில் பெறப்பட்டது. இதில் யாழ் அரசாங்க அதிபர் மூலமாக ரூ.200,000.00 மட்டுமே அனுப்பி வைக்கப் பட்டது. எஞ்சிய தொகை இதுவரை அனுப்பி வைக்கப்படவே இல்லை.*

*5. கணக்காய்வு தொடர்பான அறிக்கைகளோ அவை தொடர்பான முறைப்பாடுகளோ சபை உறுப்பினர்களுக்கு என்றுமே சமர்ப்பிக்கப்பட்டதில்லை.*

*இத்தகைய மோசடிகள் அடங்கிய ஆவணம் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஊழல் தொடர்பான இவர் மீண்டும் நியமனம் பெறுவதானால் இதனை நான் பாராளுமன்றத்தில் சமர்பிக்க வேண்டியிருக்கும்.*

இவ்வாறு திரு. வாசுதேவ நாணயக்கார பா.உ. தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## இனப்பிரச்சனைத் தீர்வை இந்தியா விரும்பவில்லை
## புலிகளின் அதிகாரபூர்வ ஏடு கண்டனம்!

(வர்மா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' நவம்பர் மாத இதழ் யாழ்ப்பாணத்தில் வெளிவந்துவிட்டது.

அதன் முன்பக்க செய்தியில் இந்தியாமீது கண்டனம் தொடுக்கப்பட்டிருக்கிறது.

“தமிழர்களின் இனப்பிரச்சனை நிரந்தரமாக தீர்க்கப்படுவதையோ, சிறிலங்காவின் புதிய அரசுக்கும் புலிகளுக்கும் இடையே நல்லெண்ணம் ஏற்படுவதையோ இந்தியா விரும்பவில்லை.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதை முற்றாக விரும்பாத இந்திய அரசு அதனைத் தடுக்க மறைமுகமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

காலம், காலமாக இந்திய ஆளும் வர்க்கத்திடம் காணப்படும் தமிழ் தேசிய எதிர்ப்புணர்வும், தமிழீழ தேசிய உருவாக்கத்திற்கு காரணமாக இருந்துவரும் விடுதலைப் புலிகளின் வளர்ச்சியுமே இந்திய அரசின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு காரணமாகும்.

இந்திய அரசு சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிக்காவை இந்தியாவுக்கு அழைத்து புலிகளுடனான பேச்சுவார்த்தை தொடர்பாக சில அழுத்தங்களை கொடுக்கலாமென சந்தேகிக்க இடமுள்ளது.

கடந்தகால ஆட்சியாளர்கள் இந்தியாவின் அநீதியான தலையீட்டுக்கு வழி வகுத்ததால் தமிழ் மக்கள் பெரும் துயரங்களைச் சந்தித்தனர்”

இவ்வாறு 'விடுதலைப் புலிகள்' இதழில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## “தமிழீழ உருவாக்கம் நிச்சயம் எந்த சக்தியாலும் தடுக்க முடியாது!”

(வர்மா)

மாவீரர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழீழ தேசத்தின் உருவாக்கத்தை உலகில் எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், “மாவீரர்களது வீரம், உதிரம் இவற்றால் நிமிர்ந்து நிற்கிறது தமிழீழம். இங்கு ஒரு தேசம் உருவாகிறது. நவம்பர் 27ம் திகதி நமது எதிர்கால சந்ததியின் சுதந்திரத்தை, உறுதிசெய்யும் நாள்.

தமிழீழ மக்கள் சகலரும் இணைந்து எழுச்சியுடன் முன்னெடுக்கும் தமிழீழ தேசிய நாள்.”

என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## கல்விக்கு உதவ இலவச சேவை!

(திருமலை)


திருகோணமலை மட்டக்களப்பு, மற்றும் யாழ்ப்பாணம் தீவுப் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு க.பொ.த சாதாரண பரீட்சைக்கான மாதிரி வினாத் தாள்களை சமூக சேவை நிறுவனம் ஒன்று வழங்கியுள்ளது. வடக்கு-கிழக்கு பொருளாதார அபிவிருத்தி சங்கம் (நீட்ஸ்) சுமார் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் இந்த இலவச உதவியை வழங்கியிருக்கிறது.

யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாணவர்களின் கல்விக்கு உதவும் வகையில் கல்விச் சேவை ஒன்றையும், கல்விச் சஞ்சிகை ஒன்றையும் நடத்தப் போவதாகவும் நீட்ஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# “இனவாதிகளே குண்டு வெடிப்புக்களின் இலக்குகள்!”

# கொழும்பு குண்டு வெடிப்புக்கள் குறித்து: பாலசிங்கம் விபரிப்பு!!



**காமினி திசநாயக்கா கொலை தொடர்பாக புலிகளின் மௌனம் பற்றி 'முரசு' மட்டுமே முன்னர் சந்தேகம் வெளியிட்டிருந்தது. புலிகளால் மறுப்பறிக்கையோ, கண்டனமோ தெரிவிக்கப்படாமை பற்றியும் முரசு சுட்டிக்காட்டியிருந்தது.**

**இப்போது புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கத்தின் பேச்சு, காமினி கொலையை மறைமுகமாக நியாயப்படுத்துவதாக அமைந்துள்ளது.**

**பேச்சுவார்த்தை நேரத்தில் குண்டுவெடிப்பு இடம் பெற்றதால் அது பேச்சை விரும்பாதோர் முயற்சியாக இருக்கலாமோ என்றெல்லாம் சில விமர்சகர்கள் சந்தேகம் எழுப்பினார்கள்.**

**ஆனால், பாலசிங்கம் மிகத் தெளிவாக பேச்சுக்கும் குண்டு வெடிப்பிற்கும் தொடர்பில்லை என்று வாதம் செய்கிறார். குண்டு வெடிப்பால் ஏற்பட்ட இலாபங்களை சுட்டிக்காட்டியிருக்கிறார். நேரடியாக ஒத்துக்கொள்ளாவிட்டாலும் குண்டு வெடிப்புக்கள் ஓங்கிப் புகழப்பட்டுள்ளன என்பதுதான் கவனிக்கப்படவேண்டிய விடயம்.**

**திரு.அன்ரன் பாலசிங்கத்தின் உரையில் சில பகுதிகள் ஏற்கனவே ஏனைய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. வெளிவராதவையும், முக்கியமான பகுதிகளும் இங்கே தரப்படுகின்றன.**

**பேச்சுவார்த்தை தொடர்பான புலிகளது நிலைப்பாடும் திரு.அன்ரன் பாலசிங்கத்தால் விளக்கப்பட்டிருக்கிறது.**

**20.11.94 அன்று யாழ்ப்பாணத்தில் புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பான திரு.அன்ரன் பாலசிங்கத்தின் உரையின் பதிவு நாடாவில் இருந்து இது தொகுக்கப்பட்டுள்ளது.**

**ஆ—ர்.**

**என் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!**

எமது இயக்கத்தின் அதிகாரபூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' வானொலி இன்று நாலாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கிறது. இதனை முன்னிட்டு தலைவர் அவர்கள் கூட ஒரு வாழ்த்துச்செய்தியை இங்கு அனுப்பியிருந்தார். அதில் அவர் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிடுகின்றார். எமது வானொலி உண்மையின் குரலாக-சத்தியத்தின் குரலாக மக்களுக்கு உண்மையை எடுத்து விளக்குமென்று தலைவர் (பிரபாகரன்) வலியுறுத்தியுள்ளார்.

உண்மை என்றும் நிலைத்து நிற்கும். என்ன நடக்கிறது என்பதை மக்களிடம் சொல்லி மக்களிடையே நல்லாசியை நம்பிக்கையைப் பெற்று மக்கள் தொடர்பு சாதனமாக விளங்கும் வானொலி, மக்கள் மத்தியில் உண்மையைப் பரப்ப வேண்டும்.

இங்கு இன்றைய அரசியல் நிலை தொடர்பான விளக்கத்தைக் கூறலாம் என்று எண்ணுகிறேன்.

### ஹெலி இறங்கினால் கொஞ்சுகிறார்கள்

இன்றைய அரசியல் சூழ்நிலை மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறது. சந்திரிரிகா அம்மையார் பிரதமராக வந்தபோது காட்டிய ஆர்வம் இப்போது இல்லை. இது உங்களுக்குத் தெரியுமா? இப்போது எல்லாமே தலைகீழாக நடக்கிறது. இதனால் மக்கள் மத்தியில் ஒரு குழப்பம். அரசியலே ஒரு அவசர நாடகமாக மாறியிருக்கிறது.

**ஹெலிக்கொப்டர் ஆகாயத்தில் இருந்து சுடும்பொழுது எமது மக்கள் ஓடுகிறார்கள்- ஒலமிடுகிறார்கள். ஆனால் தரையில் இறங்கும்போது கட்டிப்பிடித்து ஹெலிக்கொப்டரைக் கொஞ்சுகிறார்கள்.**

பிரபாகரன் நேசக்கரம் நீட்டுகிறார். சந்திரிகா அம்மையார் யாழ்ப்பாணம் வந்து பிரபாகரனைச் சந்திக்கப் போகிறார் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இப்போது சந்திரிகா அம்மையார் இந்தியாவுக்குப் போகப்போகிறேன் என்று சொல்லுகிறார். இப்படியாக முன்னுக்குப்பின் முரணான முறையிலே அபசகுனமான முறையிலே ஒரு அரசியல் சூழ்நிலை எழுந்திருக்கிறது.

உண்மையில் இந்த அரசியலில் என்ன நடக்கிறது? என்ன நடக்கப் போகிறது? ஏதாவது உருப்படியாக நடக்குமா? இந்தப் பேச்சுவார்த்தை இனித் தொடருமா? இனிவரும் பேச்சுவார்த்தையில் சமாதானம் ஏற்படுமா? போன்ற கேள்விகள் மக்கள் மத்தியில் இருக்கின்றன.

சந்திரிகா மிகவும் ஆர்வமாகத்தான் இருந்தார். தமிழரின் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும் என்று விரும்பினார். கொழும்பில் ஒரு குண்டு வெடித்தது. அந்தக் குண்டு வெடிப்போடு அவரது ஆர்வமெல்லாம் போய்விட்டது. அவர் கொஞ்சம் பதட்டப்பட்டுப் போய் விட்டார்.

## குண்டு வெடிப்புக்கள் பற்றி

> “இந்தப் பிறப்பில் செய்த பாவங்களுக்கு இந்த உலகிலேயே தண்டனை கிடைக்கிறது. அடுத்த பிறப்பென்ற பேச்சில்லாமல் போய்ச் சேருகிறார்கள்.”

அதனால் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிப் போய்விட்டார் என்று சிலர் கூறினார்கள்.

### குண்டு வெடிப்புக்கள் வித்தியாச பரிமாணம்

கொழும்பில் குண்டுகள் வெடித்தது தெரிந்த விடயம். அதனை யார் செய்தார்கள் என்பது பிரச்சனை இல்லை. இப்படியான குண்டுகள் ஏன் வெடிக்கப்படுகின்றன? அதில் பலியானவர்கள் எப்படிப்பட்ட நபர்கள்? என்பதைத் தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய இனப் படுகொலைகளைத் திட்டமிட்டு நடத்தியவர்கள்- பெரிய இரத்தக் கடலை இங்கு உருவாக்கியவர்கள்- அந்த இரத்தக் கறை படிந்தவர்கள்தான் அந்தக் குண்டு வெடிப்புக்களுக்குப் பலியானார்கள் என்பது மக்களுக்குத் தெரியும். இது ஒரு வித்தியாசமான பரிமாணத்தை இங்கு ஏற்படுத்தியுள்ளது.

சிங்களவர்களுக்கும் தமிழர்களைப் போல தான் கருமவினையிலே நம்பிக்கை இருக்கிறது. இந்தப் பிறப்பிலே செய்த பாவம் முழுவதும் அடுத்த பிறப்பிலே போய் உத்தரிக்க வேண்டும். ஆனால் இங்கு, இப்போது என்ன நடக்கிறது என்றால் இந்த உலகத்திலே செய்த அநியாயங்களுக்கும், பாவங்களுக்கும் இந்தப் பிறப்பிலேயே- இப்போதே கருமவினை போக்கப்படுகின்றது.

கருமவினை செய்தவர்கள் அடுத்த பிறப்பென்ற பேச்சில்லாமல் போய்ச் சேர்ந்தார்கள். இது அவர்கள் செய்த பாவத்திற்கு நியாயமான தண்டனை. இதை யார் செய்தாரோ எனக்குத் தெரியாது.

ஆனால் சந்திரிகா அம்மையார் இதை யிட்டுக் கலங்கத் தேவையில்லை. ஏதோ ஒரு விதத்தில் இந்தக் குண்டு வெடிப்பு அவருக்கு நன்மையாக அமைந்திருக்கிறது.

### தொண்டாவின் பாய்ச்சல்

ஏனென்றால், குண்டு வெடிப்புக்குச் சில தினங்களுக்கு முன்னர் தொண்டமான் போன்றவர்கள் வெங்காயம் போல கொப்பு வளையிலே தொங்கிக்கொண்டிருந்தார்கள். அந்தப் பக்கம் பாய்வோமா? இந்தப் பக்கம் பாய்வோமா? என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். குண்டு வெடிப்போடு அவர் சந்திரிகாவின் பக்கம் பாய்ந்துவிட்டார்.

ஆகவே, இந்தக் குண்டுவெடிப்பால் ஒரு பெரும்பான்மைப் பலத்தோடு சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வந்திருக்கிறார். இது ஒரு நல்ல காரியம். அது போகட்டும். குண்டு வெடிப்புக்கும், பேச்சுவார்த்தைக்கும் சம்பந்தமில்லை. பேச்சுவார்த்தை என்பது குண்டு வெடிப்புக்கு முன்னர் நடந்தது. ஒழுங்கான முறையிலே நடந்தது. இங்கு வந்த சிங்கள அரசுப் பிரதிநிதிகளை நாம் வரவேற்று நட்புறவுடன், நல்லெண்ணத்துடன் நடத்தினோம். இந்தப் பேச்சுக்களை எமது இயக்கம் ஒத்தி வைக்கவில்லை. அவர்கள்தான் ஒத்திப் போட்டார்கள்.

இப்போது பேச்சுக்களை மீண்டும் தொடரலாம். குண்டு வெடித்துப் பல காலம் ஆகிவிட்டது. சர்வ அதிகாரங்களுடன் சந்திரிகா ஆட்சிக்கு வந்துள்ளார். நல்ல விசயம். பேச்சுவார்த்தையை இன்னும் அவர் கைவிடவில்லை. விடுதலைப் புலிகளுடன் பேசப்போகின்றார். ஆனால் வெகு அவதானமாக நுட்பமாக மெல்ல மெல்லக் காலடி எடுத்து வைத்து காய்களை நகர்த்த அரசாங்கம் விரும்புகின்றது. எங்களது சமாதானக் கதவு எப்போதும் திறந்திருக்கும். பேச்சுவார்த்தை நடத்தலாம்.

### முட்டுக்கட்டை

ஆனால் இதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. இந்தப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கு முட்டுக்கட்டையாக ஒரு சக்தி இருக்கிறது. அந்த சக்திதான் சிறீலங்கா ஆயுதப் படைகள்.

முன்பு நாங்கள் இங்கு பேச்சுவார்த்தையை நடத்தியபோது மூன்று விசயங்களை வலியுறுத்தினோம். போக்குவரத்துப் பாதையைத் திறக்க வேண்டும், எமது மக்கள் நீண்டகால யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சமூக, பொருளாதாரப் பிரச்சனைகளை எமது மக்கள் சந்தித்துள்ளார்கள். ஆகவே முற்றுமுழுதான பொருளாதாரத் தடை நீக்கம் வேண்டும் என்று வலியுறுத்தினோம்.

சந்திரிகா இதற்கு விரும்பலாம். ஆனால் சிவபெருமான் விரும்பினாலும் பூசாரி விட்டுக்கொடுக்க மாட்டான் என்பது போல இராணுவம் குறுக்கே நிற்கிறது.

சென்ற முறை பேச்சுவார்த்தையின் போது எங்களுக்குச் சொல்லப்பட்டது என்னவென்றால், “ஜனாதிபதியிடம்தான் சகல அதிகாரங்களும் இருக்கிறது. அவர்தான் முப்படைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சர். அவர் யு.என்.பியைச் சேர்ந்தவர். அவர் இப்படியான விடயங்களுக்கு விடமாட்டார். எங்களுக்கு முழு அதிகாரங்களும் வரட்டும், நாங்கள் உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவோம்” என்று சொன்னார்கள். இப் பொழுது அந்த அதிகாரம் கிடைக்கப் பெற்றுவிட்டது. அந்த அதிகாரம் மட்டுமல்ல மக்களிடமிருந்து ஒரு மனுவும் கிடைக்கப் பெற்றுள்ளது. அதாவது தமிழரின் பிரச்சனையை சமாதான வழியில் தீர்த்து வைப்பதற்கான பெரும்பான்மைச் சிங்களவரின் ஆணை, மனு இந்த அரசிற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எங்களுக்குக் கிடைத்

## காமினி கொலை பற்றி

> “பேச்சுவார்த்தைக்கும் அதற்கும் தொடர்பில்லை. குண்டு வெடிப்பால் தொண்டா சந்திரிகா பக்கம் பாய்ந்துவிட்டார். பெரும்பான்மைப் பலமும் கிடைத்தது. இது நல்ல காரியம்.”

துள்ள தகவல்களின்படி இராணுவத் தலைமை இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு முட்டுக்கட்டையாக உள்ளது. ஒரு யுத்த நிறுத்தத்தை ஏற்கனவே தலைவர் பிரபாகரன் சொன்னதுபோல அந்த நேரத்திலேயே கடைப்பிடித்திருந்தால் பல பிரச்சனைகளை, வன்முறைச் சம்பவங்களைத் தவிர்த்திருக்கலாம்.

யுத்த நிறுத்தம் என்று அறிக்கை விடுவதில் ஒரு அர்த்தமும் கிடையாது. சிறிலங்கா இராணுவம் அதனைக் கட்டுப்பாடான முறையிலே பேண வேண்டும்.

ஒரு அங்குலமும் விட்டுவிலக மாட்டோம் என்னும் இராணுவ நிலைப்பாடு பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையாகவே இருக்கும்.

தலைவர் பிரபாகரன், அவர்கள் ஒரு வார காலம் யுத்த நிறுத்தம் பிரகடனம் செய்தார். இதை நாங்கள் சும்மா செய்யவில்லை. சிறீலங்கா ஜனாதிபதியாக சந்திரிகா அம்மையார் பதவியேற்றதைத் தொடர்ந்து நல்லெண்ண சமிக்ஞையாகத் தான் செய்தோம்.

### ஏன் தெரிவிக்கவில்லை?

சிலபேர் கேட்கலாம், போர் நிறுத்தம் பற்றி அரசுக்கு ஏன் தெரிவிக்கவில்லை என்று.

போர் நிறுத்தம் பற்றி முதன் முதல் அரசாங்கத்திற்குத்தான் தெரியவந்தது. நாங்கள் போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்து மக்களுக்கு அதனைத் தெரிவிக்க முன்பு சிறீலங்கா புலனாய்வுப் பிரிவு தான் போர் நிறுத்தத்தைத் தெரியப்படுத்தியது. பிரபாகரன் தனது குரலால் அதனைத் தெரிவித்ததாகவும் சிறீலங்கா உளவுப் பிரிவு தெரிவித்தது. இதனை அரசாங்கத்தின் பிரசார சாதனங்கள் முக்கியத்துவம் கொடுத்து ஒலி,ஒளி பரப்பியிருந்தன. இதன் பிறகு நாங்கள் உத்தியோகபூர்வமாக எழுதத் தேவையில்லை.

ஆனால் அரசாங்கம் பேசாமல் இருந்தது. பேசாமல் இருந்தாலும் பரவாயில்லை. கடற்படை கரையோரமாகத் தாக்குதலை நடத்தியது. விமானப்படை ஹெலிக்கொப்டரில் வந்து தாக்கியது. எல்லாவற்றையும்விட எமது தளபதி லெப்டினன்ட் கேர்ணல் அமுதனைப் பதுங்கியிருந்து தாக்கி அவரது தலையையும் வெட்டி எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள்.

இங்கிருந்து பிரபாகரன் நேசக் கரத்தை நீட்டுகிறார்.

அவர்கள் கழுத்தை வெட்டி எடுத்துக் கொண்டு போகிறார்கள். இவ்வாறான நிலையில் நாம் எவ்வாறு சமாதான சமிக்ஞையைக் காட்ட முடியும்?

### செய்ய வேண்டியவை:

இவ்வாறு கேள்வி எழுப்பிய பாலசிங்கம், பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்குப் பின்வரும் அடிப்படை விடயங்களை வலியுறுத்தியுள்ளார்:

1. இராணுவத்திலிருந்து சமாதானத்திற்கு விரோதமானவர்கள் விலக்கப்படவேண்டும்.
2. பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்படவேண்டும்.
3. மக்கள் சுதந்திரமாகப் பயணம் செய்யப்படக்கூடிய பாதை திறக்கப் படவேண்டும்.

அவ்வாறான சமாதானச் சூழ்நிலை ஏற்படுமானால் நாம் நிச்சயமாகப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவோம். ஆனால் சிறீலங்கா அரசாங்கம், தனக்கு இடையூறான சக்திகளை விலக்கி இந்தப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும். அதற்கான துணிவு சந்திரிகா அம்மையாரிடம் இருக்கிறதா என்பதை எதிர்காலம்தான் காட்ட வேண்டும். ●

---

## அம்பாறை மாவட்ட றவுண்டப் செய்திகள்

# வரிந்து கட்டி நிற்கும் வரவேற்பாளர்கள்!

(அம்பாறை அரசியல் நிருபர்)

**சு**காதார, சமூக சேவைகள், நெடுஞ்சாலைகள் அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். பௌஸி எதிர்வரும் 27,28ம் திகதிகளில் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்யவிருந்தார். திடீரென்று விஜயம் ஒத்தி வைக்கப்பட்டபோதும் டிசம்பர் மாதத்தில் அவரது விஜயம் இடம்பெறும் என்று தெரிகிறது. அமைச்சரை வரவேற்பதற்கு சி.ல.சு.கட்சியினர் மட்டுமன்றி பச்சை அணியினரும் வரிந்துகட்டுக்கொண்டு நிற்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

'பனிப்போரின்' வெளிப்பாடுகள் இந்த வருகையின் போது தொனிக்குமோ?

### ★ நான் அவரல்ல!

அம்பாறை கச்சேரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றின் இறுதியில் அமைச்சர் அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃபை அணுகிய டாக்டர் ஒருவர், “அமைச்சர் பௌஸி வருகை தரவிருக்கிறார். நாங்கள் எப்படி நடந்துகொள்வது?” என்றவாறே குழைந்தார். உடனே அமைச்சர் அஷ்ரஃப் புன்முறுவல் பூத்தவாறே “என்னை முன்னைய அமைச்சர் மன்சூர் போல் நினைத்துக்கொள்ளாதீர்கள். அமைச்சர் வந்தால் அவரை வரவேற்பதும், வருகையில் பங்குபற்றுவதும் உங்கள் கடமை. நான் தவறான கருத்து எதுவும் கொள்ளமாட்டேன்.” என்று கூறினார்.

□□

### ★ அதிருப்தி!

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸை நூறு வீதம் ஆதரித்துவரும் மாவடிப்பள்ளி கிராம மக்கள் இப்பொழுது, அதிருப்தி நிலையிலிருப்பதாகத் தெரியவருகின்றது. மாவடிப்பள்ளி முஸ்லிம் வித்தியாலய சுற்று வேலியில் 'கேற்' ஒன்று அமைக்கும் விடயத்தில் தலைவர் பொதுமக்களின் கருத்தை உதாசீனம் செய்து விட்டமைதானாம் இந்த அதிருப்தி நிலைக்குக் காரணம். காங்கிரஸே கவனி!

□□

### ★ அபாயம்! அபாயம்!!

அம்பாறை மாவட்டத்தில் பெருமழை பெய்துவருவதாலும், தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நீர் தேங்கி நிற்பதாலும் தொற்று நோய்கள் பரவக்கூடிய ஏதுநிலை தோன்றியிருப்பதாகவும், பொதுமக்கள் இந்த அபாயத்திலிருந்து காத்துக்கொள்ள சுகாதார நடைமுறைகளைப் பேணுமாறும் கோரப்பட்டுள்ளனர்.

## தமிழில் இல்லை!

(மாவத்தகம நிருபர்)

மாவத்தகம பிரதேச சபையினரால் பல இலட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொது வாசகசாலையின் புதிய கட்டிடமொன்று மாவத்தகம-கண்டி வீதியில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

பல ஆயிரம் தமிழ் பேசும் மக்கள் இங்கே இருந்தும், வாசகசாலையின் பெயர்ப்பலகை தமிழில் இல்லாமையும், தமிழ் புத்தகங்கள் தினசரிகள் இவ்வாசகசாலையில் இல்லாதிருப்பது பெரும் குறையாகும். இதை பிரதேசசபை கவனத்தில் கொள்ளுமா?

## எக்ஸ்ரே ரிப்போர்ட்
## நாரதர்

வசதியான பாதுகாப்பு அரணுக்குள் வலுவான நிலை எடுத்து துப்பாக்கியை இயக்கும் ஒரு வீரனை வீழ்த்துவது சுலபமான காரியமல்ல.

அது மட்டுமல்ல எங்கிருந்து தாக்குதல் வரக்கூடும் என்பதைக்கூட ஊகிக்க முடியாத ஒரு அணி அந்த வீரனை நெருங்குவதுகூட சிரமம்.

அந்த வீரனின் நிலையில்தான் புலிகள் இருக்கிறார்கள்.

தடுமாறும் அணியின் நிலையில்தான் அரசு இருக்கிறது.

இராணுவ ரீதியில் மட்டும்தான் புலிகளின் விவேகம்; அரசியல் ரீதியில் புலிகள் பூச்சியம் என்றெல்லாம் இனி யாராவது பேசினால், அவ்வாறு பேசுகிறவர்கள் நம் காதுகளில் பூ சுற்றுகிறார்கள் என்று அர்த்தம்.

அரசியல், இராணுவ ரீதியில் புலிகள் வேர்விட்டு, கிளைவிரித்து, ஆலமரம்போல தம் நிலையை வலுவாக்கிக் கொண்டு விட்டார்கள்.

புலிகள் வேர்விட்டு கிளை விரிக்க நீர் வார்த்த பெருமையில் பாதி புலிகள் பற்றி சரிவர மதிப்பிடத் தவறியவர்களையும் சேரும்.

புலிகளின் இன்றைய பலத்தில் பாதி பிரபாவின் ஊசலாட்டமில்லாத தலைமைக்கு சேரும். மீதி புலிகளின் எதிராளிகளைச் சேரும்.

புலிகளின் எதிராளிகள் என்ற வட்டத்திற்குள் அரசும் முக்கியமானதாக இருக்கிறது.

அரசு என்னும்போது அரசாங்கத் தலைவர்கள், படைகள், நீதி, நிர்வாக அமைப்புக்கள் அதில் உள்ளடக்கம்.

என்பதைப்போன்ற நிலை ஒரு வரப்பிரசாதம் மாதிரியல்லவா?

டி.பி.விஜேதுங்காவை கண்டு புலிகள் பயப்படவில்லை. அவர் ஜனாதிபதியாக இருப்பதையே விரும்பினார்கள். படைகளோ அவரது பாதுகாப்பை நாளும் பொழுதும் அதிகரித்தன.

பாதுகாப்பில்லாமல் அவர் நடமாடியிருந்தால்கூட புலிகள் ஒன்றுமே செய்திருக்க மாட்டார்கள். தமக்கு பலமூட்டும் எதிராளியை எந்தவொரு புத்திசாலி எதிரணியும் அழிக்க விரும்பாது. புலிகள் புத்திசாலிகள்.

தென்னிலங்கையில் புலிகளுக்கு இருந்த விவேகமான எதிரிகள் தொடர்ச்சியாக அழிந்து போனார்கள்.

புலிகளே உரிமை கோரினாலும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் அதனை காதில் வாங்காமல் தமக்குள் மோதும் அரசியல் போட்டி நடத்தும் சூழலில் அவர்களெல்லாம் கொல்லப்பட்டார்கள்.

கொலைகளையிட்டு கோபம் கொள்ளக் கூட முடியாதளவுக்கு தென்னிலங்கை அரசியல் தலைமை பலவீனப்பட்டுப் போயிருக்கிறது.

காமினி கொலைக்கு புலிகளே காரணம் என்று தெரிந்துவிட்டாலும்கூட அதனை ஒப்புக்கொண்டால் நஷ்டம் அரசுக்குத்தான்.

தற்கொலை கொலையாளியின் தலையையும், சேகரித்த சதைகளையும் தூக்கிக்கொண்டு வெளிநாடுகளுக்கு போய் ஆராய்கிறார்கள்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் புலிகளின் அரசியல் ஆலோசகர் மிகவும் சாதாரணமாக 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்பது போல பேசுகிறார். பேச்சிலே மறைமுக உரிமை கோரல் தொனிக்கிறது.

இதையெல்லாம் அரசு தன் காதில் விழாத மாதிரித்தான் நடந்து கொள்ளுகிறது.

காட்டவில்லை.

பேச்சு முயற்சியை குழப்பத்தான் அந்த குண்டுவெடிப்பை தாம் செய்ததாக தமிழர்கள் நினைத்துவிடக்கூடாது என்பதில் தான் புலிகள் ஆர்வம் காட்டியிருக்கிறார்கள்.

காமினி என்ற அரசியல்வாதிமீது வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு எப்போதுமே அபிமானம் இருந்ததில்லை. (ரெலோ மட்டும் விதிவிலக்கு)

ஆனால் சந்திரிக்காவின் தேர்தல் வெற்றியையும், அவர் ஜனாதிபதியானால் போர் ஓயும்- பிரச்சனை தீரும் என்று வடக்கு-கிழக்கில் உள்ள தமிழர்கள் எதிர்பார்த்தார்கள்.

அந்த நேரத்திலே காமினி கொல்லப்பட்டார். அதற்கு காரணம் புலிகளே என்று பகுத்தாராயக் கூடியவர்கள் எல்லாம் புரிந்து கொண்டார்கள்.

புலிகள் பேச்சு முயற்சிகளை விரும்புவதுபோல பேசிக்கொண்டு, மறைமுகமாக குழப்ப நினைக்கிறார்களோ என்று அவர்கள் நினைத்தார்கள்.

அவ்வாறான நினைப்பு அரசியல் ரீதியில் தமிழர்கள் மத்தியிலான தனது தளத்தை பாதிக்கும் என்று புரிந்துகொண்ட புலிகள் அந்த நினைப்பை மாற்றவே விரும்புகிறார்கள்.

அதனால்தான் குண்டுவெடிப்பால் ஏற்பட்டது நன்மைகளே தவிர தீமைகளல்ல.

இருந்தார்கள்.

சீனாவில் இருந்தது போல யாழ் குடாநாட்டிலும் மலைகள் இருக்கிறதா? காடுகள் இருக்கிறதா? ஆறுகள் இருக்கிறதா? என்று தேடி அவர்கள் களைத்துப் போனார்கள்.

யாழ்ப்பாணத்தில் கீரிமலை என்றொரு இடம் இருக்கிறது. பெயரில்தான் மலை இருக்கிறதே தவிர, அந்த ஊரில் மலை கிடையாது.

எனவே, யாழ் குடாநாட்டில் கெரில்லாப் போர் சரிப்பட்டு வராது என்று 'புரட்சிவாதிகள்' எனப்பட்ட சிலர் தீர்மானித்தபோது, பிரபாகரன் சொன்ன விசயம் புதுமையானது.

**"மக்களே காடுகள். மக்களே மலைகள். மக்களே கடல்."**

பிரபாகரன் நினைத்ததே சரி. அப்போது பிரபாவை விமர்சித்தவர்களெல்லாம் இப்போது பிரபாவோடு போய் பேசுங்கள் என்று சொல்வது கெரில்லாப் போரில் பிரபாவின் வெற்றிகளுக்கு கிடைத்த வரவேற்புத்தான்.

மலைகள் இல்லாத, காடுகள் இல்லாத யாழ் குடாநாட்டில் ஆழமாய் நிலை கொண்டுள்ள புலிகளின் வெற்றிக்கு காரணம் கெரில்லாப் போரில் பதித்த சுவடுகள்தான்.

'மக்களே காடுகள்'- காடுகளாக இருக்கும் மக்கள் தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப இசைவாக நடந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் போரில் வெற்றிபெற முடியும் என்பதுதான் புலிகளது கருத்தாக இருக்கிறது.

திட்டமிட்டு தெளிவாக காய்களை நகர்த்தி தமிழர்கள் மத்தியில் தமது விருப்பத்திற்கு எதிராக யாரும் செல்ல முடியாத ஒரு நிலையை பிரபாகரன் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்.

அவ்வளவு நல்லாயில்லை என்பதுபோல புலிகள் பிரசாரத்தை தட்டிவிட்டார்கள்.

இது ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் செய்யப்பட்ட பிரசாரம்.

ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிக்காவின் அமோக வெற்றி நிச்சயமாக புலிகள் எதிர்பாராத ஒன்றுதான். அதனால்தான் தம்மைப் பாராட்டும் அமைச்சர் தொண்டாவைக்கூட ஜனாதிபதி தேர்தலின் பின்னர் புலிகள் 'குத்துக்கரணமடித்தவர், பக்கம் மாறிப் பாய்ந்தவர்' என்றெல்லாம் விமர்சித்திருக்கிறார்கள்.

ஆனால், போர் நிறுத்தம் என்ற ஒட்டுச் செய்தியை வெளியிட்ட படைத் தரப்பு மூலம் புலிகள் புதிய வியூகத்தை வகுக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

புலிகளின் மூத்த தளபதி மல்லியின் தலை துண்டிக்கப்பட்ட செய்தியை, புலிகள் தமிழ் மக்களின் மத்தியில் சந்திரிக்கா அரசு மீதான தமது பகிரங்க விமர்சனத்திற்கான துவக்க முனையாக மாற்றிக் கொண்டார்கள்.


மாவீரர் தின கொண்டாட்டம், பிரபாவின் பிறந்த தினம் போன்றவற்றால் எங்கே எது நடக்குமோ என்று யோசித்துக் கொண்டிருந்த அரசு, தலை துண்டிப்பு செய்தியால் அதிர்ச்சியாகிவிட்டது.

தலைத் துண்டிப்பு செய்தியை கண்டித்தால் படையினரின் அதிருப்தி வந்து சேரும். முற்றாக மறுத்தால் புலிகளோடு பேச்சைத் தொடருவது தடைப்படும்.

போர் நிறுத்த செய்தியைத் தாமே வெளியிட்டுவிட்டு, 'தெரியாது' என்று வாதம் செய்வது வலுவாக இருக்காது என்றும் அரசு உணர்ந்து கொண்டது.

எனவே- போர் நிறுத்தம் செய்யத் தயார் என்று பிரபாவுக்கு ஒரு கடிதம்

# புதிய ஜனாதிபதியும் புலிகளின் புதிய வியூகமும்



கடந்தகால அரசாங்கத்தைப் பொறுத்தவரை- குறிப்பாக டி.பி.விஜேதுங்காவின் தலைமையிலான அரசை பொறுத்தவரை அதற்கு புலிகளை மதிக்கவும் தெரியவில்லை; புலிகளின் பலத்தை மதிப்பிடவும் தெரியவில்லை.

ஐ.தே.கட்சியை மட்டுமல்ல சகலவற்றையுமே உருத்தெரியாமல் உடைத்துப் போடும் வேலையை மட்டுமே மிகச் சிறப்பாக செய்து முடித்தவர் முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா. அவர் இனப்பிரச்சனையே இல்லையென்று கூறி தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளையே உருத் தெரியாமல் செய்ய நினைத்தார்.

இறுதியாக, தனது சாதனை என்று சொல்லிக்கொள்ள எந்தவொரு தடயத்தையும் உருவாக்காமல் விடைபெற்றுச் சென்றார்.

அவரால் கட்சியையும் காப்பாற்ற முடியவில்லை. இலங்கை அரசியலில் தன்னை நினைவுகூரும் சாதனைக் காட்சிகளையும் வரலாற்றின் கரத்தில் காப்பாற்றுமாறு கொடுத்துச் செல்லவும் இயலவில்லை.

டி.பி.விஜேதுங்காவின் காலம் புலிகளின் பொற்காலம் என்று கூறலாம்.

தமது எதிரி பலவீனமானவர் மட்டுமல்ல, விவேகமும் இல்லாதவர்

புலிகள் இரகசியமாக தமக்குள் பேசிய 'போர் நிறுத்த செய்தியை கேட்டு அறிவித்த' படையினர் திரு.அன்ரன் பாலசிங்கத்தின் பேச்சு புலிகளது வானொலியில் பகிரங்கமாக ஒலிபரப்பானதை மட்டும் அறியாமல் இருந்திருக்க முடியாது.

எதிர்கட்சி அறிந்தால் விஷமத்தனமாய் குற்றம்சாட்டும்.

'பார்த்தீர்களா? புலிகளோடு சேர்ந்து செய்த சதிதான் என்று முன்பே சொன்னது சரிதானே?' என்று எதிர்க்கட்சி துள்ளிக் குதிக்கும் என அரசு நினைக்கலாம். அதனால் அறிந்தும் அறியாத மாதிரி இருக்கவேண்டியிருக்கிறது.

அன்ரன் பாலசிங்கமும் குண்டுவெடிப்பால்தான் திருமதி சந்திரிக்கா குமாரதுங்கா பெரும்பான்மை பலத்தோடு வெற்றி பெற்றதாகவும் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார்.

காமினி கொலையால்தான் ஜனாதிபதி சந்திரிக்கா, பேச்சு முயற்சியைத் தொடர தாமதிக்கிறார் என்று யாழ்ப்பாண மக்கள் நினைத்துவிடக் கூடாதே என்ற கவலையால் தான் பாலசிங்கம் அப்படிப் பேசியிருக்கிறார்.

யார் எப்படித்தான் மறுக்க முயற்சித்தாலும் தற்கொலைத் தாக்குதல் புலிகளின் நடவடிக்கை என்பது உரிமை கோரப் படாமலேயே தமிழர்கள் அறிந்த சங்கதி. எனவே அதனை மறுப்பதில் புலிகள் ஆர்வம்

தவிர 'இனவாதிகள் சாவுகளுக்கும் இனப்பிரச்சனை தீர்வுக்கான பேச்சுகளுக்கும் தொடர்பில்லை' என்றெல்லாம் நிரூபிக்கும் வகையில் புலிகளின் அரசியல் ஆலோசகர் பேசியிருக்கிறார்.

ஆக, புலிகள் தமது நோக்கத்தை கைவிடவும் இல்லை. அதே சமயம் மக்களின் நாடித் துடிப்பையறிந்து அதற்கேற்ப தமது நடவடிக்கைகளை விளக்கிச் செல்லும் விவேகத்தையும் தவறவிடவில்லை.

வடக்கு-கிழக்கில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் கெரில்லாப் போர் முறையை வெகு துல்லியமாக முன்னெடுத்தவர்கள் புலிகள்தான்.

கெரில்லாப் போரில் வெற்றிகளைக் குவித்தவர்களாக முன்னர் அறியப்பட்டவர்கள் சீனாவின் புரட்சியாளர்கள்தான்.

சீனாவின் புரட்சித் தலைவர் மறைந்த மாவோ சேதுங், கெரில்லா போர் பற்றி நிறைய எழுதியிருக்கிறார்.

அதனால்தான் **மாவோவின் இராணுவப் படைப்புக்கள்** என்னும் சிகப்பு அட்டை போட்ட புத்தகத்தை சீன அரசு தமிழில் வெளியிட்டபோது ஈழப் போராளிகள் பலர் விழுந்து விழுந்து படித்தார்கள்.

படித்தவர்களெல்லாம் தம்மைப் புரட்சிவாதிகள் என்று சொல்லிக்கொண்டார்களே தவிர, இங்குள்ள சூழலுக்கு அதனை எப்படி மாற்றி பயன்படுத்துவது என்று தெரியாமல்

ஆனால், திருமதி சந்திரிக்காவின் புதிய பலம், புதிய வருகை புலிகளையும், பிரபாகரனையும் சற்று யோசிக்க வைத்தன.

*மக்கள் என்ற காடுகளுக்குள் சலசலப்பு- மலைகளிடையே நம்பிக்கை எதிரொலி- ஆறுகள் மத்தியில் சலனம்.*

இதுவெல்லாம் பிரபாவுக்கோ புலிகளுக்கோ பிடித்தமான விசயங்களல்ல.

அன்ரன் பாலசிங்கமே சொல்லுகிறார், "ஹெலிக்கொப்டர் குண்டு வீசினால் ஓடுவீர்கள். வந்து இறங்கினால் போய் கொஞ்சுகிறீர்கள்."

அவர் எதைச் சொல்லுகிறார் என்றால், முதல் கட்ட பேச்சுக்கு யாழ் சென்ற அரச பிரதிநிதிகள் ஹெலிக்கொப்டரில்தான் போய் இறங்கினார்கள். புலிகளது காவல்துறையினரையும் தள்ளி விலத்திக்கொண்டு யாழ் மக்கள் முண்டியடித்து வரவேற்றதைத்தான் வேதனையோடு கவனித்துவிட்டு சமீபத்தில் வெளியே கொட்டியிருக்கிறார்.

எனினும், மக்களது விருப்பத்திற்கு மாறான வகையில் பேசுவதோ, எடுத்த எடுப்பிலேயே திருமதி சந்திரிக்கா குமாரதுங்காமீது நம்பிக்கையீனம் தெரிவிப்பதோ புத்திசாலித்தனம் அல்ல என்பதை புலிகள் அறிவார்கள்.

எனவே-சந்திரிக்கா பரவாயில்லை போலத்தான் தெரிகிறது. படைகள் சரியில்லை. பாதுகாப்பு பிரதியமைச்சரும் எழுதினார் பிரதி பாதுகாப்பு அமைச்சர்.

சூழ்நிலையில் தீவிரத்தை தணிக்கும் முயற்சியாகவே அந்தக் கடிதம் கருதப்பட வேண்டும்.

ஆனால், பிரபாவோ அரசு மீதும் படைகள் மீதும் போர் நிறுத்த மீறல் குற்றச்சாட்டை சுமத்தியதோடு, தலை துண்டிப்புக்கு விசாரணை வேண்டும், அதற்குப் பின்னரே மேற்கொண்டு பேச முடியும் என்று பதில் கடிதம் போட்டு விட்டார்.


நல்லூரில் நடைபெற்ற 'புலிகளின் குரல்' வானொலி நாலாவது ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் தலை துண்டிப்பு விடயம் பற்றி பேசிய திரு.அன்ரன் பாலசிங்கம் உணர்ச்சிவசப்பட்டவராக பெரும் குரலில் கத்திப் பேசியபோது கூடியிருந்தவர்கள் சிலிர்த்துப் போயினர்.

ஆக, புதிய அரசும் பொல்லைக் கொடுத்து அடி வாங்கத் தொடங்கியிருக்கிறது.

இது அரசின் தடுமாற்றத்தையும் புலிகள் தெளிவாக தமது தளத்தில் கால் ஊன்றி நின்று வியூகங்களை வகுக்கும் நிலையில் இருப்பதையுமே காட்டுகிறது.

புலிகளிடம் கேட்ட ஒட்டுச் செய்தியை அறிவிக்க முன்னர், தமது நிலை என்ன, தம்மால் போர் நிறுத்தம் செய்ய முடியுமா?

(தொடர்ச்சி 6ம் பக்கம்)



## அதிரடி அய்யாத்துரை

பனையால் பலன் கிடைச்சதோ இல்லையோ சபையால் பயன் பெற்றவர் அதில் ஒரு பகுதியை கூட்டான கட்சி பிரமுகர்கள் சிலருக்கும் பகிர்ந்து தந்தவராம். மீண்டும் தர ஒப்புக்கொண்டிருப்பதாலைதான் ஜனநாயக நோக்கத்தோடை (?) அவருக்கு சிபாரிசு செய்ய ஒற்றைக் காலில் நிக்கினமாம். தங்கமானவர், நீலமானவர் ரெண்டு பேரும் அவர்மீது லஞ்ச ஊழல் விசாரணையை நிறுத்தச் சொல்லி அதிகார வட்டத்திடம் வற்புறுத்துகினமாம். உதுதான் நிபந்தனையோடு ஆதரவு எண்டதின் அர்த்தமாக்கும்? இது தொடர்பாக சபையில் கேள்வி கேட்க ஒரு தமிழ் கட்சி ஆதாரங்களை திரட்டுதாம். முரசுக்கும் தந்தா உதவியா இருக்கும்.

'சபை விவாதத்தை தமிழ் கட்சிகள் சார்பாக நானே ஆரம்பிச்சு வைப்பேன்' என்று தங்கமானவர் பத்திரிகை ஒண்டுக்கு செய்தி கொடுத்துப் போட்டாராம். செய்தியைப் படித்த கிழக்கின் சிங்கத்தார்கூட அதிர்ந்து போனாராம். சரி போனால் போகட்டும், "நீரே பேசும்" எண்டு சொன்னாராம். தமிழ் கட்சியள் சார்பில் பேசுற அதிகாரத்தை ஆர் கொடுத்தது? ஏன் உந்த ஆசை? உதுதானே பாருங்கோ தம்பிமார் கோபப்படுறவை.

உயர்ந்த இடத்தில் இருப்பவருக்கு தானே ஆலோசனை சொல்லுற மாதிரியும், நெருக்கம் மாதிரியும் ஒரு தமிழ் கட்சி சட்டவாதி காட்டிக்கொண்டு திரியுறார் எண்டு தகவல். ரெண்டு எழுத்தாரின் தொடர்பு தனக்கிருக்கிற மாதிரிக் காட்டி அதிகார வட்டத்திலை சலுகைகள் பெற முயற்சிப்பதாயும் கேள்வி. தேவைப்பட்டா பேர் பிறகு சொல்லப்படும்.

கொழும்பிலை ஜனநாயக கட்சி அலுவலகத்திற்கு சீருடையினர் சிவில் உடையில் ஆயுதத்தோடை போயிருக்கினம். கட்சிக்காரர் அவையைப் பிடிச்சு தடுத்து வைச்சுப் போட்டினம். அடையாளம் தெரியாமல்தான் நடந்ததாம். ஜனநாயக வழிக்கு வந்தாலும் பழைய 'அலேட்' குணம் போகேல்லை.

ரெண்டு எழுத்து தலைவரின் பிறந்த நாள் முடியுமட்டும் சிலருக்கு நித்திரையே வரேல்லையாம். தலை நகரமே 'ஃபுல் அலேட்.' அது மட்டுமோ நாடு முழுக்க படை முகாம்களில் அன்றைக்கு சிவராத்திரிதானாம்.

கிழக்கின் நீல அணி முக்கியஸ்தர் பெயரும் வடக்கு-கிழக்கு கவணர் பெயருக்கு அடி படுகுதாம். பதவியாசை அறவேயில்லாத (?!) கூட்டான கட்சிக்காரரும் ஓடுப்பட்டுத் திரியினம். யாருக்கு கொடுத்து வைச்சிருக்குதோ?

எதிர்பார்த்துக்கொண்டேயிருந்த படியால்தானாம் ரெண்டு எழுத்தார் பாய்ச்சல் எதையும் நடத்தேல்லை. விரைவில் ஒரு பாய்ச்சலுக்கு அடுக்குப் பண்ணுப் படுறதாகவும் கேள்வி. அவையின் மடியிலைதான் கவனம் செலுத்துகினம் எண்டு தெரியுது.

வடக்கு-கிழக்கு கவணர் பதவிக்கு அடிபடும் பெயர்களிலை முன்னாள் யாழ் அரச அதிபரின் பெயரும் இருக்குதாம். கிடைச்சா எடுக்கிற முடிவிலைதான் அவரும் இருக்கிறார் எண்டு கதைக்கினம்.

வெகுஜன பிரதிநிதிகள் சபையிலை பெயரில் தயாளத்தை வைச்சிருக்கும் முன்னாள் அதிகாரத்தாரை இந்நாள் தனித்துவ தலைவர் பிய்ச்சு உதறிப்போட்டாராம்.

ஊழலுக்கும், லஞ்சத்துக்கும், ஊர் சொத்தை சுருட்டலுக்கும் கூட்டான கட்சி ஆதரவு கொடுக்கிற விசயம் இன்று நேற்றல்ல, அன்று முதல் நடக்கிற கதை. கூட்டான கட்சி தலைவர் ஆலால சுந்தரம் கூட்டுறவு சங்கத்தை விழுங்கி ரெண்டு எழுத்தாராலை சுடப்பட்டது 83ம் ஆண்டு. இப்ப 94 இலிலும் நடக்கட்டும் ராசா உன் சுருட்டல் என்று ஒருத்தருக்கு ஆதரவு கொடுக்க நினைக்கினம். மோகனரங்கன் என்ற நாடகாசிரியர் ஒருவர் குற்றவாளியை தப்பவைக்கும் சட்டத்தரணியை அவரது மகளே கண்டிக்கிற மாதிரி எழுதிய கவிதை இது:

> "அழுகிவிட்ட கனிகளுக்கா அரசாங்க மரியாதை?
> புழுதிபட்ட ............... பொன்னாடை பாராட்டு?
> ஈயத்தை எத்தனை நாள் வெள்ளியென எடுத்துரைப்பீர்?
> ஆய்ந்தறியும் அறிஞரெல்லாம் அப்படியே நம்புவரோ?
> உண்மைக்கு பகைவர்கள் ஊருக்கு நண்பர்களா?"

இடையில் ஒரு வரி சென்னார் 'இப்படி மகள் கேட்க சட்டத்தரணி திருந்துகிறார். எங்கடை சட்டவாதியள் திருந்துவினமோ?'

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் போராட்டம்

4

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# அதன் பெயரால் அமுதரின் மகனுக்கு புகலிடம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

யாழ் மேயர் அல்பிரட் துரையப்பா கொலைக்கு காரணம் தமிழ் புதிய புலிகள்.

ஆங்கிலத்தில் T.N.T என்று சுருக்கமாக அழைக்கப்பட்டனர்.

T.N.T என்ற பெயர் வெடி மருந்து ஒன்றையும் குறிக்கும்.

தமிழ் புதிய புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவராக இருந்தவர் செட்டி.

தனபாலசிங்கம் என்ற செட்டி யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைச் சேர்ந்தவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவராக இருந்தவர் அடலேறு ஆலாலசுந்தரம்.

**(இவர்தான் பின்னாளில் யாழ் கூட்டுறவு சங்கத் தலைவராக இருந்து ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர். விடுதலைப் புலிகளால் காலில் சுட்டு (22.02.83) எச்சரிக்கப்பட்டவர். இவர் கதையும் பின்பு சொல்லப்படும்.)**

ஆலாலசுந்தரமும் கல்வியங்காட்டைச் சேர்ந்தவர்தான்.

செட்டியை வைத்து பயன்படுத்தலாம் என்று நினைத்த ஆலாலசுந்தரம் செட்டி குழுவினரை அழைத்துப் பேசினார்.

'தமிழ் புதிய புலிகள்' என்ற பெயரில் ஒரு குழுவாக இயங்குமாறு ஆலோசனை கூறினார்.

தமிழ் புதிய புலிகள் இயக்கத்தில் முக்கியமாக இருந்தவர்களில் சிலர், செட்டி, பிரபாகரன், சிவராசா, ரமேஷ், இன்பம், கண்ணாடி பத்மநாதன், பற்குணராஜா, கலாபதி, கிருபாகரன் ஆகியோர்.

தமிழ் புதிய புலிகள் (T.N.T) மேற்கொண்ட நடவடிக்கைகளில் சில:

யாழ் தெல்லிப்பழை கூட்டுறவு பண்டக சாலையில் 97 ஆயிரம் ரூபா கொள்ளை (1974), யாழ் மேயர் அல்பிரட் துரையப்பா கொலை. (1975), புத்தூர் வங்கியில் ரூபா ஏழு இலட்சம் கொள்ளை (1976 மார்ச் 5).

தமிழ் புதிய புலிகளின் சகல முக்கிய நடவடிக்கைகளிலும் பிரபாகரன் பங்கு கொண்டிருந்தார்.

தமிழ் புதிய புலிகளின் தலைவராக இருந்த செட்டி பின்னர் பொலிசாருக்கு தகவல் கொடுக்கும் நபராக மாறினார்.

சி.ஐ.டி. இன்ஸ்பெக்டராக இருந்த பத்மநாதன் செட்டியை தனது கைக்குள் போட்டுக்கொண்டார்.

செட்டி மூலமாக தீவிரவாத இளைஞர்களின் விபரங்கள் பத்மநாதனால் சேகரிக்கப்பட்டன.

இதனால் வெறுப்புற்ற பிரபாகரன் செட்டியை தேடித் திரிந்தார்.

1981ம் ஆண்டு யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் செங்குந்தா இந்துக்கல்லூரியருகே செட்டி சுட்டுக் கொல்லப்பட்டார்.


செட்டியை சுட்டுக்கொன்றவர் குட்டி மணி. அப்போது பிரபாகரனும் குட்டிமணி குழுவினரோடு இருந்தார்.

5.5.76 அன்று தமிழ் புதிய புலிகள் இயக்கத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் (L.T.T.E) என்னும் புதிய பெயர் சூட்டப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளில் முக்கியமானவர்களாக இருந்தவர்கள்- பிரபாகரன், உமா மகேஸ்வரன், நாகராசா, செல்லக்கிளி (இவர் செட்டியின் தம்பி) ஐயர், விச்சுவேஸ்வரன், ரவி ஆகியோர்.

துரையப்பா கொலையில் பங்குகொண்ட பற்குணராசா என்னும் சரவணன் பிரபாகரனால் கொல்லப்பட்டார்.



அமரர் உமா மகேஸ்வரன்

புலிகளின் முக்கிய தலைவர்- பின்னர் புளொட் தலைவர். உட்கொலைகள் பற்றிய குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்.

## அரசியல் தொடர்

மைக்கல் என்னும் இன்னொரு உறுப்பினரும் 1976ல் பிரபாகரனால் கொல்லப்பட்டார்.

இயக்க முடிவின்படியே மேற்கண்ட இருவரையும் பிரபா சுட்டுக்கொன்றார்.

ஆனால், அந்த முடிவுக்கு காரணமான சிலர் பின்னர் பிரபா மீது அவரது தனிப்பட்ட தவறு என்பதுபோல அக்கொலைகள் பற்றி சொல்லித் திரிந்தனர்.

பற்குணராசா என்ற சரவணனை பிரபாகரனிடம் தந்திரமாக அழைத்துச் சென்றவர்களில் ஒருவர் நாகராசா (வாத்தி).

### அற்புதன்

இவர் பின்னர் இயக்கத்தில் இருந்து வெளியேறினார்.

வெளியேறிய பின்னர் பிரபாகரன்மீது கொலைகளுக்கான விமர்சனத்தை முன் வைத்தார்.

அதனால் கோபம் கொண்ட பிரபாகரன் தமிழ்நாட்டில் சென்னையில் இருந்த நாகராசாவை கடத்திச் சென்றார்.

அதன் பின்னர் தமிழ்நாட்டைச் சேர்ந்த 'நக்சலைட்' குழுக்களின் தலையீட்டாலும், தமிழக இரகசியப் பொலிசாரின் முயற்சியாலும் நாகராசா விடுவிக்கப்பட்டார்.

புலிகள் இயக்க தலைவர்களாக அரசால் தலைக்கு விலை வைத்து தேடப்பட்ட முக்கியமான மூவர், பிரபாகரன், உமா மகேஸ்வரன், நாகராசா.

நாகராசா இயக்கத்தில் இருந்து வெளியேறி கடத்தல் தொழிலில் ஈடுபட்டு தற்போது செல்வந்தராக தமிழ் நாட்டில் இருக்கிறார்.

இரகசியமான தலை மறைவு இயக்கத்தின் கட்டுப்பாட்டு விதிகள் நெகிழ்வானதாக இருக்கக்கூடாது என்று பிரபா நினைத்ததை முற்றிலும் தவறு என்று சொல்ல முடியாது.

இயக்கத்தை விட்டு விலகிய பின் இயக்கத்தில் இருந்தபோது மேற்கொண்ட நடவடிக்கைகளை வெளியே தெரிவிப்பது போராட்ட காலத்தில் பெரும் சேதங்களை ஏற்படுத்தும்.

கியூபா புரட்சியின்போது சேகுவேராவும் கட்டுப்பாட்டை மீறுவோர் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

கட்டுப்பாட்டை மீறிய ஒரு போராளியை சேகுவேரா சுட்டுக்கொன்ற நிகழ்வும் கியூபா புரட்சியின்போது நடந்திருக்கிறது.

உமா மகேஸ்வரனும் பிரபாகரனின் உட்கொலைகளைக் கண்டித்துப் பேசியவர்களில் ஒருவர்.

ஆனால், அவர் பின்பு புளொட் இயக்கத்தை தலைமை தாங்கி நடத்தியபோது புளொட் இயக்கத்தில் நூற்றுக்கணக்கான உட்கொலைகள் உமாவின் உத்தரவுப்படி நடந்ததாக புளொட் முக்கியஸ்தர்களே விமர்சித்தனர்.

இறுதியாகத் தனது இயக்க உறுப்பினரும், மெய்ப்பாதுகாவலருமான ஒருவராலேயே உமா மகேஸ்வரன் கொழும்பில் வைத்து கொல்லப்பட்டார்.

இனி, துரையப்பா கொலைக்குப் பின் நடந்த சம்பவங்களுக்கு வருவோம்.

துரையப்பா கொலையைப் பற்றி விசாரணை செய்ய பொலிசார் பல முனைகளில் முயற்சிகளை மேற்கொண்டனர்.

தீவிரவாத இளைஞர்களை வேரோடு களையவேண்டும் என்ற முனைப்போடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதே சமயம் துரையப்பா கொலையோடு தலைவர் அமிர்தலிங்கத்தின் மகன் காண்டிபனின் பெயரும் சேர்க்கப்பட்டது.

காண்டிபனைத் தேடி பொலிசார் அலைந்தனர்.

துரையப்பாவை சுட்டது யார் என்பதுகூட அமிர்தலிங்கம் சொல்லியிருந்தால்தான் காண்டிபனுக்குத் தெரிந்திருக்கும்.

ஆனாலும், காண்டிபனை பொலிசார் தேடிய வேகத்தைப் பார்த்த மக்கள் அமுதரின் மகனும் ஒரு வீரன்தான் என்று உள்ளுக்குள் சந்தோசப்பட்டனர்.

இதனால் அமுதருக்கு இருந்த மதிப்பும் உயர்ந்தது.

காண்டிபன் இலண்டனுக்கு பத்திரமாகப் போய்ச் சேர்ந்தார்.

அவருக்கு அரசியல் அடைக்கலம் பெற்றுக்கொடுக்க பலத்த முயற்சிகள் நடந்தன.

இறுதியில் அரசியல் புகலிடம் கிடைத்தது. தமிழர்கள் சந்தோசப்பட்டார்கள்.

தேடப்பட்டவுடன் தப்பிஓடி அரசியல், புகலிடம் தேடுவதா?

அப்படியானால் இங்கே போராடும் இளைஞர்கள், சுவரொட்டி ஒட்டி தலைக்கு விலை வைத்து தேடப்படும் இளைஞர்கள் புத்தி கெட்டவர்கள் என்று தான் அர்த்தமா? என்றெல்லாம் தமிழர்களில் பலர் யோசிக்கவேயில்லை.

அந்தளவுக்கு அமுதர் மீது கண்மூடித்தனமான விசுவாசம் நிலவிய காலம் அது.

காண்டிபன், துரையப்பா கொலையில் தேடப்பட்டதால் ஏற்பட்ட இலாபங்கள் இரண்டு.

ஒன்று; அமுதர் குடும்பமே தியாகத்திற்கு தயாரான குடும்பம் என்ற பெருமை. அதனால் தளபதி என்ற பட்டம் அமுதருக்கு உறுதிப்படுத்தப்பட்டது.

இலாபம் இரண்டு; அந்தக் காலத்தில் இலண்டன் சென்று புகலிடம் பெறுவது சாதாரண காரியமல்ல; ஆனால் காகம் இருக்க பனம் பழம் விழுந்த கதையாக காண்டிபனுக்கு புகலிடம் சுலபமாகக் கிடைத்தது.

இலண்டனில் புகலிடம் தேடிய காண்டிபன் தமிழர்கள் போராட்டத்திற்கு அங்கிருந்து செய்த காரியம் என்னவென்று கேட்டால், பதில் ஒன்றுமேயில்லை என்பதுதான்.

அமுதரின் தியாகங்களை மறுத்துப் பேசுவது என் நோக்கமல்ல; தமிழர்களுக்குக் கிடைத்த ஆளுமையுள்ள, உணர்ச்சிகரமான தலைவர் அவர்.

ஆனால், காண்டிபன் விடயத்தில் அமுதரின் போக்கு சரியானதாக இருக்கவில்லை.

அமுதரின் மகன் லண்டனில் புகலிடம் தேடிக்கொண்டார். வடக்கு-கிழக்கில் தீவிரவாத இளைஞர்கள் பொலிசாரின் தேடுதல் வேட்டைகளில் இருந்து தப்பிக்கொள்ள அங்கும் இங்கும் ஓடி அலைந்தார்கள்.

தேடுதலில் முன்நிற்கும் பொலிசாரை அழித்துவிடுவதுதான் தப்பிக்கொள்ள வழி என்று தீவிரவாதக் குழுக்கள் முடிவு செய்தன.

குறிப்பாக தமிழ் பொலிஸ் அதிகாரிகள் மீதுதான் இளைஞர்கள் அதிகமாகக் கோபப்பட்டார்கள்.

துப்பு துலக்குவதில் திறமையான பொலிஸ் அதிகாரி பத்மநாதன்.

சி.ஐ.டி. இன்ஸ்பெக்டரான பத்மநாதனின் வீடு நல்லூர் முடமாவடியில் இருந்தது.

1976ம் ஆண்டு (திகதி-மாதம் நினைவில் இல்லை) சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் பத்மநாதன் வீட்டின் முன்பாக இளைஞர்கள் சிலர் காத்திருந்தனர்.

இரவு நேரம். வெளியே காரில் சென்றிருந்த பத்மநாதன் எப்படியாவது வீடு வந்து சேர்ந்தேயாக வேண்டும்.

இளைஞர்களிடம் பரபரப்பு. குறி சரியாக அமையவேண்டுமே என்றும் படபடப்பு.

இது புலிகள் குழுவினரல்ல. வேறு குழு.

தூரத்தில் கார் ஒன்றின் ஹெட்லைட் வெளிச்சம்.

இளைஞர்களின் இதயத்துடிப்பு அதிகரித்தது. பத்மநாதனிடமும் கைத் துப்பாக்கி இருந்தது.

(தொடர்ந்து வரும்)

## எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

என்பதையெல்லாம் அரசு ஆராய்ந்து பார்க்காமல் இருந்திருக்கிறது.

புலிகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்காத போதும் நாம் போர் நிறுத்தம் செய்கிறோம் என்று அரசு அறிவித்திருந்தால் அதன் மதிப்பு உயர்ந்திருக்கும்.

அல்லது-ஒட்டுச் செய்தியை அறிவித்த கையோடு, போர் நிறுத்தம் உண்மையா என்று கேட்டு புலிகளுக்கு கடிதம் எழுதியாவது இருக்கலாம்.

நிலவரம் எல்லாம் கட்டு மீறிப்போய், தமது தளபதி தலையை இழந்தது பற்றி புலிகள் கோபப்பட்டுப் பேசிக்கொண்டிருக்கும்போது, 'போர் நிறுத்தம் என்று அரசுக்கு தெரியாதே' என்று குறிப்பிட்டு எழுதப்பட்ட கடிதத்தில் விவேகம் துளியும் இல்லை.

எதையும் உடனே முடிவு செய்ய முடியாத நிலையில் அரசு இருப்பதாகவே தெரிகிறது. புலிகளின் நகர்வுகள் எப்படி அமையும் என்று கணிப்பிடுவதில் அனுபவக் குறைவும் இருக்கிறது.

அதனை புலிகள் தமக்கு சாதகமான வியூகமாக மாற்றுவார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடியதுதான்.

மாவீரர் தினத்தின் இறுதியில் புலிகளின் தலைவர் ஆற்றியுள்ள உரையில், புதிய ஜனாதிபதி மீதான நம்பிக்கையீனம் தெளிவாக ஒலித்திருக்கிறது.

புலிகளின் புதிய வியூகம் மிகத் தெளிவு.

படையினரின் அதிருப்தியை புதிய ஜனாதிபதி சம்பாதித்துக்கொள்ளும் வகையிலான கோரிக்கைகளை முதற் கட்டமாக முன்வைப்பது.

படையினரின் நடவடிக்கைகள் மூலமாக தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சமும், அதிருப்தியும் புலிகள் படையினர் மீதான கண்டனங்களை தொடுக்க இலகுவாக இருக்கும்.

ஆனால் படையினர்மீதான புலிகளது நிபந்தனைகளை ஏற்பது புதிய ஜனாதிபதிக்கு அத்தனை சுலபமாக இருக்காது.

ஏற்கனவே காமினி கொலை மூலம் புதிய அரசின் உள் மனதில் புலிகளை எப்படி நம்புவது? என்ற சந்தேகம் உறுதியாகியிருக்கும். வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும் அதுதான் உண்மை.

இந்த நிலையில், மாவீரர் தின உரையில் **பொருளாதார தடை முழுமையான நீக்கம், போக்குவரத்து பாதை திறப்பு- அதற்கு பூநகரி முகாம் அகற்றல்,** அல்லது கடல் ஏரி தடை அகற்றல் பற்றியெல்லாம் பிரபா வலியுறுத்தி இருக்கிறார்.

பிரபாவின் பேச்சு தமிழ் ஈழ கோரிக்கையை- அதன் உறுதியை வலியுறுத்தியிருக்கிறது. அதே சமயம் பேச்சுக்கு எதிரானவர்கள் தாம் என்று மக்கள் நினைத்து விடக்கூடாது என்று பிரபா கவனமாக பேசியிருக்கிறார்.

'ஆடுற மாட்டை ஆடிக் கறக்க வேணும், பாடுற மாட்டை பாடிக் கறக்க வேணும்.'

சந்திரிக்காமீது தமிழர்கள் திடீர் நம்பிக்கை கொண்டபோது தமக்கும் நம்பிக்கை இருக்கிறது என்றார்கள் புலிகள்.

இப்போது, புதிய ஜனாதிபதியின் மௌனமும், படையினரின் நடவடிக்கையும் தமக்கு சாதகமாக அமைந்துள்ளதால் ஜனாதிபதி சந்திரிக்கா மீது நேரடியாகவே குற்றச்சாட்டுக்களை புலிகள் குவித்திருக்கிறார்கள். பிரபாவே நேரடியாக குற்றம் சாட்டியிருக்கிறார்.

பேச்சுக்குத் தயார் என்று கூறியபடியே தமது வியூகத்திற்குள் புதிய அரசை மாட்டிக்கொள்ள வைப்பது புலிகளது தந்திரம்.

அரசு பேச்சுக்கு சென்றேயாக வேண்டும். ஆரம்பித்த பேச்சை இடை நிறுத்தியது ஏன் என்ற கேள்விக்கு பதில் சொல்ல அரசிடம் வலுவான வாதம் எதுவும் இல்லை.

ஆனால், புலிகள் பேச்சு முயற்சிக்கு தாம் எதிரானவர்களல்ல என்று கூறுவதற்கு பல வாதங்களை வைத்திருக்கிறார்க்ள். ஒட்டுச் செய்தி மூலம் அரசே அந்த வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

காமினி கொலை விவ்காரத்தைக்கூட அரசு முன்னே வைக்க முடியாது. அப்படி செய்வதாயிருந்தால் முன்னரே செய்திருக்க வேண்டும்.

இனி செய்வதாக இருந்தால் விசாரணை மூலமே புலிகள் என்று நிரூபிக்க வேண்டும்.

ஆனால், தற்கொலையானவரின் உண்மையான விபரத்தைக்கூட கண்டறிவது கஷ்டமான நிலையில், புலிகள்தான் என்று நிரூபிப்பது கஷ்டமான காரியம்.

ஆக, மொத்தத்தில் பேச்சுவார்த்தை முயற்சியில் அரசு வலுவான தளத்தில் நின்று புலிகளை தனது வியூகத்திற்குள் கொண்டுவர முடியாதுள்ளது.

புலிகளின் வியூகத்திற்குள் தெரிந்தே தலையை நுழைத்தாக வேண்டும்.

புலிகள் ஜனாதிபதிமீது கடுமையாக விமர்சிக்கிறார்கள். ஆனால் அரசு இப்போதைக்கு புலிகளை விமர்சிக்க முடியாது.

அந்தளவுக்கு அரசும் அதன் பிரசார சாதனங்களும் சந்திரிக்கா- பிரபா நல்லெண்ணம் பற்றி அளவுக்குமீறி பிரசாரம் செய்து முடித்துள்ளன.

ஒரு கன்னத்தில் அடித்தால் மௌனமாக மறு கன்னத்தையும் காட்டிக்கொண்டு புலிகளைத் தேடிப்போய் அரசு பேசித்தான் ஆகவேண்டும்.

தமது வியூகத்திற்குள் வந்துவிட்டு பிரச்சனையை தீர்க்க விரும்பாத தரப்பு என்ற பெயரோடு அரசு திரும்பிச் செல்ல வேண்டும் என்றே புலிகள் நினைக்கிறார்கள்.

புதிய அரசுடனான அரசியல் யுத்தத்திற்கு ஜனாதிபதி சந்திரிக்காமீதான கண்டனத்தோடு புலிகள் முன்னால் அடி எடுத்து வைத்துவிட்டார்கள்.

இனி அரசு என்ன செய்யப் போகிறது?

புதிய ஜனாதிபதி எப்படி தயாராகப் போகிறார் என்று பார்க்கலாம். ■

### திருத்தம்

சென்றவார முரசில் '1974 ஜூலை 5இல் இறந்த சிவகுமாரனுக்கு அஞ்சலிக்கூட்டம் கொழும்பில் நடந்தது' என்பதற்கு பதிலாக 1974 ஜூலை 5ல் சிவகுமாரனுக்கு கொழும்பில் அஞ்சலிக்கூட்டம் நடந்தது என்று தவறுதலாக இடம்பெற்றுவிட்டது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

அலசுவது—இராஜதந்திரி

# புதிய சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டிய ஜனாதிபதி சந்திரிகா!



பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளையடுத்து பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் பெரும் ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வே.பிரபாகரன், பிரதம மந்திரியாக சந்திரிகா இருந்த போது எழுதிய கடிதத்தில் பேச்சுவார்த்தைகளில் தமக்கிருக்கும் விருப்பத்தை வெளியிட்டிருந்ததுடன், அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் போர் நிறுத்தமொன்றைக் கொண்டு வருவதன் அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தார்.

போர் நிறுத்தமொன்று ஏற்படுவதன் மூலமே அரசு+ புலிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளை அர்த்தமுள்ளவையாக்க முடியுமெனவும் திரு.பிரபாகரன் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆனால் புலிகளுக்கும், சந்திரிகா அரசுக்குமிடையே சுமுகமான முறையில் பேச்சுக்களை தொடருவதற்கான சூழ்நிலையில் துரதிஷ்டவசமாக பாதிப்புகள் ஏற்பட்டதுடன் தற்போது இரு சாராரும் மீண்டும் புதிதாக அனைத்தையும் ஆரம்பிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டவர்களாக இருக்கக் காணப்படுகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து அரச தரப்பில் முடிவெதுவும் எடுக்கப்படாதிருந்த வேளையிலேயே வடக்கே விரிவான முறையில் விடுதலைப் புலிகள் தமது மாவீரர் வாரத்தை அனுஷ்டித்திருந்தனர்.

புலிகளின் மாவீரர் வார அனுஷ்டானம் அவர்களது போராட்ட நடவடிக்கைகளை மேலும் உரமூட்டும் வகையிலும், அவர்களது நிலைப்பாட்டை பறைசாற்றும் விதத்திலுமே கொண்டாடப்பட்டதாக இருக்கின்றன.

வடக்கே- திரும்புமிடமெல்லாம் போராட்டங்களில் கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க போராளிகளின் பல்வேறு வடிவத்திலுமான உருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்ச்சிகள் விரிவான முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

உயிரிழந்த புலிகள் இயக்கப் போராளிகளைக் கௌரவிக்கும் வகையில் அனுஷ்டிக்கப்படும் மாவீரர் வாரக் கொண்டாட்டம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினத்தையும் அண்டியதாகவே இருக்கின்றது.

இந்நிலையில் கடந்த சில வருடங்களாக மாவீரர் வாரக் கொண்டாட்டம் நிறைவு பெறும் நவம்பர் 26ந் திகதி- அதாவது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினத்திலன்றே அவ்வியக்கத்தின் கொள்கை விளக்கமும் வெளியிடப்படுவது வழக்கமாக இருந்து வருகின்றது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 12ந் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தமது இராணுவ ரீதியிலான பலத்தை நிரூபிக்கும் வகையில் பூநகரி இராணுவ முகாம்மீது பாரிய தாக்குதலொன்றைத் தொடுத்திருந்தனர்.

'ஒப்பரேஷன் தவளைப் பாய்ச்சல்' என்ற பெயரில் இடம் பெற்றிருந்த இத்தாக்குதல் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஒரு மாபெரும் தாக்குதலாகவே விளங்கியிருந்தது. இத் தாக்குதல் அவர்களது இராணுவ வல்லமை, கட்டுக்கோப்பு, கொள்கைப் பிடிப்பு ஆகியனவற்றை ஒருங்கே பிரதிபலிப்பதாகவும் விளங்கியிருந்தது.

தரை மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் புலிகள் இயக்கப் போராளிகள் பூநகரி மீது தாக்குதலைத் தொடுத்து பல நூற்றுக்கணக்கான இராணுவ சிப்பாய்களைக் கொன்றிருந்ததுடன் அவர்களது ஆயுதங்களையும் அபகரித்துச் சென்றிருந்தனர்.

இத் தாக்குதலில் புலிகள் தரப்பிலும் உயிர்ச் சேதம் பலமாகவே இருந்தது. ஆயினும் இலக்குத் தவறாத விதத்தில் கனகச்சிதமான முறையில் பூநகரியில் ஆயுதப் படையினரை அவர்கள் ஆட்டங்காணச் செய்திருந்தனர்.

இத் தாக்குதலையடுத்து கடந்த ஆண்டில் இடம்பெற்ற 'மாவீரர் வார'க் கொண்டாட்டத்தின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் தமது இயக்கத்தின் கொள்கை விளக்க உரையை வெளியிட்டிருந்தார்.

அதில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை எந்த ஒரு சக்தியினாலும் அடக்கிவிட முடியாது என அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டதுடன், புலிகளது பேச்சுவார்த்தைகள் மூலமான அணுகுமுறைகளுக்கு எந்த வகையிலும் அரச தரப்பினர் சாதகமான பங்களிப்பை வழங்கவில்லை எனவும் திரு.பிரபாகரன் கூறியிருந்தார்.

1984ம் ஆண்டு இந்தியாவின் அனுசரணையுடன் பூட்டான் தேசத்தின் தலைநகரான திம்புவில் இடம்பெற்ற- இலங்கை அரசுக்கும் தமிழ் அமைப்புகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் முதற்கொண்டு கொழும்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள்வரை எதுவித அனுகூலமான தீர்வும் கிட்டவில்லை என்று திரு.பிரபாகரன் தமது கொள்கை விளக்க உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இது தவிர தமது இயக்கத்தினர் சமாதானக் கதவுகளைத் திறந்து வைத்திருப்பதாகவும், எவ்வேளையிலும் தமது தரப்பினர் அரசியல் ரீதியிலான பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருப்பதாகவும் திரு.பிரபாகரன் தமது உரையில் மேலும் கூறியிருந்தார்.

முன்னைய ஆட்சியாளர்களின் தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்த நிலைப்பாடு கடும் போக்கானதாகவே விளங்கியிருந்தது. எந்த வகையிலும் ஒரு நேர்த்தியான அரசியல் அணுகுமுறைகளை ஏற்படுத்தி புலிகளுடன் சமரசம் பேசுவதில் கடந்தகால ஆட்சியாளர்கள் ஆர்வங் காட்டியிருக்கவில்லை.

மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார். ஆயினும் அப் பேச்சுக்களின்போது புலிகளும், அரச தரப்பினரும் ஆராய்ந்த விடயங்கள், மற்றும் அவர்கள் ஏற்றுக்கொண்ட விடயங்கள், ஏற்றுக்கொள்ளப்படாத விடயங்கள் என்பன பற்றி எவருக்கும் எதுவுமே தெரிந்திருக்கவில்லை.

இறுதியாக இரு சாராருமே திடுதிப்பென மோதலில் குதித்து தமது தொடர்புகளைத் துண்டித்துக்கொண்டிருந்தனர். 1990ம் ஆண்டு பேச்சுக்களை முறித்துக்கொண்ட நிலையில் மோதல்களில் குதித்த புலிகளும், அரச தரப்பினரும் இன்றுவரை ஒரு முடிவற்ற கெடுபிடி யுத்தத்தையே நடத்திவரக் காணப்படுகின்றனர்.

ஆனால் ஒரே ஒரு மாற்றம் மட்டுமே காணப்படுகின்றது. அரச தரப்பில் ஆட்சியதிகாரங்களைக் கொண்டிருப்பவர்கள் தற்போது புதியவர்களாக இருப்பதே அந்த மாற்றமாக இருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமையிலான புதிய அரசாங்கம் தற்போது முழு அளவிலான ஆளுமையைக் கொண்டதாக இருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா ஆட்சிப் பீடத்தில் முக்கிய நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருப்பதுடன் முப்படையினதும் பிரதம தளபதி என்ற அந்தஸ்த்திலும் இருக்கின்றார்.

இந்நிலையில் அரசியல்- இராணுவ நடவடிக்கைகளை நன்கு எடைபோட்டுச் செயலாற்றக்கூடிய சந்தர்ப்பங்களைக் கொண்டவராகவே அவர் காணப்படுகின்றார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் பின்னணி பற்றி அண்மையில் பத்திரிகையொன்றில் கட்டுரையொன்று வெளியாகியிருந்தது.

அக் கட்டுரையில் 'சந்திரிகா வெறுமனே, இலங்கையின் இரு முக்கிய அரசியல் பிரமுகர்களின் வாரிசு மட்டுமல்ல, தமது சொந்த வாழ்க்கையிலும் சிறு பிராயம் முதற்கொண்டு அரசியல் ரீதியிலான, நடவடிக்கைகளில் தீவிர அக்கறை காட்டிய ஒருவர்' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

சந்திரிகா பிரான்ஸில் உள்ள பல்கலைக்கழகமொன்றில் உயர் கல்வி பயின்றவர். அத்துடன் பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் இருந்து வெளிவரும் லே மொன்டே (LE MONDE) என்ற பிரபல பத்திரிகையிலும் ஒரு பத்திரிகையாளராகக் கடமையாற்றியிருந்தார்.

70ம் ஆண்டுகளின் ஆரம்பகாலப் பகுதியிலேயே சந்திரிகா பிரான்ஸில் தங்கியிருந்தார். அச்சமயம் சர்வதேச அரங்கில் வியட்நாம் போர் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.

அமெரிக்கா தனது பிராந்திய ஏகாதிபத்தியத்தை நிலை நிறுத்த வியட்நாமில் ஒரு விரிவான யுத்தத்தை அப்போது நடத்திக்கொண்டிருந்தது.

அமெரிக்காவின் இந்த யுத்த நடவடிக்கைகளையும், வியட்நாமில் அதன் பிரசன்னத்தையும் கண்டித்து பிரான்ஸில் அன்று கண்டன நடவடிக்கைகளும் இடம்பெற்றிருந்தன.

பல்வேறு அமைப்புகள் வீதிகளில் இறங்கி அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை பிரான்ஸில் நடத்தியிருந்தன. இவ்வாறு ஆர்ப்பாட்டங்களை நடத்திய அமைப்புகளுடன் சந்திரிகாவும் அன்று சேர்ந்திருந்தார்.

பாரிஸில் இடம்பெற்ற அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவராக சந்திரிகா வீதியில் இறங்கிக் கோஷமிட்டிருந்தார்.

> **நிறைவேற்று அதிகாரத்தில் இராணுவ பலத்தைவிட, அரசியல் பலத்துக்கே முன்னுரிமை அளிக்கவேண்டியநிலை!**

பின்னர் பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட நிலையில் சந்திரிகாவும், ஏனைய ஆர்ப்பாட்டக்காரர்களும் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் இயல்பாகவே சந்திரிகாவிடம் காணப்படும் ஏகாதிபத்தியத்துக்கெதிரான போக்கு, மற்றும் நியாயமான சுதேசியப் போராட்டத்தை ஆதரிக்கும் தன்மை ஆகியனவற்றை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன.

கடந்தகாலங்களில் இலங்கை அரசு தமிழ் போராட்ட அமைப்புக்கள் அனைத்தையும் முழு அளவில் தடை செய்து, அவற்றுக்கெதிராக இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்தவேளை, சந்திரிகா தமது மறைந்த கணவர் விஜயகுமாரதுங்கா சகிதம் சென்று தமிழ் அமைப்புக்களின் தலைவர்களைச் சந்தித்திருந்தார்.

விஜயகுமாரதுங்கா, சந்திரிகா ஆகியோரின் தமிழ் அமைப்புகளுடனான அச் சந்திப்பே அன்று தென்னிலங்கையில் தமிழ் அமைப்புக்கள் குறித்து மக்களிடையே ஒரு தெளிவை ஏற்படுத்துவதாக விளங்கியிருந்தது.

சந்திரிகாவின் மறைந்த கணவர் விஜயகுமாரதுங்கா தமிழ்ப் போராளிகளை ஏற்றுக்கொண்டதுடன் அவர்களது ஆயுதப் போராட்டமும் நியாயமானதே என்பதனை ஏற்றுக்கொண்டிருந்தார்.

இலங்கையில் இன்று 'சர்வ அதிகாரங்க'ளையும் கொண்டவராக ஜனாதிபதி சந்திரிகா விளங்குகின்றார்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாமை எவ்வாறு பந்தாடியிருந்தது என்பதை, பிரான்ஸில் ஒரு மாணவியாக இருந்தபோது நன்கறிந்தவரே சந்திரிகா.

அமெரிக்காவின் யுத்தக் கெடுபிடி நடவடிக்கைகளை எதிர்த்து அவர் அன்று பாரிஸ் நகர வீதிகளில் இறங்கியும் ஆர்ப்பாட்டஞ் செய்திருந்தார்.

இன்று சந்திரிகாவின் தகுதி வேறு; அவர் ஒரு நாட்டின் தலைவியாக இருக்கின்றார். அதுவும் முக்கிய தீர்மானங்களை எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய வாய்ப்புகளை நிறையவே கொண்டவராகவும் அவர் இருக்கின்றார்.

இன்று வடக்கு-கிழக்கு யுத்த நிலவரமும் ஏறத்தாழ வியட்நாமிய யுத்த நிலவரங்களைத் தழுவியவையாகவே இருக்கின்றது.

போர்ச் சாதனங்களும், போர் வீரர்களுமாக கடந்த ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக வடக்கு-கிழக்குப் பிரதேசம் போரினால் சின்னாபின்னமடைந்திருக்கக் காணப்படுகின்றது.

கடந்த வாரம் வடக்கே இடம்பெற்ற 'மாவீரர் வார'த்தை தமிழீழ விடுதலைப் புலிகள் விரிவாக ஒழுங்கு செய்திருந்தனர். அம் மாவீரர் வாரம் குறித்து இலங்கையின் முப்படைகளுமே உஷார் அடைந்திருந்தன.

புலிகள் இந்த 'மாவீரர் வார'க் காலப் பகுதியில் பெரும் தாக்குதல்கள் எதனையும் மேற்கொள்ளலாமென்ற பீதி படையினர் தரப்பில் நிலவியிருந்தது.

எனவே இலங்கையில் இன்று பீதியும், சந்தேகங்களும் நிறைந்த தெளிவற்ற ஓர் அரசியல் சூழ்நிலை நிலவுவதனையே காணக்கூடியதாக இருக்கின்றது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி பிரமாண்டமான வகையில் வெற்றியீட்டியிருந்தது.

நிரந்தர சமாதானம், மற்றும் அரசியல் ஸ்திரப்பாடு ஆகியனவற்றை நாட்டு மக்கள் ஏகோபித்த முறையில் வேண்டி நிற்பதனையே சந்திரிகாவின் ஜனாதிபதித் தேர்தல் வெற்றி விளக்கியிருந்தது.

நாட்டில் வடக்கு-கிழக்குப் பிரச்னையே கொடிய போருடன் கூடிய ஒரு பெரும் நெருக்கடியாக இருந்து வருவதை அனைவரும் நன்கறிவர்.

ஜனாதிபதி சந்திரிகா உளப்பூர்வமாகவே போரை வெறுப்பவராகவும், அரசியல் நடவடிக்கைகளிலேயே உண்மையில் ஆர்வங் கொண்டிருப்பவராகவுமிருந்தால், முதலில் அவரே செயலில் இறங்கவேண்டியவராகின்றார்.

வடக்கு-கிழக்கு பிரச்னையைப் பொறுத்தவரை அப்பிரதேசங்களில் நீடித்துவரும் யுத்தத்துக்கே முதலில் முடிவு கட்டப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

அரச தரப்பினர், சந்தேகங்கள், மற்றும் அநாவசியமான ஐயப்பாடுகள் என்பவற்றைத் தவிர்த்து வடக்கு-கிழக்கில் போர் நிறுத்தம் குறித்து உறுதியான முடிவுகளை எடுக்கவேண்டியவர்களாகின்றனர்.

'போர் நிறுத்தம்' குறித்து அழுத்தம் திருத்தமான முடிவுகளை எடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளும், அரச தரப்பினரும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரும் பட்சத்திலேயே நிரந்தர சமாதானத்தை நோக்கிய அரசியல் அணுகுமுறைகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்.

அடுத்த ஆண்டு ஜூலை மாதத்துடன் இலங்கையில் புதிய அரசியல் அமைப்பொன்றைக் கொண்டு வந்து, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கவிருப்பதாக நீதி மற்றும் அரசியலமைப்பு விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாகூட இந்த அரசியல் அமைப்பு மாற்றம் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ரத்துச் செய்வது தொடர்பாக முழு நாட்டுக்குமே தமது வாக்குறுதியை வழங்கியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்டிருந்த அசுரத்தனமான அம்சங்கள் காரணமாகவே இன்று வடக்கு-கிழக்கு நிலவரமும் மோசமான கெடுபிடி யுத்தத்தைக் கொண்டதாக இருக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை நிராகரிப்பதில் ஜனாதிபதி சந்திரிகா ஆர்வங்கொண்டிருந்தால், அந்த ஆட்சி முறையின் விளைவாக இன்று வடக்கு-கிழக்கில் உருவாகியுள்ள யுத்த நிலவரத்துக்கும் அவர் முடிவு கட்டவேண்டியவராகின்றார்.

இந்நிலையில் அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பலம் பொருந்தியவராக இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா, வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வு தொடர்பாக தமது அரசியல் ரீதியான பலத்தையே நிரூபிக்க வேண்டியவராகின்றார்.

இதன் மூலமே அவர் அடிக்கடி தம்மிடம் இருப்பதாகக் கூறிக்கொள்ளும் மனிதாபிமானம், திறந்த மனத்துடன் சிந்திக்கத் தெரிந்த பண்பு, முற்போக்கான அணுகுமுறைகள் என்பவற்றை செயலிலும் காட்ட முடியும்.

இல்லையேல் இன, மத, வர்க்க, பிரதேச வேறுபாடுகளுடன் காணப்பட்ட இலங்கையின் முன்னைய ஆட்சியாளர்களிலிருந்தும் வேறுபட்டிராத ஒருவராகவே ஜனாதிபதி சந்திரிகாவும் இலங்கை அரசியலில் இடம்பிடிப்பார்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ விந்தைகள்

## விதைகளினால் ஏற்படும் விளைவுகள்!



**பொ**துவாக பருப்பு மற்றும் கடலை போன்ற விதைகளை உணவில் சேர்ப்பதனால் பல நோய்களை நம் உடம்பில் அணுகவிடாது ஆற்றல் பெருகுகிறது. நம் நாட்டில் கிடைக்கும் கடலை வகைகள், பருப்புக்கள் தேகாரோக்கியம் பெற உதவுகின்றன. சில குறிப்பிட்ட நோய்களைக் கண்டிக்கும் ஆற்றலுள்ள விதைகளைப் பற்றிய சிறப்பம்சங்களை இங்கு தருகிறோம்:

• **நிலக்கடலை அல்லது கச்சான் கொட்டை:** இதனை வேர்க் கடலை என்றும் கூறுவார்கள். தினசரி சிறிதளவு அவித்து உண்டு வந்தால் ஞாபக சக்தி பெருகும். நாடி நரம்புகளுக்கும் வலிமை தர வல்லன. உயர் இரத்த அழுத்தத்தையும் குறைக்கும்.

இதனை வறுத்து உண்பதைவிட, கோதோடு அவித்தபின் கோது நீக்கி, உள்ளிருக்கும் கருஞ் சிவப்புத் தோலுடன் உண்பதே நல்ல பலனளிக்கும்.

• **வாதாம் பருப்பு:** நெஞ்செரிவுக்கு உகந்த விதை இது. சாதாரணமாக வெளிக் கோதை நீக்கி வெறுமனே உண்ணலாம். இள வெய்யிலில் உலர வைத்தும் உண்ணலாம். உடலின் வனப்பினை அதிகரிக்கவும் இப் பருப்பினால் முடியும். மது போதையினை நீக்கவும் நல்ல மருந்து இது.

• **வால் நட்ஸ்:** எனப்படும் வாதுமை வகைப் பருப்புமுண்டு. இதுவும் உயர் இரத்த அழுத்தத்தைக் குணமாக்க வல்லது.

• **பெக்கான்ஸ்:** எனப்படும் அமெரிக்க நாட்டு வாதுமை வகை விதைகள் உறுதியான எலும்புகளைப் பெற உதவுகிறது.

• **செம்பருப்பு சிந்துர விதை:** இவை உடல் புஷ்டிக்கும் தாது விருத்தி, வீரியத்துக்கும் ஏற்றவை. நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிப்பதுடன் தசை நார்களுக்கும் உறுதி அளிக்கவல்லன.

## மருந்தாகும் மீன்

**ம**னிதர்களுக்கு இருதய நோய் ஏற்படுவதற்கு காரணமாக அமையப் பெறும் எல்.டி.எல் கொலஸ்ட்ரோலின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் ஆற்றல் மீன் உணவில் அடங்கப் பெற்றுள்ளதாக அமெரிக்க வைத்திய ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எல்.டி.எல். கொலஸ்ட்ரோல், மனித இரத்த நாளங்களில் உறையப்பெற்று அவற்றின் செயற்பாட்டிற்கு இடையூறு ஏற்படுத்துவதோடு இருதய நோய், பாரிச வாதம் போன்ற நோய்கள் ஏற்படுவதற்கு உந்து சக்தியாக அமையப் பெறுவதாக குறித்துக்காட்டும் இவ் வைத்தியர்கள், மீன் உணவில் அடங்கப்பெறும் ஒமேகா-3 எனப்படும் ஜீவ பதார்த்தம் மனித உடலுக்கு தீமையற்றதாகவும் எல்.டி.எல் கொலஸ்ட்ரோலை கரைக்கச் செய்யும் ஆற்றலையும் கொண்டு விளங்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவை தவிர, நெதர்லாந்தின் பொது சுகாதார தேசிய நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், தினந்தோறும் 20 கிராம் மீன் உணவை உட்கொண்டு வந்த மக்கள் மத்தியில் இந்த இருதய நோயின் தாக்கம் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளன.

## யாருக்கு அதிக தூக்கம் தேவை?



**ந**மது குடும்ப உறுப்பினர்களுள் யாருக்கு அதிக நேரம் தூக்கம் தேவை? எங்கே கூறுங்கள் பார்க்கலாம்!! நீங்கள் யாரைக் குறிப்பிடப் போகிறீர்களோ தெரியவில்லை.

ஆனால் அமெரிக்காவில் உள்ள கோணல் பல்கலைக்கழகத்தின் வைத்தியப் பேராசிரியர் திரு.ஜேமிஸ் மாஸ்ட் யாரைக் கூறுகிறார் தெரியுமா? 17 வயதிற்கும் 25, வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கே அதிக நேரம் தூக்கம் தேவை என்று குறிப்பிடுகிறார்.

மேலும் அவர் இதுபற்றி குறிப்பிடுகையில், இவ் வயதிற்கிடைப்பட்ட காலப் பகுதியிலேதான் மாணவர்கள் அதிகமாக மூளையை வருத்தி கல்வியை பயின்று வருவதால் அவர்களின் நாளாந்த ஆரோக்கிய வாழ்வுக்கு குறைந்த பட்சம் 10 மணித்தியால நேரமாவது நித்திரை கொள்வது மிக மிக அவசியம் என்று தான் மேற்கொண்டிருந்த ஆய்வின் முடிவை மாணவர் சமுதாயத்திற்கு வலியுறுத்தி கூறியுள்ளார்.

பேராசிரியர் ஜேமிஸ் மாஸ்ட் அவர்களின் மருத்துவ ரீதியான இக் கருத்தை நாம் மறுப்பதற்கில்லைதான்.

இருந்தும் நமது சமுதாயத்தை பொறுத்தவரை அவர் குறித்துக் காட்டியுள்ள வயதெல்லைக்கு உட்பட்ட மாணவ மாணவிகள் மாத்திரமல்ல அதற்கு குறைந்த வயதைக்கொண்ட மாணவ, மாணவிகள்கூட கூடுதல் நேரம் நித்திரை விழித்து பாடங்களை படித்து வரும் காட்சியை நாம் நாளாந்தம் காணக்கூடியதாக இருந்து வருகிறது.

### 'மூளை' என்றால் பிரியமா?

**மா**சடைந்த சூழலில் வளரப் பெறும் நாம் உண்ணும் விலங்கினங்களின் நாளாந்த உணவில் சாரப் பெற்றுவரும் விஷத் தன்மை ஏனைய பகுதிகளைவிட ஈரல் கிட்னி போன்ற அவயங்களிலேயே கூடுதலாக இருக்கக் காணப்படுகிறது. இந்த அவயங்களை உட்கொள்ளும் மனிதர்களுக்கும் இவ்விஷத்தின் கூறுகள் உட்செல்வதற்கு வாய்ப்புள்ளதைக் கண்டறியப்பட்டுள்ளது. தவிரவும் விலங்கினத்தின் மூளைப் பகுதியே அதிகமான கொலஸ்ட்றோரை கொண்டுள்ளது இக் கொலஸ்ட்ரோல் மனித உடலுக்கு எந்த நன்மையும் விளைவிக்க மாட்டாது.

## 'ஆம்' என்றால் சிறந்த வைத்தியரை நாடுங்கள்!



**கீ**ழ்க்காணும் வினாக்களில் ஒன்றுக்கோ அல்லது பலவற்றிற்கோ நீங்கள் 'ஆம்' என பதிலளிப்பீர்களானால் நாட்களைக் கடத்தாமல் சிறந்த வைத்தியர் ஒருவரை அணுகி ஆலோசனை பெறுவது அவசியமாகும்.

1. அயர்ந்த நித்திரைக்கு உங்களுக்கு இரு தலையணைகளுக்கு மேல் தேவைப்படுகிறதா?
2. ஒரு வாரகால இடைவெளிக்குள் இரு தடவைக்கு அதிகமாக உங்களின் காற் தசைகளில் புரள்வு ஏற்படுகிறதா?
3. உடற்பயிற்சி அல்லது உடல் வருந்தி வேலையிலீடுபட்ட பின்பு உடல் குளிரானதும் இளைப்போ அல்லது இழுப்போ அல்லது சுவாசச் சிரமமோ ஏற்படுகிறதா?
4. தடிமலோ, காய்ச்சலோ ஏற்படாத நிலையில் சில நிமிடங்களுக்கிடையிலேயே இருமல் ஏற்படுகிறதா?
5. மூன்றடிக்கு அப்பால் உள்ள மெழுகுவர்த்தியொன்றை ஊதியணைப்பது உங்களுக்கு கஷ்டமாக தென்படுகிறதா?
6. சிறிது தூரம் ஓடும் பொழுது அல்லது வேகமாக நடக்கும் பொழுது இருதயம் வழக்கத்திற்கு மாறாக வேகமாக இயங்குகிறதா அல்லது சிரமம் ஏற்படுகிறதா அல்லது நெஞ்சில் நோவு தோன்றுகிறதா?
7. நாளாந்த உடற்பயிற்சி அல்லது உடல்வருந்திய வேலையில் ஈடுபட்டு வரும் உங்களுக்கு திடீரென அந்த அளவில் தொடர்ந்து மேற்கொள்ள முடியாமல் இருக்கிறதா? அல்லது சிறிது நாட்களாக உடல் இயக்கத்தில் வேறுபாடு தென்படுகிறதா?

## நெஞ்சத்தைத் தொட்ட அஞ்சல்



ஒன்பது வயது போஸ்னிய சிறுமிக்கு 'இளைஞர்களுக்கான கடித எழுத்தாளர்' பரிசு கிடைத்துள்ளது. அதில் இவள் எழுதியுள்ள கடிதத்தில் இருந்த வாசகங்கள் என்ன தெரியுமா?

**"என்னருமை ஆங்கில நண்பர்களே! இரண்டு வருடத்துக்கு முன்னால் அமைதி அகன்று, மகிழ்ச்சி மறைந்துபோனது ஏனென்று எனக்குத் தெரியவில்லை. மக்கள் மகிழ்ச்சியாகவே இல்லை. அவர்கள் முகத்தில் புன் சிரிப்பும் இல்லை. முன்பிருந்தது போன்ற அழகும் அவர்களுக்கு இப்போது இல்லை. முதியவர்கள் தங்கள் பேரப் பிள்ளைகளோடு அடிக்கடி நடந்து செல்வதைப் பார்க்கும் போதெல்லாம் நான் வேதனைப்படுகிறேன். என்னுடைய தாத்தா, பாட்டி ஒருவேளை உயிரோடு இருக்கிறார்களோ என்றும், என்றாவது ஒருநாள் அவர்களைப் பார்ப்பேனா, என்றும் எனக்குத் தெரியவில்லை"**

இதுதான் அந்த கடித வாசகம். இதில் அப்படியென்ன இருக்கிறது? இரண்டு வருடங்களுக்கு முன்பு நடந்த போஸ்னியப் போரின் பயங்கரத்தால் அமைதி இழந்து, பல குடும்பத்தினர் சிதறி ஓடினார்கள். ஓடியவர்கள் நிலை என்ன ஆனது என்றே தெரியவில்லை. இனி இப்படிப்பட்ட நிலை வரக்கூடாது என்பதை இந்தக் கடிதத்தைப் படித்த பிறகாவது உணர்ந்துகொள்ளமாட்டார்களா என்பதற்காகவே இதை எழுதினாளாம்! போரின் பயங்கரம் பிஞ்சு மனதின் நெஞ்சிலும் வெறுப்பை உண்டாக்கி இருக்கிறதே!

## உங்கள் மனைவி உதைத்தாரா?



**பெ**ண்ணடிமைத்தனத்திற்கு எதிராக குரல் கொடுக்கப்பட்டு வருகிறது. கொடுக்கப் படத்தான் வேண்டும்!

பெண்களால் கொடுமைப்படுத்தப்படும் ஆண்களை யார் கவனித்து குரல் கொடுக்கிறார்கள்..? இது படு மோசமாக பாதிக்கப்பட்ட ஆண்களின் சோகக் குரல்.

இந்த சோகக் குரல் இந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் உள்ள சட்டத்தரணி ஏ.ஆர்.சிங் என்பவரின் காதில் விழுந்துவிட்டது.

உடனே காரியத்தில் இறங்கி 'கர்நாடக மாநில கணவர்கள் நலச் சங்கம்' ஒன்றை உருவாக்கிவிட்டார். மனைவிகளால் கொடுமைப் படுத்தப்படும் ஆண்கள் நாடினால் சட்ட உதவி மற்றும் தேவையான உதவிகள் செய்ய சங்கம் ரெடியாக இருக்கிறதாம். **முகவரி–**

இலக்கம்: 2315 மகடிரோடு தபால் கந்தோர்,
பெங்களூர்–560621
கர்நாடகா. இந்தியா.

ஏதோ எம்மால் முடிந்த உதவியாக முகவரியையும் வெளியிட்டாச்!

## இளஜல் — டைசன் நீயுமா?



**அ**ழகிகளோடு நின்று போஸ் கொடுப்பதில் பூரித்துப் போயிருப்பவர் மைக் டைசன்.

குத்துச்சண்டை வீரர் மைக் டைசன் தற்போது சிறைக்குள் கம்பிகளை எண்ணிக் கொண்டிருப்பது தெரிந்த சமாச்சாரம்தான்.

ஏன் உள்ளே இருக்கிறார் என்று இதுவரை அறியாத யாராவது இருந்தால் அவர்களுக்கு மட்டும் இந்தத் தகவல்; 1991 ஜூலை மாதம் நடந்த கறுப்பு அழகு ராணிப் போட்டியைப் பார்வையிட டைசனையும் அழைத்தார்கள்.

டைசனுக்கு பெண்கள் என்றால் பிரியம் கொஞ்சம் அதிகம். குறைந்தபட்சம் தொட்டுப்பார்க்க என்றாலும் டைசனுக்கு ஆசை வரும்.

அன்றும் அப்படித்தான் மேடையிலேயே கறுப்பு அழகிகளை அங்கே இங்கே கிள்ளத் தொடங்கி விட்டார். சரி, பெரிய பிரபலமாச்சே என்று அவர்களும் நெளிந்து, வளைந்து சகித்துக் கொண்டார்கள்.

போட்டியில் கறுப்பு அழகு ராணியான 18 வயது அழகிமீது டைசனுக்கு கண்.

போட்டி முடிய ரூமுக்கு அழைத்தார்– அழகி போனாள்.

உள்ளே என்ன நடந்ததோ தெரியவில்லை. அழகி சொல்லுகிறாள் மைக் டைசன் தன்னை பலாத்காரமாக.......

டைசன் மறுக்கிறார். அழகியிடம் நிருபர்கள் கேட்டார்கள் "நீ ஏன் அவர் அறைக்குப் போனாய்?"

"அவரது ரசிகை நான். அவரிலே மதிப்பு வைத்திருக்கிறேன். அழைத்தார். போனேன். வேறொன்றுக்குமல்ல சும்மா பேசி விட்டு வரமட்டும்!"

என்கிறார் அழகி.

டைசனிடம் கேட்டார்கள், "மிஸ்டர் டைசன்! அவளை எதற்காக தனித்து உங்கள் அறைக்கு அழைத்தீர்கள்?"

"ஏன் அழைக்கக்கூடாதா? நான் பெண்களை நேசிக்கிறேன். என் அம்மாவும் ஒரு பெண் தானே?"

டைசன் சொன்னதை யாரும் நம்பவில்லை. நீதிபதி சுத்தமாக நம்பவில்லை. முடிவு– சிறைவாசம்.

எல்லாம் சரி இப்போது அதனை நினைவூட்டக் காரணம் என்ன? படம்– புகைப்படம்!

மைக் டைசன் சிறை செல்ல காரணமான கறுப்பு அழகுராணிப் போட்டியும், அதில் அழகிகள் மத்தியில் நிற்கும்– குறிப்பாக தனக்கு பிடித்த அழகியருகே நின்று கொண்டிருக்கும் படம் ஒன்று கிடைத்தது.

அதையும் உங்கள் பார்வைக்கு தருவதோடு பழைய சம்பவத்தையும் கிளறிச் சுருக்கமாக சொல்லியாகிவிட்டது.


www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# இந்த உயரம் போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா?

அமெரிக்காவிலுள்ள உயரமான இளைஞர்களில் அதி உயரமானவர் ஆண்டி சாள்ட்டன். 20 வயதுடைய இந்த இளைஞர் தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கிறார். தற்போது 7 அடி 4 அங்குல உயரமுடைய ஆண்டி, 8 அடி 4 அங்குலம்வரை வளர்வதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இவர் உயரமாக இருப்பதனால் பல இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலுள்ளார். இவர் தனது வீட்டில் தனக்குரிய அறையை விட்டே வேறு இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையிலுள்ளார்.

இவருக்கான தளபாடங்களை இவருடைய பெற்றார் இவருடைய அறையில் வைத்துள்ளனர். படுப்பதற்கான கட்டில், மேசை நாற்காலிகள் போன்றவையும் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ளன. இவருடைய 'டாட்சன்' மோட்டார் காரின் சாரதிக்கான இருக்கை அகற்றப்பட்டு



நீளமான கால்கள். பின் இருக்கையே இவருக்கு வசதி- வண்டி ஓட்ட

## அப்படிப் பார்க்காதீங்க எனக்கு வெட்கமாக இருக்கு!

பின் ஆசனத்திலிருந்த வண்ணமே இவர் வண்டியைச் செலுத்துகிறார். இவருடைய ஆடைகளும் பாத அணிகளும் பிரத்தியேகமாக அவ்வப்போது தயாரிக்கப்படுகின்றன.

உறவினர் வீடுகளுக்குக்கூட இவர் செல்ல முடியாதிருக்கிறார். அந்த வீடுகளுக்குச் செல்லும்போது அவருடைய தலையில் மின் விசிறிகள் பல தடவைகள் முட்டியிருப்பதாகக் கூறுகிறார். திரை அரங்குகளுக்குச் சென்று திரைப்படங்களைப் பார்த்து இரசிக்க வேண்டுமென்றால் இவருக்கு அனுமதி வழங்க திரையரங்க நிர்வாகிகள் மறுக்கின்றனர். ஆண்டிக்கேற்ற ஆசன வசதி இல்லாதமை ஒருபுறமிருக்க, படம் பார்க்க வருவோர் திரையில் கவனம் செலுத்தாமல் ஆண்டியையே பார்க்க ஆரம்பித்துவிடுவார்களாம்.

மற்றுமொரு வேதனை இளைஞர் ஆண்டியை ஆட்டிப்படைக்கிறது. தன்னை ஒத்த இளைஞர்கள் தங்கள் பெண் சிநேகிதிகளுடன் 'ஹை'யாக-கை கோர்த்து உலவுதல் போல் தனக்கு வாய்ப்புக்கிட்டவில்லையே என்று ஏங்குகிறார். இவருடன் நெருங்கிப் பழகும் இளம் பெண்களும் ஆண்டியுடன் எங்குமே தலைகாட்டப் பயப்படுகிறார்களாம். இவர்களைப் பார்ப்பவர்கள் சுற்றி வளைத்து நின்று கேலியும் கிண்டலும் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள் என்ற அச்சம் தான் இதற்கான காரணம்.

புதிதாக ஆண்டியைக் காணும் எவரும் தன்னை உற்றுப் பார்க்கும் போது தனக்கு மிகவும் கூச்சம் ஏற்பட்டு விடுவதாக அவர் கூறுகிறார். வேறு பலர் இவர் உயரமாக-வான மண்டலத்தை எட்டக்கூடியவராகக் கணித்து "கால நிலை எப்படி இருக்கிறது" என்று கிண்டல் செய்யும்போது மிக மிகக் கவலை ஏற்படுவதாகத் தெரிவிக்கிறார்.

ஆண்டி சாள்ட்டனை பரிசீலனை செய்யும் மருத்துவர்கள் அவர் நூற்றுக்கு நூறுவீதம் சுகதேகியாக இருப்பதாகக் கூறுகின்றனர். கலிபோர்னியாவிலுள்ள றெட்லாண்ட்ஸ் தான் ஆண்டியின் வசிப்பிடம்.




'ஆண்டி' கன்னத்தில் முத்தமிட காரிகைக்குத் தேவை ஒரு ஏணி

# மென்மையான தூரிகை உறுதியான ஓவியர்!


பெல்ஜியம் நாட்டில் பிறந்து தற்போது அமெரிக்காவில் கலிபோர்னியாவில் வசிக்கும் ஜீன் மிக்கலாஸ்கி என்னும் இளைஞர் இன்று ஒரு சிறந்த ஓவியராக மேற்குலக நாடுகளில் மதிக்கப்படுகிறார். இரு கைகளையும் புயத்தோடு இழந்த ஜீன் தனது கால்களையும் வாயையும் பயன்படுத்தி அழகழகான ஓவியங்களை வரைகிறார்.

ஜீன் தன் ஒன்பதாவது வயதில் ஒரு உயர்ந்த கம்பத்தில் விளையாட்டாக ஏறினார். அதன் உச்சியினை எட்டியபோது சம நிலை தளர்ந்தார். இருபதடி உயரமான அந்த கம்பத்தின் அருகே தென்பட்ட உயரழுத்த மின் கம்பிகளை அவருடல் தொட நேர்ந்தது. அவ்வளவுதான்-தரையில் விழுந்து சுருண்டார்.

பல நாட்கள் மருத்துவமனையில் நினைவிழந்து கிடந்த அவர் கண்விழித்துப் பார்த்தபோது அவருடைய இரு கைகளும் தோள் மூட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. விபத்தில் இறந்திருந்தாலே நலமாக இருந்திருக்குமே என்று அப்போதெல்லாம் எண்ணி வருந்துவாராம்.

தனக்கு ஏற்பட்ட விபரீதமான விபத்தின் பின் சில வருடங்களைச் சோகமாகக் கழித்த ஜீன், இன்று ஓய்வொழிச்சலின்றி சதா ஓவியம் வரைந்த வண்ணமிருக்கிறார். இவர் வரையும் ஓவியங்களில் உள்ள உயிரோட்டம் காரணமாக அவற்றை ஓவிய இரசிகர்கள் எவ்வளவு விலை கொடுத்தும் வாங்கிச் செல்கின்றனர்.

வெறுப்புணர்ச்சி காரணமாக பாடசாலைக்குக்கூடச் செல்லாதிருந்த ஜீனின் முகவரிக்கு-விபத்து நடந்து நான்கு வருடங்களின் பின்னர் ஒரு கடிதம் வந்து சேர்ந்தது. "வாய் மற்றும் காலால் ஓவியம்



## கையில்லாமல் போனாலென்ன சின்னையா வாயிருக்கு காலிருக்கு நல்லா கீறய்யா!

வரைவோர் சங்க'த்திலிருந்து அக்கடிதம் வந்திருந்தது. தன்னைப் போன்ற கைகளில்லாத ஓர் ஓவியர் தனது வாயினால் வரைந்த வாழ்த்து மடல் ஒன்று அக்கடிதத்துடன் இருந்தது. அத்துடன் புருசெல்ஸ் நாட்டிலுள்ள லிச்ரென்ஸ்ரீன் நகரில் தலைமையகத்தைக் கொண்ட அந்தச் சங்கத்தின் மூலம் ஓவியம் வரைதல் பயிலுவதற்கான 'ஆக்கடமி ரோயல் டெஸ் பியோக்ஸ்' என்ற இடத்தில் புலமைப் பரிசில் பெற்றுச் சேர்வதற்கான விண்ணப்பப் படிவங்களும் கிடைக்கப் பெற்றன. விண்ணப்பித்தார்-பயின்றார். அந்தக் கல்லூரியில் பயின்ற 250 ஓவியமாணவர்களில் ஜீன் மட்டுமே கைகள் இரண்டுமில்லாதவர்.

உடன் படித்த மாணவர்களோ ஆசிரியர்களோ எத்தகைய பாகுபாடும் காட்டாமல், ஜீனை அன்புடன் நடத்தியுள்ளனர். 4 ஆண்டுகள் பயிற்சி பெற்ற பின்னர் மிகச் சிறந்த-வாயால் ஓவியம் வரையும் ஓவியக் கலைஞராக ஜீன் உருவானார்.

ஐரோப்பாவெங்கும் பல ஓவியக் கண்காட்சிகளை நடத்தி புகழும் பணமும் சேர்த்த ஜீன் மிக்கலாஸ்கி தற்போது அமெரிக்காவில் பெரும் புகழாரம் பெறுகிறார். இவருக்குக் காலாலும் ஓவியம் வரையத் தெரியும். எனினும் இவர் தன் வாயால்-பற்களில் தூரிகையை



ஏந்தியே ஓவியம் வரைகிறார். ஒவ்வொரு வருடமும், தன்னை இந்நிலைக்குக் கொண்டு வர வழிகாட்டிய கைகளற்ற ஓவியர் சங்கத்திற்கு ஓவியம் வரைந்து அனுப்பி வைப்பார். அந்த ஓவியத்தை வாழ்த்து மடல்களில் அச்சுப் பதிவு செய்து அந்தச் சங்கம் உலகம் முழுவதும் அனுப்பி பொருளீட்டி, ஜீன் போன்ற ஓவியர்கள் உருவாவதற்கு உதவி வருகிறது.



## ஆச்சரியப் பூசணி

பிரிட்டனைச் சேர்ந்த பெர்னார்ட் லேவரி என்பவர் உலகத்திலேயே மிகப் பெரிய பூசணிக்காயை உற்பத்தி செய்து சாதனை படைத்தவர். மீண்டும் அதைப்போன்ற ஒரு பூசணிக்காயை உற்பத்தி செய்துள்ளார். அவருக்கு இப்படி உற்பத்தி செய்வது சாதாரணமாக உள்ளது. நமக்கு...? அடேங்கப்பாதான். இதன் எடை 450 கிலோ. இதற்காக சர்வதேச விருதைப் பெற்றுள்ளார் பெர்னார்ட் லேவரி.

## சீண்டலோ...இது சீண்டலோ?

முன்னாலே நிற்பது 'எலண்ட்' வகை ஆடு. அமெரிக்க புளோரிடா மாநிலத்தில் ஆடு பின்னால் அன்பை நாடும் தீக் கோழியார், இடைக்கிடையே தன் சொண்டினால் சீண்டிக் கொண்டிருந்தார். அந்தக் காட்சியை 'கமரா' கிளிக் செய்துவிட்டது. இனம் வேறு- நட்பை நாடும் குணம் ஒன்று.



www.padippakam.com

# அழகுக் குறிப்பு — செம்மைப்படுத்தும் பயிற்சிகள் சில

உடலின் ஒவ்வொரு உறுப்பும் அதற்குரிய அளவுப் பிரமாணங்களுக்கு அமைவாக இருப்பதுதான் அழகின் இலட்சணம். அததற்குரிய அளவுகளுக்குக் கூடுதலாகவோ குறைவாகவோ இருக்குமானால் அது அவலட்சணமாகி விடும்.

பெண்களுக்கு இந்த அளவுப் பிரமாணமே பிரதானமாகக் கருதப்படுகிறது. உரிய அளவில் ஏதாவதொரு அங்கம் அமையாமல், கூடியோ குறைந்தோ தென்படுமானால் அதுவே சில பெண்களின் மனோநிலையினைப் பெரிதும் பாதித்து விடும். இயற்கையாகவே தென்படும் அளவுகளை அவற்றுக்குரிய எளிய பயிற்சிகளின் மூலம் அளவுடையதாக ஆக்கிவிடமுடியும்.

ஒரு பெண்ணின் இடையின் கீழுள்ள பின்புற அழகுகள் (புட்டம்) அப்பெண்ணின் அழகுக்கு உறுதுணை புரிகிறது. பெண்களின் இடை- 'கொடி இடை'யாக இருக்க வேண்டும் என்றே பண்டைய புலவர்களும் பாடி வைத்துள்ளனர். புட்டம் மற்றும் இடை ஆகியவற்றின் அளவுப் பிரமாணங்களைச் சீர்படுத்தி அழகுடைய அவயவங்களாக மாற்றி அமைக்கவல்ல பயிற்சிகள் சிலவற்றை இங்கு தருகிறோம்:



• **அழுத்தம் கொடுத்தல்:** புட்டப் பகுதியிலுள்ள தசைநார்களை அடிக்கடி விறைப்பாக்குதல் வேண்டும். இதனால் இப்பகுதியில் காணப்படும் மேலதிகமான தசைகள் இறுகவும் சதைகள் கெட்டிப்படவும் முடியும். நாற்காலியிலோ தரையிலோ அமர்ந்திருக்கும்போதும் இதனைச் செய்யலாம். இருபகுதிகளையும் கையினால் அழுத்திப் பிசையவும். ஒரு தடவையில் ஒரு பகுதிக்கு 30 நொடிகள் இத்தகைய அழுத்தம் கொடுக்கலாம். இதனையும் சமயயோசிதப்படி அடிக்கடி செய்யலாம்.

• **படி ஏறுதல்:** மாடிப் படிகளில் ஏறிஇறங்குவதும் புட்டமிரண்டும் உரிய அளவினைப் பெற உதவும். இவ்வாறு படி ஏறி இறங்கும்போது புட்டத்திலுள்ள தசை நார்களை இறுக்கி விறைப்பாக்கிக் கொள்வதால் துரித பலன் கிடைக்கும்.

• **கெட்டிப்படுத்தல்:** கைகளையும் முழங்காலையும்- தவழுவது போல்- தரையில் ஊன்றிக் கொள்ளவும். வலதுகாலை பின்நோக்கி நேராக உயர்த்த வும். இடையின் உயரத்துக்கு மேலாக கால் உயரக்கூடாது. பின்னர் காலை முடக்கவும். இவ்வாறு 10 தடவைகள் செய்யவும். பின்னர் இடது காலுக்கு இதேபோன்ற பயிற்சியைக் கொடுக்கவும்.

• **வளைக்கவும்:** தவழும் நிலையிலிருந்த வண்ணம் முழங்காலை மேலே- 45 பாகை வரை வளைக்கவும். பின்னர் காலை மடித்து முழங்காலை நிலத்தில் ஊன்றவும். முதலில் உயர்த்திய காலுடன் கூடிய புட்டத்தை அழுத்திப் பிசையவும். ஒவ்வொரு காலுக்கும் மெதுவாக 20 தடவைகள் செய்யவும்.

• **உயர்த்துதல்:** இடையில் தேவையற்ற சதை, பைகளைப்போல் சிலருக்குத் தொங்குவதுண்டு. உடலின் ஏனைய உறுப்புக்கள் அழகாகத் தோன்றிய போதும் இந்த ஊழல் சதை ஏனைய அவயவ அழகுக்குத் திருஷ்டிபோல் அமைந்து விடுகிறது. இதனையும் கரைக்க ஒரு சுலபமான பயிற்சி உண்டு. முன்புறமாக ஒரு நாற்காலியை வைத்துக்கொள்ளுங்கள். இருக்கும்போது முதுகினைச் சாத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள அமைப்பினை கைகளால் பிடித்துக் கொள்ளுங்கள். வலதுகாலை பக்கவாட்டில் 30 பாகைவரை உயர்த்துங்கள். அதேவேளை உங்கள் வலது கை வலது புட்டம் மற்றும் இடைப் பகுதிச் சதைக்கு அழுத்தம் கொடுத்துப் பிசையவும். ஒவ்வொரு பகுதிக்கும் 20 தடவைகள் இப்பயிற்சி கொடுக்கப்படவேண்டும்.

• **அழுத்தித் துடைத்தல்:** குளித்து முடிந்தபின்னர் நீங்கள் ஈரத்தைத் துவட்டுவதற்காகப் பயன்படுத்தும் துவாயினால் புட்டத்தை அழுத்தித் துடையுங்கள். சில நிமிடங்கள் மேலும் கீழும்: பக்கவாட்டிலும், சுழற்சியாகவும்-துவாய் மூலம் அழுத்தம் கொடுக்கப்படவேண்டும். இதனால் குறிப்பிட்ட பகுதியில் இரத்த ஓட்டம் துரிதமடைந்து சீராவதனால் தேங்கிக் கிடக்கும் தேவையற்ற கொழுப்புக்களும் கரைந்துவிடுகிறது.

# காந்தம் போல் கவரும் தோற்றம்!

ருக்கா-நாதன்



பல பெண்கள் மனதில் தங்கள் நிறம், உருவ அமைப்பு முதலானவை பற்றிய தாழ்வு மனப்பான்மை அடிக்கடி எழுவதுண்டு. ஒரு ஆண் அல்லது பெண்ணின் தனித்துவமான பண்பியல்பு-ஆளுமை (பேர்சனாலிட்டி) என்பது உடல் அழகு, முக அழகு மட்டுமே சம்பந்தப்பட்ட ஒன்றல்ல. மற்றவர்களிடம் நாம் பழகும் விதம், பேசும் விதம், அவர்களை மதிக்கும் விதம் ஆகிய குணங்களை கொண்டதேயாகும். 'பேர்சனாலிட்டி' என்னும் அம்சம் பற்றி இதோ உங்களுக்கு சில யோசனைகள்:

அளவுக்கு அதிகமான உடையலங்காரங்களை தவிர்த்து விடுங்கள். முக ஒப்பனையையும் அளவுக்கதிகமாக உபயோகிக்க வேண்டாம். அனாவசியமான கிரீம், லோஷன்களை உபயோகிக்க வேண்டாம்.

விழாக்கள், கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளும்போது அனாவசியமாக ஒதுங்கி ஓரமாக உட்காராதீர்கள்.

முன்பின் தெரியாதவர்கள் உங்களுடன் நட்புக் கொள்ளும் எண்ணத்துடன் உங்களைப் பார்த்து சிரித்தாலோ பேசினாலோ நீங்களும் இன்முகம் காட்டிச் சிரித்துப் பழகுங்கள்.

இயல்பாக இருங்கள், படபடப்போ, பதற்றமோ, பயமோ தேவையில்லை.

யாரை உங்களுக்கு அறிமுகப்படுதினாலும் நட்போடு அந்த மனிதருக்கு வரவேற்பு கொடுங்கள். நட்பு தடவிய உங்கள் புன்னகையும் பேச்சும் வசீகரமான முறையில் அவர்களைக் கவரும். பெருமையாக-மௌனமாக இருந்தால் மற்றவர்களுக்குப் பிடிக்காது.

நீங்கள் யாருடனாவது பேசிக் கொண்டிருக்கும்போது உங்களை வேறுயாராவது அழைத்தால் பேசிய நண்பரை அப்படியே விட்டு போகாமல், வேறு யாருடனாவது பேசுவதற்கு ஏற்படுத்தி விடுங்கள். முடியாத பட்சத்தில் 'எக்ஸ்கியூஸ்' கேட்டு விட்டு செல்லுங்கள். முடிந்தவரை தெரிந்த மொழியில் வெளிப்படையாக பேசுங்கள். வெளியே செல்லும்போது எல்லோருக்கும் சொல்லி விட்டுப் போங்கள்.

பகலில் வெளியில் செல்லும்போது அதற்கேற்ப உடை அணிய வேண்டும். அலங்காரங்களும் அளவுக்கு மீறாமல் பார்த்துக்கொள்ளுங்கள். உதட்டுச்சாயம் (லிப்ஸ்ரிக்) பாவிப்பவர்கள் மென்மையான வர்ணங்களைத் தேர்ந்தெடுப்பது நல்லது.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### டம் சிக்கன்

**தேவையான பொருட்கள்:**

கோழி இறைச்சி சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்டது- 750 கிராம்
முந்திரிப் பருப்பு - 250 கிராம்
சிறு வெங்காயத் துண்டுகள் - 250 கிராம்
உருளைக்கிழங்கு - 150 கிராம்
வெள்ளைப்பூண்டு - 20 கிராம்
மிளகாய்த்தூள் - 20 கிராம்
தேங்காய்ப்பால் - 100 மில்லி லீட்டர்
எண்ணெய் - 150 மில்லி லீட்டர்
இவற்றுடன் தேவையான அளவு கறிவேப்பிலை, மசாலாத்தூள் மற்றும் உப்பு.

**செய்முறை:**

முந்திரிப் பருப்பை பாலுடன் சேர்த்து நன்கு அரைத்து வைத்துக்கொள்ளவும். வெங்காயத் துண்டுகளை வாணலியில் இட்டு பொன்னிறமாக வறுத்து எடுத்துக் கொள்ளவேண்டும். இத்துடன் நறுக்கிய வெள்ளைப்பூண்டையும் சேர்த்து வதக்கிக் கொள்ளவும்.

இவற்றுடன் வேகவைத்த உருளைக் கிழங்கு துண்டுகளைப் போட்டு, இந்தக் கலவையுடன் பாலுடன் அரைத்து வைத்த முந்திரிப் பருப்பைச் சேர்க்கவேண்டும். துண்டாக்கிய கோழி இறைச்சியை எண்ணெய் ஊற்றி வேகவைக்கவும். பின் இறைச்சித் துண்டுகளை உருளைக்கிழங்கு, கலவையுடன் சேர்த்துக் கொதிக்க விட்டு உப்பு, மிளகாய்த்தூள் ஆகியவற்றைப் போடவும். இறுதியாக கறிவேப்பிலை, மசாலாத்தூள் சேர்த்து இறக்கவும்.

### நத்தார் பண்டிகைக்கான சொக்கலேட் பிஸ்கட் புடிங்

**தேவையானவை:**

மலிபன் பிஸ்கட் - 100 கிராம்
கொக்கோ பவுடர் - 3 மேசைக்கரண்டி
பட்டர் (மார்ஜரின்) - 150 கிராம்
சீனி - 150 கிராம்
முட்டை- 2
கஜு- 50 கிராம்
பசுப்பால் - 1 கோப்பை

**செய்முறை:**

கொக்கோ பவுடரை 4 மேசைக்கரண்டி பால்விட்டு கலந்து கொள்ளவும். பட்டர் சீனி இரண்டையும் நன்கு கரண்டியால் அல்லது மிக்சியில் அடிக்கவும். பின்பு முட்டையின் சிவப்புக் கருவை அடித்து கொக்கோ கலவையுடன் போட்டு அடிக்கவும். அதனை அடுத்து வெள்ளைக் கருவினையும் அடித்து கொஞ்சம் கொஞ்சமாக பட்டர் கலவையுடன் சேர்க்கவும். மீதிப்பாலை ஒரு கிண்ணத்தில் எடுத்து பிஸ்கட்டை அதனுள் தோய்த்து எடுத்து மென் நெருப்பில் இளஞ்சூட்டுத் தண்ணீருள் வேகவைத்து நறுக்கிய கஜுவினை அதன்மேல் தூவிக்கொண்டு வெந்து ஆறிய பின்னர் 3 மணித்தியாலம் ஐஸ் பெட்டியில் வைக்கவும். அதன்பின் விருந்தினருக்கு அன்புடன் இன்பமாக பகிர்ந்து நாமும் உண்ணலாம்.

## வீட்டுக் குறிப்புகள்



எறும்புத் தொல்லை அதிகமாக உள்ளதா? கராம்பையும் கறுவாப்பட்டையையும் எடுத்து, தூள் செய்து எறும்பு வரக்கூடிய இடத்தில் போட்டு வைக்கவும். ஒரு எறும்பு கூட கிட்டநெருங்காது. கராம்பு வாசனை எறும்புகளுக்கோ மற்ற வண்டு போன்ற பூச்சி இனத்திற்கோ பிடிக்காது.



காம்புடன் கூடிய ரோஜாப் பூ வாங்கியதும், காம்பில் உள்ள முள்ளை எல்லாம் நீக்கி விடுங்கள். பிறகு சிறிது நேரம் தண்ணீர் தெளித்தோ, பிரிட்ஜில் வைத்தோ எடுக்கவும். பூ அலங்காரம் செய்வதற்கு இது உதவும். இரண்டு மூன்று நாட்களுக்கு வாடாமல் இருக்கும்.



பருத்தி துணி வகைகளில், தண்ணீரில் போட்டால் நிறம் மங்கி விடும் என்று தோன்றும் துணிகளை முதலில் அமோனியா கரைசலில் போட்டு நனைத்து, பிறகு வழக்கம் போல் தோய்க்கவும். இப்போது நிறம்போகாமல் அப்படியே இருக்கும்.



வீட்டில் பார்ட்டி வைக்கும்போது பூந்தொட்டிகளை வைத்து வீட்டை அலங்கரித்திருப்பீர்கள். பார்ட்டி முடிந்தவுடன் எல்லாத் தொட்டிகளையும் தோட்டத்தில் வைத்து விடுங்கள். சுத்தமான காற்று, வெளிச்சம் பட வசதியாக இருக்கும். பார்ட்டி நடக்கும் சமயத்தில் சிகரெட் புகை, உணவு பண்டங்களின் மசாலா வாசனை இவையெல்லாம் செடியில் படிய வாய்ப்புண்டு. இதனால் செடிகள் வாடி, வதங்கி பட்டுப் போய்விடவும் கூடும். செடிகளை காப்பாற்ற, பார்ட்டி முடிந்த அடுத்த வினாடி பூந்தொட்டி களை தோட்டத்தில் இரண்டு நாளைக்கு வைத்திருந்து பிறகு உள்ளே எடுத்து வைத்துக்கொள்ளவும்.

## லேடீஸ் ஸ்பெசல்

### சமூக அநீதி

பிறக்கப் போவது ஆணா பெண்ணா என்பதைப் பெற்றோர்கள் முன்கூட்டியே அறிந்து கொள்வதற்கு தற்போது பல இலகுவான வைத்தியப் பரிசோதனைகள் நடைமுறையில் இருந்துவருகின்றன.

இவற்றின் உதவியைக் கொண்டு கர்ப்பமுற்றுள்ள தாய்மார்கள் கர்ப்ப காலத்தின் முதற்பகுதியிலேயே தமது வயிற்றில் உள்ள குழந்தை ஆணா பெண்ணா என்பதை முன்கூட்டியே கண்டறிந்து விடுகின்றனர்.

வயிற்றிலிருப்பது பெண் குழந்தைதான் என்பதைத் தெரிந்து கொண்டதும் அநேகமான பெற்றோர்கள் உடனே கருச்சிதைவைச் செய்து விடுகின்றனர் என்று குறைபட்டுக் கொள்கிறார் பஞ்சாப் மாநிலத்திலுள்ள லுதியானா வைத்தியக் கல்லூரியைச் சேர்ந்த வைத்திய நிபுணர் பெவர்லீபுக்.

இவ்வாறான கருச்சிதைவுகளைப் பற்றி மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், "உலகம் பூராவும் உள்ள சமூக சீர்திருத்த நல அமைப்புக்கள் 21ம் நூற்றாண்டின் இறுதிவரை, சமத்துவத்தை பற்றி கத்திக் கூவித் திரிந்து பிரசாரம் செய்தாலும், ஆண் பிள்ளைகளுக்கு மாத்திரம் முக்கியத்துவமளிக்கும் இந்த சமூக அநீதி முறையை மக்கள் மத்தியிலிருந்து மாற்றுவது சிரமமாக இருக்கிறது" என்று தெரிவிக்கிறார். ●

## முரசின் பரிசு

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

**முரசின் பரிசு**
**கூப்பன் இல 18**
**உண்மை—நேர்மை—வெளிப்படைத்தன்மை**

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

## குஸ்வந்த் சிங்-குட்டிக் கதைகள் 2

### என்னால் முடியாது

விவசாயி ஒருவன் சந்தைக்குப் போன இடத்தில் அங்கே கூட்டத்தில் தனது மனைவியைத் தவறவிட்டு விட்டான்.

மனைவியைக் காணாமல் பரிதவித்தவன் அருகேயுள்ள இராமர் கோவிலுக்குச் சென்று தன் மனைவியைக் கொண்டுவந்து தன்னிடம் சேர்த்து வைக்குமாறு வேண்டினான்.

அங்கேயிருந்த இராமர் உயிர் பெற்றுப் பேசினார்: "அப்பனே.... முன்பு என் மனைவி காணாமல் போனபோது அவளை அனுமன்தான் கண்டு பிடித்து என்னிடம் வந்து சொன்னார். அவருக்குத்தான் இப்படி கண்டுபிடிப்புக்களில் வல்லமை உண்டு. அருகேதான் இருக்கிறது அனுமன் கோவில்! நீயும் அங்கே போய் முறையிடு.. அனுமன் உன் கவலையைத் தீர்ப்பார்" என்று கூறி இராமர் மறைந்தார்.

### ஓ... கோ... அப்படியா?



ஒருவன் சோற்று மூட்டையை முதுகில் தொங்கவிட்டவாறு ரயில் தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தான்.

அவ்வழியே சென்ற வழிப்போக்கர் "ஏனப்பா தண்டவாளத்தில் உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டார்.

"எனக்கு மனசே சரியில்லை. ரயில் வந்தால் தண்டவாளத்தில் படுத்து சாகலாம் என்றிருக்கிறேன்" என்றான் சோற்று மூட்டைக்காரன்.

உடனே வழிப்போக்கர் யோசித்துவிட்டு, "ஆமாம், எங்கோ பயணம் போகிற மாதிரி சோற்று மூட்டையெல்லாம் கொண்டு வந்திருக்கிறாயே- ஏன்?"

என்று கேட்டார். சோற்று மூட்டைக்காரன் ஆத்திரமாகப் பதில் சொன்னான்.

"ஓ... கோ... ரயில் கொஞ்சம் தாமதமாக வந்தால் அதுக்காக என்னைப் பட்டினி கிடந்து சாகச் சொல்கிறாயா?"

## இதுதான்(டா) சிலேடை

### "நீ என் மனைவி நான் உன் புருஷன்"



பண்டிதமணி புலமைமிக்கவர். இடத்துக்குத் தக்கவாறு சிலேடையாகப் பேசக் கூடியவர். ஒரு சமயம் குடும்பத்தோடு தெய்வ வழிபாட்டுக்காக அடுத்த ஊருக்கு செல்லவேண்டியிருந்தது. பண்டிதமணியிடம் அவருடைய மனைவியின் தங்கை வந்து:

"வண்டியில் போகிறவர்கள் யார்? நடந்து போகப் போகிறவர்கள் யார்?" என்று கேட்டாள்.

அதற்கு பண்டிதமணி: "நீ என் மனைவி நான் உன் புருஷன்" என்றார்.

"உங்களுக்குக் குறும்புப் பேச்சுப் போகவே போகாது" என்று சொன்னாள் மனைவியின் தங்கை.

"இது என்ன குறும்பு? நீயும், என் மனைவியும், நானும், உன் புருஷனும் வண்டியில் போக வேண்டும், மற்றவர்கள் நடந்து போக வேண்டும்" என்றுதானே சொல்கிறேன் என்றார் பண்டிதமணி.




## மாமிசம் தின்னும் கறுப்புக் குழிகள்!

சிதைந்துபோனது
சமாதான உடல்!
சரி செய்ய
முயற்சி மேகங்கள்
பூ மழை
பெய்யும்!

புதை குழிகளுக்குள்
கறுப்பு நிகழ்வுகளின்
கசப்பான சின்னம்.
காலம் உமிழ்ந்த
இந்த இட்டடை அழுக்குகள்
துடைத் துடைக்கப்படும்
பௌர்ணமி விடியலுக்காக
பிரார்த்தனைகள்
வானப்பரப்பாகக் கிடக்கும்!

கனவை மட்டும்
உயிருக்குள்
புதைத்ததால்
எதிர்பார்ப்புகள்
குப்பைகளுடன் சிநேகம்!
நிஜங்கள்
கொலைக் களம் செல்லும்
எத்தனை
மிக நீண்ட இரவுகள்?

இனி
கனவுகள் மரணமடையும்!
சத்தமான நினைவுகள்
புன்னகை யுகம்
படைக்கட்டும்!
பிரார்த்தனை இதய வீடுகள்
விளக்குப் போடட்டும்!!
விழாக்காலம்
தழுவ
வாழ்க்கை
விளிம்பில் நிற்கிறது.

தூரத்து நிலவு
எம் பக்கத்தில் வந்தால்
இந்த
நரகத்துன்பம்
நரைத்துப்போய்
உதிரட்டும்!

இந்த
ஜீவ தேசத்தில்
சோகம்
சுதந்திரம் பெற்றது
போதும்.

சுக உதயம்
இதயங்களில் எழுந்து
உலவட்டும்!

அந்த பொன் விடியலுக்காக
மூச்சுக்கள்
உஷ்ணத்தோடு
விழித்திருக்கிறது.
உயிர்கள்
வியர்வையாகக் கசிந்து
வடிந்த
அந்த
நெருப்புக்காலம்
சந்ததிகளை
சந்திக்காமலே சாகட்டும்!

சிந்தனை நரம்புகளில்
மல்லிகை மணம்
ரத்தமாகி
இனிய
சங்கீதச் சத்தம் பரவும்
அந்த
சந்தோச நந்தவனம்
மீண்டும்
ஆண்டுகளை
கண்டு கொள்ளட்டும்!

யுத்த முனை
ரத்தம் எழுதும்
துவேச விதைக்குள்
உயிர்க்கொல்லி
வாழும்
அன்பு நரம்புகள்
துண்டிப்பில்
சுத்தமான தென்றல்
கிடைக்காது
இலைகள்
அனுபவங்கள் துப்பிய
எச்சில்கள்!

அந்த
நரகப்பாதைக்காக
இதயங்கள்
கால்களை இழந்தது
போதும்!
போதும்!
இனியாவது
இனிப்புப் பரிமாற
தயாராகுவோம்!

நிந்ததாசன்.



## நாளை வருமோ?

நன்நீர் செம்புழுதி
செந்நீர் தங்கு சேறாகி
தினமுயிர் விழுங்கி—நாம்
அந்நிய தேசத்து அடிமைகளாக
சொந்த தேசத்து அகதிகளாக

ஏரோடுழவனும்
ஊரோடும் பூமி.
நீதி குதிரைக் கொம்பு
வாய் திறந்தவர்
வாங்கிவிட்டார்—கூடு

வேட்டோசை
குண்டு முழக்கம்
பழகியது நித்தம்
மரணித்தது
மனித நேயம்

உறவுகள்
கலைந்து
உரிமைகள்
தொலைந்துவிட்ட
உண்மைகள்

இருதயம்
மரத்து
இரும்புத் திரையாகிவிட்ட
இரவுகள்

தெருவெங்கும் ஒப்பாரி
தெளிபடுவது
செங்குருதி மட்டுமல்ல
எதிர்கால சந்ததியின்
எதிர்பார்த்த வாழ்வு

பிணநாற்றம்
சுடுகாடு
ஜனனிக்கட்டுமாம்
ஜனநாயகத்துக்கு
ஓட்டு

ஜனநாயகமா?
அறியவில்லையா?
எப்போதோ—அது
செத்துவிட்டதென்று

தலைக்கொரு நீதி
தமக்கொரு அறிக்கை
நிலைபுரியா
இளைய தலைமுறை

மக்களுக்காகவல்ல
மடக்க
பொது நலத்திற்காக அல்ல
பொன் நலத்திற்காக—இங்கு
அரசியல்

இன்று வந்தது!
விடியல்?
நாளை
அது வருமோ?

-இணுவில் முகுந்தன்-



## மானிடச் சருகுகள்

வாருங்கள்!
எம் தேசம் பற்றிய
விழுமியங்களைத்
தோண்டுவோம்.
பின்னர்
உலகம் முழுவதற்குமாய்
உரத்து சொல்லுவோம்.

பிரேதங்கள் பற்றியும்
அடக்கு முறைகள் பற்றியும்
ஜனநாயகமும்
தேசியமும் பற்றியும்.

□

ஒற்றுமை சூழ்வதான
ஒரு துளியையேனும்
எந்த மூலையில்
தேடுவது?

மானிடம் அழிவதேயான
இருப்புக்கள்
தொடர்ந்த நிமிடங்களிலும்
நொடிகளிலும்
எங்கள் காலாவதியான
வாழ்க்கைப் பயணிப்புகள்.

□

அடக்கு முறையாய்ப் போனது
தானே காதை!
உலகின் எந்த மூலையாயினும்
எம்மினம் பற்றிய
பயம்.
துப்பாக்கி அவ்வளவு
அவசரமாய் குண்டுகளைத்
துப்பிவிடும்.

பின்னர்
விடுதலை பற்றிய
நீட்டி முழக்கல்கள்.........

மனிதன்
வெறும் சருகு.

□

வருத்தப் படுவோம்.
எமது வாழ்வுபற்றி
வருத்தப்பட
எத்தனையிருக்கிறது
இந்தச் சின்னதான
பூமியில்...?

ஹரீரா அனஸ்



## ஏனடி?

நிலவென்று பெண்ணுக்குப் பெயருண்டு.
உயர்ந்திருந்து, தேய்ந்தாலும் நிலைத்திருந்து,
ஒளிவீசும் அது.
தோழி நீ நிலவு
ஏனடி நிலவு கீழிறங்கியது?

மலரென்று பெண்ணுக்குப் பெயருண்டு.
மலர்ந்திருந்து, தேனோடு இனித்திருந்து
மரத்திருக்கும் அது.
தோழி நீ மலர்
ஏனடி மலர் நடமாடுகிறது?

பாவையெனப் பெண்ணுக்குப் பெயருண்டு.
தனையடக்கி, அழகோடே அசைந்தாலும்
பேசாது அது.
தோழி நீ பாவை
ஏனடி பாவை படபடக்கிறது?

தேனெனப் பெண்ணுக்குப் பெயருண்டு.
காலத்தால் மாறாத குணத்தோடு
மருந்தாகும் அது.
தோழி நீ தேன்
ஏனடி தேன் புளித்துப் போகிறது?

-புத்தளம் சித்தி றபீ ஆ-

## ஒரு புன்னகைக்காய்!

என்...மனசை
அலங்கரிக்கும்
—அந்த
முக்காட்டு நிலா!

••

அது!
வாசலில் அடிக்கடி
கொக்கரித்துக்கொண்டு
காத்து நிற்கும்
எனக்காக!

••

வசீகரிக்கும்
அந்த—விஷவிழிக்காய்
என்னையே
தொலைத்திருக்கிறேன்

••

ஒவ்வொரு
—நிமிஷமும்
என் மன ஊர்தி
மேய்ந்து திரியும்
அவள் வீட்டு முற்றத்தை

••

என் வரவிற்காய்
காத்துக்கிடப்பதுபோல்
அவள் வீட்டு நாய்க்குட்டி
சிகப்பு சிக்னல் போட
மெல்லத் திறந்து கொள்ளும்
அவள் வீட்டு
—ஜன்னல் கதவுகள்
ஒரு...
புன்னகைக்காய்!

வி.சுதாகர்,அக்கரைப்பற்று-08.

விசித்திரக் கைதி

## உயிர் வாழ வேண்டுமானால் உடல் பருக்க வேண்டும்!

அமெரிக்காவில் வாஷிங்டன் நகர சிறை அதிகாரிகள் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லாவற்றுக்கும் காரணம் ஒரு தூக்குத் தண்டனைக் கைதிதான்.

அவனது பெயர்- மிட்செல் ரூப். 1981ம் ஆண்டு இரண்டு பெண்களைக் கொலை செய்துவிட்டான்.

வழக்கை ஆற அமர விசாரித்த நீதிபதி ஒரு சுப முகூர்த்தத்தில் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பெழுதிவிட்டார்.

பிறகுதான் பிரச்சனையே ஆரம்பம்.

கைதியின் எடைதான் பிரச்சினை. 250 கிலோ உடம்பு. தூக்கில் மாட்டினால் பாரம் தாங்குமா? தாங்கினாலும்கூட கழுத்து இறுக்கி உடனே சாகமாட்டான். சித்திரவதைப்பட்டுத்தான் சாகவேண்டியிருக்கும். அது சட்டத்திற்கு முரணான விசயம். சிறை அதிகாரிகள் குழம்பிப் போக குண்டருக்கு குசியோ குசி.

தினமும் கையில் கிடைப்பதையெல்லாம் மூக்குமுட்ட ஒரு பிடி பிடித்து விடுகிறான். உயிர் வாழ வேண்டுமானால்



உடல் பருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டான்.

பட்டினி போடுவதும் சட்டப்படி குற்றம். உடற்பயிற்சி செய் என்று கட்டாயப்படுத்தவும் முடியாது. தூக்குத் தண்டனைக் கைதிக்கு சாப்பாட்டு விடயத்தில் கேட்பதையெல்லாம் கொடுத்தாக வேண்டும். அதிகாரிகள் பாடு திண்டாட்டமாக இருக்கிறது.

## இந்த வாரம் உங்கள் பலன்

(04.12.94 முதல் 10.12.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்:

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- புதிய முயற்சி, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வெள்ளி- உறவினர் நட்பு, தொழில் மேன்மை. | பகல் 12 மணி |
| சனி- செலவு மிகுதி, கடன் பயம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 5

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள்பேறு, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வியாழன்- பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, காரியசித்தி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் பலிதம், மனக் குறை நீங்கும். | காலை 6 மணி |
| செவ்வாய்- பயனற்ற செயல், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், தேகசுக நன்மை. | பி.ப. 2 மணி |
| சனி- உயர்ந்தநிலை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- கௌரவம், மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| செவ்வாய்- உத்தியோக கஷ்டம், கடின உழைப்பு. | பகல் 12 மணி |
| புதன்- தனலாபம், குடும்ப சுகம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பகல் 12 மணி |
| சனி- குடும்ப சுகம், கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் கேடு, மனக்கலக்கம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- உயர்ந்தநிலை, பொருள் பேறு. | காலை 6 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் நட்பு, மனச் சுமைநீங்கும். | பி.ப. 2 மணி |
| வியாழன்- பொருள் லாபம், செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, பொருள் வரவு. | பி.ப. 3 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | காலை 9 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| புதன்- மனப் பயம் நீங்கும், காரியசித்தி. | காலை 6 மணி |
| வியாழன்- பெரியோர் சகாயம், துயர் நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், செல்வாக்கு மேன்மை. | காலை 7 மணி |
| சனி- உயர்ந்தநிலை, மனக்குறை நீங்கும். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் உயர்வு, பொருள் இலாபம். | காலை 9 மணி |
| திங்கள்- குடும்ப சுகம், பெண்களால் தொல்லை. | காலை 10 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், அதிகார விருத்தி. | பகல் 12 மணி |
| புதன்- முயற்சி மேன்மை, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தனலாபம், குடும்ப சுகம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- மனப்பயம் நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 4 மணி |
| சனி- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -6

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| விருட்சிகம் | - சூரியன், வியாழன், புதன் |
| கும்பம் | - சனி |
| சிம்மம் | - செவ்வாய் |
| துலாம் | - வெள்ளி, இராகு |
| மேடம் | - கேது |

★ சந்திரன்- விருட்சிகம், தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி | காலை 7 மணி |
| செவ்வாய்- பயனற்ற பிரயாணம், மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| புதன்- பெரியோர் சகவாசம், அந்நியர் நட்பு. | பி.ப. 3 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முதலீடு இலாபம். | காலை 7 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, கௌரவம். | பி.ப. 1 மணி |
| சனி- மனமகிழ்ச்சி, பணவரவு. | பி.ப. 4 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் உயர்ச்சி, பொருள் வரவு. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செலவு அதிகம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 7 மணி |
| புதன்- வீண் குறை கேட்டல், கடன் சுமை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், மனக் கவலை நீங்கும். | காலை 6 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, அதிகார விருத்தி. | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், காரியத்தடை. | பி.ப 3 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- தூர இடப் பயணம், உயர்ந்தநிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- வெளியிடவாழ்க்கை, கௌரவக் குறைவு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- முயற்சித்தடை, பொருள் இழப்பு. | காலை 8 மணி |
| சனி- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியசித்தி. | காலை 9 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, முன்னேற்றம். | காலை 6 மணி |
| புதன்- பதவி நிலை உயர்ச்சி, காரியானுகூலம். | காலை 7 மணி |
| வியாழன்- குடும்ப சுகம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| சனி- புதிய நம்பிக்கை, செலவு அடக்கம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 3

### கன்னி:


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- முதலீடு வெற்றி, பெரியோர் நட்பு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. 3 மணி |
| புதன்- அந்நியர் நட்பு, மனக் குறை நீங்கும். | காலை 6 மணி |
| வியாழன்- துயர் அதிகம், கடன் பயம். | பகல் 12 மணி |
| வெள்ளி-, புதிய முயற்சி, உறவினர் நட்பு. | காலை 6 மணி |
| சனி- பெரியோர் சகாயம், தேகசுகம் நன்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





## மழலை

குழலை மிஞ்சும் மொழியாலே
குவலயம் போற்றும் மழலை
குறும்புகள் நித்தம் புரிந்து
குதூகலம் செய்திடும் மழலை

முல்லைச் சிரிப்பால் பெற்றோரின்
மூர்க்கந் தவிர்த்திடும் மழலை
தத்தித் தளர் நடை பயின்று
தழுவிக்கொஞ்சிடும் மழலை

மின்மினியாய் கண்கள் மிளிர
மென்னகையுடன் தவழும் மழலை
பஞ்சு வண்ண கன்னத்தால்
பாச முத்தம் தரும் மழலை

கள்ளங் கபடமற்ற நெஞ்சுடன்
கனிவான உள்ளமிகு மழலை
கடவுளின் ஓர் வடிவாய்
காசினியில் மலர்ந்த மழலை

அனுப்பியவர்: எம். அகிலன்-டிக்கோயா-

"திகரென்று கொட்டு முரசே! -இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
தகரென்று கொட்டு முரசே! - பொய்மைச்
சாதி விரும்பினை யெல்லாம்."

-சுப்பிரமணிய பாரதியார்-

### பாப்பா முரசு சிறுகதை

# பேராசை பெரு நஷ்டம்



ஒரு ஊரில் கோபி, முரளி என்று இரண்டுபேர் இருந்தார்கள். இருவரது வீடுகளும் அருகருகே இருந்தன. கோபி அநியாய வழிகளில் பிறரை மோசம் செய்து, பணம் சேர்த்து செல்வந்தன் ஆகிவிட்டான். ஆனால் முரளியோ நியாயமான வழியில் சென்றதால் குடும்பத்தைக் காப்பாற்றவே மிகவும் கஷ்டப்பட்டான்.

அந்த ஊரை ஆட்சி செய்த மன்னனுக்கும் மகாராணிக்கும் இளவரசனுக்கும் இளவரசிக்கும் ஒருநாள் திடீரென்று பார்வை போய்விட்டது. அனைவரும் குருடராகி விட்டனர். அதற்கு என்ன காரணமென்று யாருக்கும் தெரியவில்லை. இரவில் தூங்கிக் கொண்டிருந்தபோது, கனவில், கறுப்பான, பயங்கரமான பறவை ஒன்று வந்து தன் பெரிய கனமான சிறகால் பலமாக அடித்ததாகவும் அக்கணமே எல்லாருக்கும் பார்வை போய்விட்டதாகவும் கூறினார்கள். அரண்மனை மருத்துவர்களும் விசேட மருத்துவர்களும் பலவிதமான வைத்தியங்கள் செய்தும் அவர்களுக்குப் பார்வை மீளவில்லை. அரச குடும்பத்தினருக்குப் பார்வையை மீட்டுக் கொடுப்பவர்களுக்குப் பொன்னும் மணியும் வைரமும் வாரி வழுங்கப்படும் என்று அறிவித்தும் எவ்வித பயனும் இல்லை.

முரளியின் குடும்பத்தில் திடீர் செலவு ஒன்று ஏற்பட்டது. அதற்கு ஆயிரக்கணக்கில் பணம் தேவைப்பட்டது. 'பணத்திற்கு என்ன செய்வது?' என்று யோசித்த முரளி, கோபியிடம் கடன் கேட்டான். மனைவிக்கு நகைகள் செய்ய வேண்டுமென்று யோசித்துக் கொண்டிருந்த கோபி, தன்னிடம் ஒரு காசுகூட இல்லை என்று சொல்லிவிட்டான்.

மனம் நொந்துபோன முரளி, சற்று தள்ளி இருக்கும் கிராமத்தில் வட்டிக்குப் பணம் கொடுக்கும் ஒருவர் இருக்கிறார் என்பதை அறிந்து அவரிடம் கடன் கேட்கலாம் என்று எண்ணிப் புறப்பட்டான்.

அந்தக் கிராமத்திற்குச் செல்வதானால் காட்டு வழியில் செல்ல வேண்டும். முரளி காட்டு வழியில் சென்றுகொண்டிருந்தபோது இருட்டி விட்டது. இரவில் கால் நடையாகச் செல்வது உசிதமல்ல என்று எண்ணி ஒரு மரத்தடியில் தங்கினான். நேரம் செல்லச் செல்ல காட்டு விலங்குகள் சத்தமிடத் தொடங்கின. தான் இரவில் மரத்தடியில் தூங்கினால் காட்டு மிருகங்கள் தன்னைக் கொன்றுவிடும் என்றெண்ணி மரத்தின் மீதேறி இரு கிளைகள் பிரியும் இடத்தில் உட்கார்ந்து சாய்ந்துகொண்டான்.

காட்டுப் பகுதியானபடியாலும், காட்டு விலங்குகளின் சத்தம் கேட்டுக்கொண்டிருந்ததாலும் முரளியால் நித்திரை கொள்ள முடியவில்லை. அப்படியே உட்கார்ந்திருந்தான். அவன் இருக்கும் மரத்தில் வசிக்கும் இரண்டு பேய்கள் எங்கோ சென்றுவிட்டுத் திரும்பி வந்தன.

ஒரு பேய், "என்ன மிகவும் சந்தோசமாக இருக்கிறாய்?" என்று மற்றப் பேயைப் பார்த்துக் கேட்டது.

அதற்கு மற்றப்பேய், "நான் கண்களைக் குருடாக்கி விட்டு வந்தேனே அரச குடும்பத்தை, அவர்களுக்கு என்ன வைத்தியம் செய்தும் கண் பார்வை திரும்பவில்லையாம். அதுதான் எனக்குச் சந்தோசமாக இருக்கிறது," என்றது.

"அப்படி என்றால் அவர்களுக்குக் கண் பார்வை மீள வழியே இல்லையா?" என்று கேட்டது முதல் பேய்.

"ஏன் இல்லை. இந்த மரத்திற்குக் கீழே சின்னஞ் சிறிய இலையுடன் ஒரு கொடி இருக்கிறதல்லவா? அதன் இலைகளைப் பறித்துச் சாறு பிழிந்து பார்வையற்றவர்களின் கண்களுக்குள் விட்டால் அவர்களுக்குப் பார்வை கிடைத்துவிடும்," என்றது இரண்டாவது பேய்.

இரண்டு பேய்களும் பேசிக்கொண்டதைக் கேட்ட முரளிக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. தன் கஷ்டங்கள் நீங்கி வாழ இறைவன் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார் என்றெண்ணிய முரளி எப்போது விடியும் என்று காத்திருந்தான்.

மறுநாள் பொழுது புலர ஆரம்பித்ததும் மரத்திற்குக் கீழே படர்ந்திருந்த கொடியில் இருந்த இலைகள் அனைத்தையும் பறித்து ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

அங்கு அரண்மனை அதிகாரியிடம், "அரச குடும்பத்தினர் அனைவரின் பார்வையையும் மீட்டுத்தர அபூர்வ மூலிகையுடன் வந்திருக்கிறேன்," என்றான் முரளி. அவர், உடனே அரசரிடம் அழைத்துச் சென்று விபரத்தைக் கூறினார்.

அரசர் சிகிச்சையை ஆரம்பிக்கச் சொன்னதும், தான் கொண்டு வந்திருந்த மூலிகையை அரைத்து சாறு எடுத்து அரச குடும்பத்தினரின் கண்களுக்குள் விட்டான். அடுத்த கணமே அவர்களுக்குப் பார்வை கிடைக்கப் பெற்று மகிழ்ச்சியில் குதித்தார்கள்.

அரசரும், முரளியைப் பாராட்டி அவனுக்கு ஏராளமான பொன்னும், பொருளும் கொடுத்து அவனை அனுப்பி வைத்தார்.

முரளி எல்லாக் கஷ்டங்களும் நீங்கி ஒரே நாளில் செல்வச் சீமானாகிவிட்டான். தன்னை விட முரளி எப்படி செல்வந்தனானான் என்று புரியாத கோபி அவனிடமே கேட்டுவிட்டான். முரளியும் ஒளிவு மறைவின்றி எல்லாவற்றையும் சொன்னான்.

அதைக் கேட்ட கோபி தான் இன்னும் பெரிய செல்வச் சீமானாக வர வேண்டும் என்று பேராசை கொண்டான். நமது அரசர் பலமுறை அயல் நாட்டின் மீது படையெடுத்தும் வெற்றி காண முடியாமல் இருக்கிறார். அவர் வெற்றியடைய முடியாதபடி அந்தப் பேய்கள்தான் ஏதாவது செய்திருக்கும். அரசர் வெற்றி பெறும் மார்க்கத்தை அவை சொன்னாலும் சொல்லலாம். அவை சொல்வதைக் கேட்டு நான் அரசனிடம் சொன்னால் எனக்கு பொன்னும் பொருளும் அள்ளி அள்ளித் தருவார். நான் குபேரனாகிவிடலாம் என்று எண்ணிக் காட்டிற்குச் சென்று முரளி சொன்ன மரத்தின் மீதேறி, பேய்கள் என்ன சொல்கின்றன எனக் கேட்கத் தயாரானான்.

இருட்டியதும் பேய்கள் வந்தன. ஒருபேய் மற்றப் பேயிடம், "ஏன் என்னவோ போல் இருக்கிறாய்?" என்று கேட்டது.

"நான் அரச குடும்பத்தினர் மீண்டும் பார்வை பெறுவது எப்படி என்று சில நாட்களுக்கு முன்பு உன்னிடம் கூறினேன் அல்லவா? அதை எவனோ கேட்டு சென்று எல்லோரது பார்வையையும் மீட்டுவிட்டான்," என்றது இரண்டாவது பேய்.

"அப்படியென்றால் நாம் பேசும்போது அவனும் இந்த மரத்திலிருந்துதான் கேட்டிருக்க வேண்டும்," என்றது முதல்பேய்.

"ஆமாம்...இன்னும் நாம் என்ன பேசுகிறோம் என்று கேட்க இன்றுகூட இம்மரத்தில் வந்து ஒளிந்திருக்கலாம். வா அவனைத் தேடிப்பிடித்துக் கொல்வோம்," என்றது இரண்டாவது பேய்.

இரண்டு பேய்களும் தேடிய போது மரத்தில் இருந்த கோபி அகப்பட்டுக் கொண்டான். அவை கோபியைப் பிடித்து அடித்துக் கொன்றுவிட்டன.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 10.12.1994.


வர்ணம் தீட்டும் போட்டி இல: 68
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 65

பரிசுக்குரியவர்
எஸ்.எம். நௌஷான்
பாரதி தமிழ் வித்தியாலயம், பதுளை.


பாராட்டுக்குரியவர்கள்:
வசந்தா அகலவதி-வட்டவளை.
எஸ். சுகந்தி-சாந்த கிளேயர் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு-6.
ம. பிரியாந்தன்-விவேகானந்த மகளிர் வித்தியாலயம், மட்டக்களப்பு.
பி. அருமை ராஜா-ரமேஷ்புரம், செங்கலடி.
ஜே. சுபாஸி-கொழும்பு-13.
ஆர். கிருபாகரன்-ஹல்வத்துறை தமிழ் வித்தியாலயம், இங்கிரிய.

## பிராயச்சித்தம்



தாய்லாந்து நாட்டில் பயாகாங் என்ற மன்னரின் நினைவாக அவரது மகன் 'நகோர்ன் பாத்தோம்' கட்டிய கோயில் இது. இவன் பிறந்ததும், 'இவன் உம்மைக் கொன்று விடுவான்' என்று சோதிடர் கூறக் கேட்ட மன்னர் பயாகாங், இவனை மகன் என்றும் பாராமல், எங்கோ காணாத இடத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டார். பையன் பெரியவனாகி போர்க்களத்தில் மன்னர் பயாகாங்கைக் கொன்று சிங்காதனத்தைக் கைப்பற்றினான். அதன் பின்னர்தான் அவனுக்குத் தெரிந்தது பயாகாங் தன்னைப் பெற்ற தந்தை என்று. அவரது நினைவாக அவன் கட்டிய கோயிலே இது. தந்தையைக் கொன்றதற்கு மகன் செய்த மிகப்பெரிய பிராயச்சித்தம் என்று இன்றளவும் தாய்லாந்தில் பேசப்படுகிறது.

## செய்து பாருங்கள் ★கிறிஸ்மஸ் நட்சத்திரம்




ஒரு கனமான செவ்வக வடிவிலான வெள்ளைத் தாளை எடுத்துக் கொள்ளுங்கள். மடிப்பதற்கு ஏற்றதாக அது இருக்க வேண்டும். முதல் படத்தில் உள்ளபடி அ,ஆ கோட்டில் தாளை மடிக்கவும். பின் இ,ஈ கோட்டில் அந்தத் தாளை மடிக்கவும். பிறகு அ,ஆ பகுதியை ஈ,ஊ பகுதிக்கு வரும்படி முக்கோணமாக- மூன்றாம் படத்தில் காட்டியுள்ளபடி மடிக்கவும். பின் அதில் காட்டியுள்ளபடி உ,ஊ கோட்டில் வெட்டி, படத்தில் புள்ளியிட்ட வெட்டிய பகுதியை எடுத்து விரித்தால் 4ம் படத்தில் உள்ளது போன்ற நட்சத்திரம் வரும். அதை உங்கள் விருப்பம் போல் அலங்கரித்து வர்ணம் தீட்டி அட்டையில் ஒட்டி ஒரு கயிற்றில் தொங்க விடவும்.

## மனிதக் குரங்குகள்



* எத்தனை வகையான மனிதக் குரங்குகள் உள்ளன?
*மனிதக் குரங்குகளில் நான்கு முக்கிய வகைகள் உள்ளன.*
* அந்த நான்கு வகைகளின் பெயர் என்ன?
*1. கொரில்லா 2. சிம்பன்சி 3. கிப்பன் 4. உர்ராங்குட்டான்.*
* விஞ்ஞான ஆராய்ச்சியில் பெரும்பாலும் உபயோகிக்கப்படும் மனிதக் குரங்குகள் எவை?
*சிம்பன்சி குரங்குகள்.*
* 'உர்ராங்குட்டான்' என்ற பெயர் எதைனக் குறிக்கின்றது?
*மலேய மொழியில் இதற்கு 'காடுகளின் மனிதன்' என்று பொருள். கிழக்காசிய தீவுகளான சுமத்திரா, போர்னியோ தீவுகளில் உள்ள அடர்ந்த காடுகளில் இவை வாழ்கின்றன.*
* குரங்குகளுக்கும், மனிதக் குரங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகள் எவை?
*மனிதக் குரங்குகள், குரங்குகளை விடப் புத்திசாலிகள். குரங்குகளுக்கு வால் இருக்கும். மனிதக் குரங்குகளுக்கு வால் இருக்காது. மனிதக் குரங்குகள் இரண்டு கால்களால்தான் நடக்கும். குரங்குகள் நான்கு கால்களால் நடக்கும்.*

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கொலை விழும் நேரம்

எழுதுவது ரசிகன்

42

குலாம்ஷாவும், டென்சிலும் திடீரென்று வர, சூர்யா அதிர்ந்து போனது மாதிரித் தெரிந்தது.

எனினும் அடுத்த நொடியே முகத்தில் இயல்பான தன்மையைக் கொண்டு வந்தாள்.

டி.ஐ.ஜி. டென்சில் பொலிஸ் யூனி போர்மில் கம்பீரமாய் தெரிந்தார்.

குலாம்ஷா மெல்லிய நீலத்தில் கோடுகள் போட்ட 'சேட்' அணிந்திருந்தார்.

டி.ஐ.ஜி. டென்சில் நேராகச் சென்று சோபாவில் அமர்ந்து கொள்ள, குலாம்ஷா சூர்யாவைப் பார்த்து,

"ஹலோ சூர்யா, நலமறிய ஆவல். வாவ்! என்ன அரிதான சந்திப்பு இது!"

என்றார் கண்களில் கேலி தெரிய.

சூர்யா பதறாமல், மனதில் இருப்பதை வெளிக்காட்டாத எச்சரிக்கை உணர்வு தவறாமல்,

"யெஸ்! அரிதான சந்திப்புத்தான். அதுவும் குற்ற உலகையே ஒரு கலக்குக் கலக்கும் இரண்டு கம்பீர மனிதர்களை சந்திப்பது அதுவும் ஒரே நேரத்தில் சந்திப்பது அரிதுதான்,"

என்றாள். டி.ஐ.ஜி.டென்சில் கால்மேல் கால் போட்டிருந்து உதட்டில் குட்டிப் புன்னகையோடு சூர்யாவை அளவெடுத்துக் கொண்டிருந்தார்.

குலாம்ஷா சூர்யாவுக்கு "மிஸ் சூர்யா. நீங்கள் சொன்ன பாராட்டை நாங்கள் ஏற்க முடியாது. அதில் பொய் அதிகம்!"

"ஏன்?"

"குற்றவாளிகள் கலங்குவது சில இயற்கை விதிகள் மாதிரி இயல்பான விசயம். மடியில் கனமிருந்தால் மனதில் பயம் என்ற மாதிரியான விசயம். சில குற்றவாளிகள் மனதில் உள்ள பயத்தை மறைத்து புத்திசாலித்தனமாக நடிக்கலாம். ஆனால் உள்ளே கலங்குவது மட்டும் உண்மை. அதற்கு நாமா பொறுப்பு? உங்கள் அனுபவம் எப்படி?"

குலாம்ஷா கேள்வியோடு முடிக்க சூர்யா வார்த்தைகளில் வெப்பமாகி,

"வட் டூ யூ மீன்?"

"ஏன் உடனே ஹீட்டாகிறீர்கள் சூர்யா? குற்றவாளிகள் பற்றி உங்களுக்கு ஏதாவது அனுபவம் இருக்கிறதா என்று ஒரு பேச்சுக்குத் தானே நான்..."

சூர்யா இடையில் புகுந்து, வார்த்தைகளில் சூடு தணிக்காமல்,

"அனாவசியமான பேச்சுக்கள் எனக்குப் பிடிப்பதில்லை இன்ஸ்பெக்டர் குலாம்ஷா!"

"ஓ...கோ! நல்ல பொலிசி! நான் ஒரு கொமன்ற் சொல்லலாமா?"

சூர்யா பதில் சொல்லாமல் முறைக்க, குலாம்ஷா தொடர்ந்து,

"வழக்கமான கொமன்ற்தான். ஆனால் உண்மையான கொமன்ற். கோபப்படும் போதும் நீங்கள் அழகாக இருக்கிறீர்கள்! அது சரி சூர்யா, மென்மையான நீங்கள் ஏன் வன்முறையை நாடினீர்கள் என்ற அவசியமான கேள்விக்கு பதில் சொல்கிறீர்களா?"

சூர்யா எதிர்பார்த்ததுதான். இங்கே பேசியதையெல்லாம் வெளியே நின்று கேட்டிருப்பார்கள். சரி என்ன ஆதாரம்? மறுத்தால் என்ன?

"மிஸ்டர்... குலாம்ஷா! பேசுவது என்னவென்று தெரிந்துதான்...."

இப்போது குலாம்ஷா இடையில் புகுந்து,

"எக்ஸ்கியூஸ் மீ சூர்யா! ஏன் பேச்சை வளர்க்க வேண்டும்? இது மாதிரி நேரங்களில் எனக்கும் உங்களை மாதிரியே அனாவசியமான பேச்சுக்கள் பிடிப்பதில்லை,"

என்று சொல்லிவிட்டு, காயத்திரியின் பக்கம் திரும்பி,

"இன்ஸ்பெக்டர் காயத்திரி! சூர்யாவை சோதனை போடுங்கள்!"

காயத்திரி குலாம்ஷாவின் உத்தரவு வாங்கி முன்னே வர, சூர்யா பின்னால் ஓரடி எடுத்துவைத்தாள்.

"அப்படியே நில்லுங்கள் மிஸ் சூர்யா. அசைந்தால் இனி அசையவே முடியாமல் போவீர்கள். காயத்திரி குயிக்!"

டி.ஐ.ஜி.டென்சிலின் கரத்தில் பிஸ்டல் குந்தியிருந்தது. உதடு உத்தரவிட்டது.

சூர்யா சாகப் பயந்தவளல்ல. ஆனால் இப்போது சாக விரும்பவில்லை.

எனவே- தொடர்ந்து பின்னோக்கி நகராமல் நின்றாள்.

காயத்திரி சூர்யாவின் உடலை தடவ, இடுப்பில் தட்டுப்பட்டது கைத்துப்பாக்கி.

"பொறு காயத்திரி! நானே எடுத்துத் தருகிறேன்! இனி மறைக்கவா முடியும்?"

சூர்யா தானாகவே எடுத்துத்தருவாள் என்று காயத்திரி தவறாக நினைத்து அனுமதிக்க,


குலாம்ஷா உஷாராகி "காயத்திரி நீயே அதை...."

என்று சொல்லி முடிக்க முன்னர்,

டி.ஐ.ஜி.டென்சில், காயத்திரி மடைத்தனமாக நடந்துகொள்ளப் போகிறாளே என்று நினைத்து, இருக்கையை விட்டு எழுந்த நொடியில்,

சூர்யா அசுர வேகத்தில் செயற்பட்டு,

> அங்கும் இங்கும் அலைபோல-தினம்
> ஆடிடும் மானிட வாழ்விலே
> எங்கே நடக்கும் எது நடக்கும்-அது
> எங்கே முடியும் யாரறிவார்."
>
> -கவியரசு கண்ணதாசன்-



தன் இடுப்பில் இருந்து கைத்துப்பாக்கி உருவியபடியே மறுகரத்தால் காயத்திரியை இழுத்து தன்னோடு சேர்த்துக்கொண்டு,

கைத்துப்பாக்கி முனையைக் காயத்திரியின் வலதுபுற நெற்றிப் பக்கத்தில் அழுத்தியபடி,

"இப்போது என்முறை! யார் அசைந்தாலும் எனக்கும் பிடிக்காது; என் துப்பாக்கிக்கும் பிடிக்காது. மிஸ்டர் டி.ஐ.ஜி! சாகசம் வேண்டாம். அப்படியே அமருங்கள்!"

நிலமையின் தீவிரம் உணர்ந்து டி.ஐ.ஜி. டென்சில் சூர்யாவின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டார்- சோபாவில் அமர்ந்தார்.

"குட்! அந்த துப்பாக்கியையும் கீழே போடுங்கள்."

போட்டார்! சூர்யா சிரித்தாள்.

"அதனை நீங்கள் உங்கள் வசம் எடுத்துக்கொள்ள எவ்வளவு நேரமாகும்? அதனால் என் பிரிய டி.ஐ.ஜி..... அப்படியே உங்கள் பூட்ஸ் கால்களால் அதனை ஒரு பத்தடி தூரத்திற்கு உதைத்துவிடுங்கள்- பிளீஸ்!"

உதைத்தார். "இதுவும் குட். தாங்க் யூ டி.ஐ.ஜி.." என்றுவிட்டு இதுவரை டி.ஐ.ஜி.யோடு பேசினாலும் தனது கடைக்கண் பார்வையில் வைத்திருந்த குலாம்ஷாவிடம்,

"இன்ஸ்பெக்டர் குலாம்ஷா! நகர முயல வேண்டாம். நான் பொல்லாதவள்!"

குலாம்ஷா சிரித்தார்.

"மிரட்டுகிறாயா பெண்ணே? நீ கொலை செய்ய துணிய மாட்டாய். எனக்குத் தெரியும்!"

முன்னால் இரண்டு அடி எடுத்து வைத்தார்.

சூர்யா குரல் உயர்த்தினாள்.

" டி.ஐ.ஜி! உங்கள் முட்டாள் இன்ஸ்பெக்டரை கட்டுப்படுத்துங்கள். கொலை எனக்குப் புதிதல்ல!"

மூன்றாவது அடி எடுத்து வைத்தபடி கேட்டார், குலாம்ஷா,

"அப்படியா? சுமார் எத்தனை கொலைகள்?"

"மூன்று! இப்போது நீர் முன்னே நகர்ந்தால் மேலும் மூன்று."

"மூன்றும் மூன்றும் ஆறு! ஆக ஆறு கொலைகள். அதற்கென்ன செய்துதான் பாரேன்!"

குலாம்ஷா இப்போது எடுத்துவைத்தது நாலாவது அடி.

காயத்திரி பதட்டப்படவில்லை. இந்திரா தான் ஹோலின் மூலையில் பயத்தில் உறைந்து போனவளாக நின்று கொண்டிருந்தாள்.

சூர்யா இப்போது கைத்துப்பாக்கி விசையில் விரல் பதித்தாள்.

"குலாம்ஷா வேண்டாம்! வரவேண்டாம். காயத்திரி அவரை நிற்கச் சொல்! சாகப் போவது நீதான்!"

காயத்திரி மௌனமாய் நின்றாள்.

டி.ஐ.ஜி.டென்சிலும் எதுவுமே பேசவில்லை. குலாம்ஷாவையும், சூர்யாவையும் கவனித்துக் கொண்டிருந்தார்.

காயத்திரி மரணப் பயம் இல்லாமல் தைரியமாக நிற்கிறாளே என்று மனதில் வியந்து, மனதிற்குள் அவள் தைரியத்தை பாராட்டிக் கொண்டிருக்க,

குலாம்ஷா ஐந்தாவது அடி எடுத்து வைத்துவிட்டார்.

"சூர்யாக் கண்ணு சுடுவது என்றால் சுடு! காயத்திரி செத்தால் எனக்கென்ன? பெண் உரிமை பேசும் மிஸ் சூர்யாவே கவலைப்படாதபோது குலாம்ஷா ஏன் கவலைப்படவேண்டும்?"

"வேண்டாம்! என் எதிரிகள் நீங்கள் அல்ல. பொலிசும் எனக்கு எதிரியல்ல. விரயமான கொலை வேண்டாம்!"

"அப்படியானால் யார் உன் எதிரிகள்? பொலிசிடம் சொல்லு!"

"பொலிஸ் எனக்கு எதிரியல்ல. ஆனால் பொலிஸ்மீது எனக்குப் பிரியமும் இல்லை!""

குலாம்ஷா நின்று அவளை நிதானமாய்ப் பார்த்தார்.

"சூர்யா நீ சரணடைவதுதான் உனக்கு நல்லது."

"சரணடைகிறேன். ஆனால் இப்போதல்ல. பிளீஸ் என் வழியில் குறுக்கிட்டு...."

குலாம்ஷா அவளை பேசவிடாமல் குறுக்கிட்டு,

"எது உன் வழி? பொலிசுக்கு வேடிக்கை காட்டிக்கொண்டு கொலை செய்வதா சூர்யா?"

"கொலைதான்! ஆனால் கொல்லப்பட்டவர்கள் யாரும் காந்திகளல்ல."

"வாதம் எதற்கு சூர்யா? அந்தத் துப்பாக்கியைக் கீழே போடு!"

"முடியாது!"

"என்னாலும் முடியாது. நீ தப்பிக்கொள்வதை அனுமதிக்க!"

குலாம்ஷா இப்போது ஆறாவது அடி எடுத்து வைத்தார்.

சூர்யா அவர் தொட்டுவிடும் தூரத்தில் இருந்தாள்.

ஒன்று-இரண்டு-மூன்று..... மூன்றே நொடிகள்.

காயத்திரியின் முடிவை தீர்மானிக்க சூர்யாவுக்கு இருந்த மூன்று நொடிகள்.

'இவள் எனக்கு என்ன தீங்கு செய்தாள்? 'இவள் உயிர் பிரிதலில் எனக்கென்ன இலாபம்?'

சூர்யா யோசித்தாள்- சூர்யா நிதானித்தாள்.

'குலாம்ஷாவை சுட்டுவிடலாமா? எச்சரித்தும் கேட்காமல் முன்னேறும் குலாம்ஷாவை சுடுவது பாவமல்லவே. சே...ச்....சே.. வேண்டாம்.

'குலாம்ஷாவும் குற்றவாளிகள் கொடியவர்களாக இருந்தால் இரக்கம் காட்டும் ரகமல்ல. அதனால் கொள்கைப் பொருத்தம் ஓ.கே. எனவே கூடாது; சுடக் கூடாது.'

மூன்று நொடி கலைந்தது. சூர்யா காயத்திரியைத் தன் பிடியில் இருந்து விலக்கினாள்.

விலக்கிவிட்டு குலாம்ஷாவின் மார்புக்கு எதிரே கைத்துப்பாக்கியை நீட்டிக் குறி பார்த்தாள்.

குலாம்ஷாவின் உதட்டில் ஏற்கனவே இருந்த புன்னகை இப்போது மேலும் வளர்ந்து அடர்த்தியானது.

"சுட நினைத்தால் சுட்டுவிட வேண்டும் சூர்யா. சுடலாமா விடலாமா என்றெல்லாம் யோசித்து, பின்னர் நீ வசனமெல்லாம் பேசிமுடிக்கும் வரை பொறுத்திருந்து, அதன் பின்னர் மூச்சுப் பிடித்து, நான் பேசி முடிக்க நீ காத்திருந்து..... இதெல்லாம் சினிமாவில்தான் சாத்தியப்படும்"

குலாம்ஷா சொல்லிவிட்டுச் சிரிக்க,

டி.ஐ.ஜி.டென்சில் எழுந்துபோய் குனிந்து தன் பிஸ்டலை எடுத்துக்கொண்டு நிமிர்ந்து,

"சூர்யா! நீ சுடமாட்டாய் என்று எங்களுக்கு நூறு வீதமாகத் தெரியும். பிறகுமேன் பூச்சாண்டி? துப்பாக்கியைப் பத்திரமாக குலாம்ஷாவிடம் கொடம்மா!"

சூர்யா குலாம்ஷாவின் மார்புக்கு நேராக பிடித்திருந்த தன் கைத்துப்பாக்கியை வெறுப்பாக கீழே வீசினாள்.

"உனக்கு வைத்த பரீட்சை இது. நீ தேறிவிட்டாய். வெரி குட்!"

என்று சொன்ன குலாம்ஷாவை ஆச்சரியமாய்ப் பார்த்தாள் சூர்யா.

"யெஸ் சூர்யா! உன் நோக்கம் நியாயம் என்பதில் எங்களுக்கு..... ஐ மீன்... டி.ஐ.ஜிக்கு, எனக்கு, காயத்திரிக்கு சந்தேகமேயில்லை. அதற்காக நீ செய்த..... மன்னிக்க வேண்டும் நீயும் சேர்ந்து செய்த காரியங்களில் எங்களுக்கு சந்தோசம் என்றும் அர்த்தமல்ல."

"என்ன சூர்யா, குலாம்ஷா சொல்வது புரியவில்லையா? அல்லது புரியாத மாதிரி இன்னும் நடிக்கும் எண்ணமா? நடிக்காதே சூர்யா. நாங்கள் உனக்கு செவாலியர் விருது தரப்போவதில்லை."

இந்திரா வந்து சூர்யாவின் அருகில் நின்று கொண்டாள்.

திடீரென்று சூர்யா கேட்டாள்,

"நடிப்பவர்களுக்கு விருது கொடுக்க வேண்டாம். பெண்களைக் கெடுப்பவர்களுக்கு என்ன கொடுக்க முடியும் உங்களால்?"

அதற்கு குலாம்ஷாதான் பதில் சொன்னார்.

"கொடுக்க வேண்டியது • பொலிசின் வேலையல்ல மிஸ் சூர்யா. அது நீதிமன்றத்தின் வேலை."

சூர்யாவின் இதழ்களில் இகழ்ச்சியான புன்னகை தலைகாட்டியது.

"அதாவது பொலிசின் வேலை சட்டத்திடம் ஒப்படைப்பது மட்டும்."

"நூறுவீதம் சரி."

"சட்டத்தின் ஓட்டைகளால் குற்றவாளிகள் தப்பினால்....?"

காயத்திரி சூர்யாவின் கேள்விக்கு பதில் சொன்னாள்.

"புத்திசாலிக் குற்றவாளிகள் என்று மனதில் நினைத்துக் கொள்வோம்."

காயத்திரி கேலி செய்கிறாள் என்று குலாம்ஷாவும், டி.ஐ.ஜி.டென்சிலும் புரிந்து கொண்டனர்.

"காயத்திரி சொல்வது சரிதான்."

என்றார் குலாம்ஷா.

திடீரென்று தரையில் மடங்கி அமர்ந்து சூர்யா அழத் தொடங்கினாள்.

"கெடுத்துவிட்டீர்களே குலாம்ஷா! கடைசி நேரத்தில் குறுக்கிட்டு கெடுத்து விட்டீர்களே!"

என்றாள் விசும்பிக் கொண்டு சூர்யா.

குலாம்ஷா அவளைப் பரிவோடு பார்த்துக்கொண்டு,

"இல்லை. கெடுத்துவிடவில்லை. உனது இலக்கை நீ தொட உதவலாம்."

என்றார். சூர்யா சட்டென்று விழிகள் பிரகாசமாகி, அவரைப் பார்த்தாள்.

"உண்மைதான். அதற்கு முன் நீ உண்மை பேசவேண்டும். இது சட்டத்திற்காகவல்ல; நானும், டி.ஐ.ஜியும் இந்த வழக்கில் இதுவரை வந்த பாதை சரியா என்று அறிய மட்டும்!"

சூர்யா எழுந்தாள். கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

"நம்பலாமா?"

"நிச்சயமாக!"

"தாங்க்யூ! சொல்கிறேன். கேளுங்கள்!"

**(வரும் வாரம் நிறைவு பெறும்)**

## பேனா நண்பர் அரங்கம்



* ஆ.ரவிச்சந்திரகுமார்
* 21
* ரங்கா என்டர்பிரைசஸ் நுவரெலியா வீதி, புசல்லாவை.
* சித்திரம் வரைதல், பத்திரிகை வாசித்தல்.



* எம். றம்சான்
* 18
* 78, மீரிப்பன்னை வீதி, தர்கா நகர்.
* வழமையான பொழுது போக்குகள்.



* எம்.விஜயா
* 18
* வெதமுல்ல குறூப் ரம்பொட.
* பத்திரிகை, வானொலி.



* எஸ்.நோனா பேகம்
* 17
* நிக்கவத்த பாடசாலை வீதி, கிபிஸ்ஸ.
* வழமையானவை.



* எம். தங்கராணி
* 33
* P.O.BOX- 26535 SAFAT.13126 KUWAIT.
* வழமையானவை.



* இஸ்ஸத் பரீனா
* 30
* P.O.BOX- 322 CODE NO.211 SALALAH, OMAN.
* வானொலி, தொலைக்காட்சி.

## வீர மக்கள் தின கவிதைப் போட்டி

'ஐக்கியமே பலம்' என்ற தலைப்பில் சுவிற்ஸர்லாந்திலுள்ள ஐக்கியத்தை வலியுறுத்துவோர் தினமுரசு மூலமாக நடாத்திய கவிதைப்போட்டி முடிவுகள்-

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (PLOT) செயலதிபர் அமரர் க. உமாமகேஸ்வரனின் நினைவு தினத்தை முன்னிட்டு இப்போட்டி நடத்தப்பட்டது.

ஆறுதல் பரிசுபெறுவோரின் விபரம் ஏற்கனவே தரப்பட்டது. ஐநூறு ரூபாவுடன் நினைவுப்பரிசு பெறும் 10 பேரில் மேலும் ஐந்து பேரின் விபரம் கீழே.

06. ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் அமரர் க.பத்மநாபா நினைவுப் பரிசு.

அழகையா உதயகீர்த்தி
மட்/ பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயம்.
களுவாஞ்சிக்குடி.

07. மக்கள் விடுதலைக் கழகத்தை வளர்த்த புதிய பாதை சுந்தரம், இஸ்லாமிய மக்கள் தோழன் இரா.வாசுதேவா, படைத்துறைச் செயலர் கண்ணன், இரா. ஜெயச்சந்திரன் (பார்த்தன்), காத்தான், வன்னி நடேசன், சின்னமெண்டிஸ், கந்தசாமி (சங்கிலி) ஆகியோர் நினைவுப்பரிசு.

செல்வன். பாலசுந்தரம் பானுசந்தர்
நெசவாலை வீதி
அக்கரைப்பற்று.

08. த.வி.கூ.மூத்த தலைவர்கள் அமரர் அ.அமிர்தலிங்கம், அமரர் வே.யோகேஸ்வரன் நினைவுப்பரிசு.

பி.செல்வம்
144/5, மினுவாங்கொட றோட்
ஏக்கல, ஜா-எல.

09. டெலோ தலைவர் அமரர் ஒபரோய் தேவன் நினைவுப் பரிசு.


ஐ.வாசுதேவன்
கலஹா குறூப், கலஹா.

10. மறைந்த து.பஞ்சலிங்கம், மனோ மாஸ்டர் நினைவுப் பரிசு.

த.கோமதி
வேளார்வீதி, ஆரையம்பதி
மட்டக்களப்பு.

—அன்புடன்—
ஐக்கியத்தை விரும்புவோர் -சுவிஸ்-

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மக்சீம் கார்க்கி

இது வெறும் கற்பனைகளின்
அணிவகுப்பல்ல.
சர்வாதிகாரத்தின் கால்களுக்கிடையே
விழுந்து கிடந்தவர்களின்
உண்மை வாழ்க்கையின்
மிகச் சிறந்த படப்பிடிப்பு!

காதலும்,சோகமும்,வீரமும்
கலந்த புரட்சியாளர்களது
வாழ்க்கையின் பதிவுமிது!

ரஷ்ய எழுத்தாளர்
மக்சீம் கார்க்கியின்
எழுத்துக்கள் அமரத்துவமானவை.
என்றும் இளமையானவை.

மெல்ல ஆரம்பித்து
கதை நடக்கும் சூழல் சொல்லி
சூடாக, சுவையாக
தொடரப் போகும் கதையிது.
தவறவிடாமல் தொடர்ந்து
வாசியுங்கள்!

நெகிழ்ந்து, உரமாகி, வசமாகி
என்று பல்வேறு உணர்வுகளில்
-இத் தொடர்-
உங்களை ஆழ்த்தும்!

-ஆ-ர்-

## 2

இப்படித்தான் மிகயீல் விலாசவ் என்பவனும் வாழ்ந்தான். அடர்ந்த புருவங்களுக்குக் கீழே அவனது சிறு கண்கள் வெறுப்புக் கலந்த சந்தேகத்துடன் பார்க்கும். அவன் ஒரு மந்தமான, உடல் முழுதும் ரோமம் அடர்ந்த தொழிலாளி. தொழிற்சாலையில் அவன்தான் சிறந்த தொழிலாளி; தொழிலாளர்களில் அவனே சிறந்த பலசாலி. ஆனால் அவன் தன் மேலதிகாரிகளோடு அடிக்கடி முறைத்துக்கொள்வான்; எனவே அவனால் அதிகம் சம்பாதிக்க முடியவில்லை. ஒவ்வொரு பண்டிகை நாளிலும் அவன் யாரையாவது நன்றாக அடித்து வெளுத்து வாங்கிவிடுவான்; எனவே அவனை யாருக்கும் பிடிப்பதில்லை. எல்லோரும் அவனைக் கண்டு பயந்தார்கள். அவனை எப்படியாவது பதிலுக்குப் பதில் தாக்கிவிட வேண்டும் என்று எவரேனும் திட்டமிட்டாலும், நடைமுறையில் நிறைவேறுவதில்லை. தன்னை யாராவது தாக்க வருவதை விலாசவ் கண்டு விட்டானானால், உடனே அவன் ஒரு பாறாங்கல்லையாவது, பலகையையாவது, கம்பியையாவது கையில் தூக்கிக்கொண்டு, தன் கால்களை அகட்டி ஊன்றி, தனது எதிரியை அமைதியுடன் எதிர்பார்த்து நிற்பான். அவனது மயிரடர்ந்த கரங்களையும், கண்ணிலிருந்து கழுத்துவரையிலும் காடாய் அடர்ந்து வளர்ந்து மண்டிய கரிய தாடியையும், கோபாவேசமான முகத்தையும் கண்டுவிட்டாலே போதும், யாரும் நடுநடுங்கிப் போவார்கள். ஆனால் ஜனங்கள் அவனது கண்களைக் கண்டுதான் அதிகம் பயந்தார்கள். ஏனெனில் அவை சிறியனவாகவும், உருக்குத் தமர் உளியைப் போல் துளைக்கும் கூர்மை பெற்றனவாகவும் இருந்தன. அந்தக் கண்களின் பார்வையைக் கண்டதுமே தாங்கள் ஏதோ ஒரு அசுர சக்தியின் முன்னால், இரக்கமோ பயமோ ஒரு சிறிதும் காட்டாது தம்மை எதிர்த்துத் தாக்கத் தயாராக இருக்கும் ஒரு மிருக வெறிக்கு முன்னால் அகப்பட்டுக் கொண்டதாகவே அவர்களுக்குத் தோன்றும்.

"சரி, இங்கிருந்து ஓடுங்கடா, கழிசடைகளே!" என்று அவன் முரட்டுக் குரலில் சொல்லுவான். அவனது முகத்தை மறைத்து அடர்ந்திருக்கும் தாடிக்கு ஊடாக அவனது மஞ்சள் பூத்த பற்கள் மின்னி மறையும். உடனே அந்த மனிதர்கள் கோழைத்தனமாக வாய்க்கு வந்தபடி வைதுகொண்டே பின்வாங்கி விடுவார்கள்.

"கழிசடைகள்!" என்று அவர்களுக்குப் பின்னே கத்துவான். அப்பொழுது அவனது கண்கள் ஏளன பாவத்தோடு குத்தூசியைப் போல் கூர்ந்து நோக்கும். பிறகு அவன் தன் தலையை நிமிர்த்தி நடந்தவாறே, அவர்களைத் தொடர்ந்து சென்று உரத்துச் சத்தம் போடுவான்:

"சரி, எவனடா சாக விரும்புகிறவன்?"

எவனுமே சாக விரும்புவதில்லை.

அவன் அதிகமாகப் பேசமாட்டான்; 'கழிசடை' என்பது அவனது பிரியமான வாசகம். அவன் போலீசாரையும் தொழிற்சாலை அதிகாரிகளையும் தன் மனைவியையும் இந்த வார்த்தையால்தான் அழைப்பான்:

"இங்கே பார், என் கால்சராய் கிழிந்து போயிருப்பதைப் பார்க்கவில்லையாடி, கழிசடையே!"

ஒருமுறை பதினாலு வயதுச் சிறுவனான தன் மகன் பாவெலின் தலைமயிரைப் பற்றி இழுத்து உதைக்கப் போனான்; ஆனால், அந்தப் பையனோ உடனே ஒரு பெரிய சுத்தியலைக் கையில் தூக்கிக்கொண்டு, கடூரமாகச் சொன்னான்.

"விடு என்னை, தொடாதே!"

"என்னது?" என்று கேட்டுக்கொண்டே அவனது தந்தை நெட்டையாகவும் ஒல்லியாகவுமிருந்த தன் மகனின் உருவத்தை நோக்கி, மரத்தை நோக்கிச் செல்லும் நிழலைப்போல முன்னேற முனைந்தான்.

"நான் பட்டபாடு போதும். இனிப்பட மாட்டேன்!" என்று கூறிக்கொண்டே சுத்தியலை உயர்த்தினான் பாவெல்.

தந்தை அவனை ஒருமுறை பார்த்தான்; பிறகு தனது மயிரடர்ந்த கரங்களை முதுகுக்குப் பின் கோர்த்துக்கொண்டான்.

"ரொம்ப சரி!" என்று சிறு சிரிப்புடன் சொன்னான். பிறகு ஒரு பெரு மூச்சுவிட்டு விட்டு: "கழிசடைப் பயலே, ரொம்ப சரி!" என்றான்.

இதற்குப் பின் தன் மனைவியிடம் அவன் சொன்னான்:

"இனிமேல் நீ என்னைப் பணம் கேட்காதே, இன்று முதல் பாவெலே உன்னைக் காப்பாற்றுவான்!"

"நீ கிடைக்கிற கூலியையெல்லாம் குடித்துத் தீர்த்துவிடப் போகிறாயா?" என்று துணிந்து கேட்டாள் அவள்.

"ஏ, கழிசடையே! அது ஒன்றும் உன் வேலையல்ல. வேண்டுமென்றால் நான் வைப்பாட்டிகூட வைத்துக்கொள்வேன்..!"

அவன் வைப்பாட்டி வைத்துக்கொள்ளாவிட்டாலும், அன்று முதற்கொண்டு, இரண்டு வருஷம் கழித்து அவன் செத்துப்போன காலம்வரை, தன் மகனை மதிக்கவுமில்லை; அவனோடு பேசவுமில்லை.

அவனிடம் அவனைப்போலவே பூதாகாரமாகவும் மயிர் அடர்ந்ததாகவுமுள்ள ஒரு நாயும் இருந்தது. அந்த நாய் ஒவ்வொரு நாள் காலையிலும் அவனைத் தொடர்ந்து தொழிற்சாலை வரையிலும் செல்லும்; மாலையில் அவனது வருகைக்காகத் தொழிற்சாலை வாசலில் காத்து நிற்கும். விலாசவ் பண்டிகை நாட்களில் ஒவ்வொரு சாராயக் கடையாகச் சென்று வருவான். வழியில் எவரிடமும் பேச மாட்டான்; எனினும் யாரையோ இனம் காண முயல்வதுபோல ஒவ்வொருவரையும் கூர்ந்து பார்ப்பான். அவனது நாயும் தனது அடர்ந்த வாலை ஆட்டிக்கொண்டு அவனுக்குப் பின்னாலேயே நாள் முழுதும் திரிந்துகொண்டிருக்கும். நன்றாகக் குடித்து விட்டு வீடு திரும்பிய பிறகு, விலாசவ் சாப்பிட உட்காருவான்; அப்போது அவன் தன் நாய்க்குத் தனது உணவுப் பாத்திரத்திலிருந்தே உணவு கொடுப்பான். அவன் அந்த நாயை அடித்ததும் கிடையாது, திட்டியதும் கிடையாது, அதுபோலவே அந்த நாயிடம் கொஞ்சிக் குலாவியதும் கிடையாது. சாப்பாடு முடிந்த பிறகு, சாப்பிட்ட பாத்திரங்களை அவனது மனைவி உடனே அப்புறப்படுத்தத் தவறிவிட்டால் அவன் அந்தப் பாத்திரங்களை எடுத்துத் தரையில் வீசியெறிவான்; பிறகு தன் முன்னால் ஒரு பாட்டில் ஓட்கா மதுவை எடுத்து வைத்துக் கொள்வான்; தன் முதுகைச் சுவரோடு சாய்த்து, கண்களை மூடி, வாயைப் பிளந்து, கேட்டவர்களுக்கு ஏக்கம் கொடுக்கும் தாழ்ந்த குரலில் ஒரு பாட்டை அழுதாற்போல் பாட ஆரம்பிப்பான். சோகமயமான அந்த ஆபாச ஒலி ரொட்டித் துண்டுகளை உதறி வெளித்தள்ளி, மீசை மயிரில் சிக்கித் திணரும். அவன் தன் தாடி மீசையைத் தன் தடித்த விரல்களால் கோதித் தடவி விட்டுக்கொண்டே பாட ஆரம்பிப்பான். அவனது பாட்டின் வாசகங்கள் தெளிவற்று நீட்டி இழுக்கும். ஆனால் அவனது சாரீரமோ குளிர்காலத்தில் ஊளையிடும் ஓநாய்க் கூட்டத்தின் ஒப்பாரியை நினைப்பூட்டும். ஓட்கா மது தீரும் வரையிலும் அவன் பாடுவான்; அதன் பின்னர் அவன் பெஞ்சின்மீது சாய்ந்து விடுவான்; அல்லது அப்படியே மேஜைமீது குனிந்துபடுத்து ஆலைச் சங்கு அலறுகின்ற காலை நேரம் வரையிலும் தூங்குவான். அவனது நாயும் அவன் பக்கத்திலேயே விழுந்து கிடக்கும்.

அவன் குடல் புண்ணால் மாண்டுபோனான். சாவதற்கு முன்னால் ஐந்து நாட்களாக, அவன் படுக்கையிலே துடித்துப் புரண்டான். உடலெல்லாம் கறுத்துப்போன அவன், கண்களை மூடி, பற்களை நறநறவென்று கடித்தான். இடையிடையே தன் மனைவியைப் பார்த்துச் சொல்லுவான்:

"எனக்குப் பாஷாணம் கொடு, என்னை விஷங்கொடுத்துக் கொன்றுவிடு!"

டாக்டர் ஏதோ ஒரு ஒத்தடம் போடச் சொன்னார். ஆனால், மிகயீல் விலாசவுக்கு ஆபரேஷன் பண்ணித்தானாக வேண்டும் என்றும், அன்றைய தினமே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்ல வேண்டுமென்றும் சொன்னார்.

"நீ நாசமாய்ப் போக, கழிசடையே! உன் உதவியில்லாமலே நான் செத்துப் போகிறேன்!" என்று முனகினான் மிகயீல்.

டாக்டர் சென்ற பிறகு, அவனது மனைவி கண்ணீர் பொழிந்தவாறே ஆபரேஷன் பண்ணிக்கொள்ளும்படி புருஷனிடம் மன்றாடிக் கேட்டுக்கொண்டாள். அவனோ தன் முஷ்டியை ஆட்டியவாறே அவளைப் பார்த்துச் சொன்னான்:

" நான் பிழைத்து எழுந்திருந்தால், உனக்குத்தான் சங்கடம்!"

ஆலைச் சங்கு அலறிய அந்த அதிகாலையில் அவன் இறந்து போனான். சவப்பெட்டியில் திறந்த வாயோடும், வெறுப்பு நிறைந்து நெறித்துப்போன புருவங்களோடும் அவன் கிடந்தான். அவனது மனைவியும் மகனும் நாயுமாகச் சேர்ந்து அவனைப் புதைத்தார்கள். பழைய திருட்டுப் புள்ளியும், தொழிற்சாலையிலிருந்து நீக்கப்பட்ட குடிகாரத் தொழிலாளியுமான தனீலோ வேஸாவ்ஷிகோவும், அந்தக் குடியிருப்பிலுள்ள சில பிச்சைக்காரர்களும் அந்தச் சவ அடக்கச் சடங்கில் கலந்துகொண்டார்கள். அவனது மனைவி கொஞ்ச நேரம் அழுதாள், அமைதியாக அழுதாள். பாவெல் அழவே இல்லை. தெரு வழியே சென்ற அவனது சவ ஊர்வலத்தைக் கண்ட ஜனங்கள் சிறிது நேரம் நின்று குறியிட்டபடி தம்முள் பேசிக்கொண்டார்கள்.

"பெலகேயாவுக்கு இவன் செத்ததே ஒரு கொண்டாட்டம்தான்!"

"அவன் சாகவா செய்தான்? நாய் மாதிரி அழுகிப் போனான்!"

சவப் பெட்டியைப் புதைத்துவிட்டு, ஜனங்கள் போய்விட்டார்கள். ஆனால், நாய் மட்டும் அந்த கல்லறையை முகர்ந்தபடி, புது மண்ணில் மௌனமாக உட்கார்ந்திருந்தது. சில நாட்கழித்து யாரோ அதை அடித்துக் கொன்றுவிட்டார்கள்.....

★★★

தந்தை காலமாகி இரண்டு வாரங்களுக்குப் பிறகு, ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று, பாவெல் விலாசவ் மூக்கு முட்டக் குடித்து விட்டு வீடுவந்து சேர்ந்தான். வீட்டுக்குள் தள்ளாடித் தடம்மாறி நடந்தான்; மேஜை மூலையிலிருந்த ஆசனத்தை நோக்கித் தொட்டுத் தடவி நகர்ந்து சென்றான்; தன் அப்பன் செய்தது போலவே மேஜைப் பலகை மீது முஷ்டியால் ஓங்கிக் குத்தியவாறு தன் தாயைப் பார்த்துச் சத்தமிட்டான்:

"கொண்டா சாப்பாடு!"

அவனது தாயோ தன் மகனுக்கருகே வந்து உட்கார்ந்தாள். தன் கரங்களால் அவனை அணைத்து, அவனது தலையைத் தன் மார்பகத்தில் புதைத்துக்கொண்டாள். அவனோ அவளை விலக்க முயன்றான்.

"அம்மா, கொண்டா சீக்கிரம்!"

"முட்டாள் பயலே!" என்று தாய் கவலையோடும் அன்போடும் அவனது கையை விலக்கிக்கொண்டே சொன்னாள்.

"நான் புகை பிடிக்கவும் போகிறேன். அப்பாவின் குழாயை எடுத்துக் கொடு" என்று சொல்லுக்கு வளையாத நாக்கினால் குழறினான் பாவெல்.

அவன் குடித்துவிட்டு வந்தது இதுதான் முதல் தடவை. ஓட்கா அவனது உடம்பைத் தளர்வுறச் செய்திருந்தது. எனினும் அவனது பிரக்ஞையை, போதை முற்றும் துடைத்து விடவில்லை. எனவே அவனது மூளைக்குள்ளே ஒரே ஒரு கேள்வி மட்டும் முட்டி மோதிக்கொண்டிருந்தது:

"குடித்திருக்கிறேனா? குடித்திருக்கிறேனா?"

அவன் தன் தாயின் அன்பைக் கண்டு தடுமாறினான்; அவளது கண்ணில் மிதந்த சோகம் அவன் உள்ளத்தைத் தொட்டது. அவன் அழ நினைத்தான்; எனினும் அந்த உணர்ச்சியை அமுக்கடிப்பதற்காக, தன் குடிவெறியை அதிகமாக வெளிக்காட்டிக் கொண்டான்.

ஈரம் படிந்து கலைந்து போயிருந்த அவனது தலை மயிரைக் கோதிக் கொடுத்தாள் அவனது தாய்.

"நீ இப்படிச் செய்யக்கூடாது!" என்று அமைதியாகச் சொன்னாள்.

அவனுக்கு குமட்டிக்கொண்டு வந்தது. பிறகு பலமாக வாந்தியெடுத்தான். அதன் பின்னர் தாய் அவனைப் படுக்கையில் கொண்டுபோய்ப் படுக்க வைத்து, வெளிறிப் போன அவனது நெற்றியின் மீது ஒரு ஈரத்துணியைப் போட்டாள். அது அவனுக்கு ஓரளவு தெளிவைக் கொடுத்தது; எனினும் அவனைச் சுற்றியுள்ள பொருள்கள் எல்லாம் நீச்சலடித்து மிதப்பது போலிருந்தன. அவனது கண்ணிமைகள் கனத்துத் திறக்க முடியாதபடி அமுத்திக்கொண்டிருந்தன. தன் வாயில் உறைத்துக்கொண்டிருக்கும் அந்தக் கார நெடியின் உணர்ச்சியோடு, அவன் தன் கண்ணிமைகளை லேசாகத் திறந்து பெரிதாகத் தெரியும் தன் தாயின் முகத்தைப் பார்த்தான். ஏதோ தொடர்பற்று நினைத்தான்:

"நான் இன்னும் சின்னப்பிள்ளைதான்; இதற்குள் குடித்திருக்கக் கூடாது. ஆனால், மற்றவர்கள் குடிக்கிறார்களே; அவர்களுக்கு ஒன்றும் செய்வதில்லை. நான் மட்டும் இப்படியாகி விட்டேன்...."

எங்கிருந்தோ அவனது தாயின் இனிமையான குரல் ஒலித்தது.

"இப்படிக் குடிக்க ஆரம்பித்தால், நீ என்னை எப்படிக் காப்பற்றப் போகிறாய்?"

"எல்லாரும்தான் குடிக்கிறார்கள்" என்று கண்களை மூடிக் கொண்டே பதில் சொன்னான் பாவெல்.

அவனது தாய் பெருமூச்சு விட்டாள். அவன் சொன்னது சரி, சாராயக் கடை ஒன்றில் மட்டும்தான் ஜனங்கள் ஓரளவேனும் சந்தோஷமாக இருக்க முடிகிறது என்பதை அவளும் அறிவாள்.

"ஆனால், நீ மட்டும் குடிக்காதே" என்று சொன்னாள் அவள். "உன் அப்பா உனக்கும் சேர்த்துக் குடித்துத் தீர்த்து விட்டார். அவர் என்னை படாத பாடு படுத்தினார். உன் தாய் மீது கொஞ்சமாவது நீ பரிவு காட்டக் கூடாதா?"

துக்கமான இந்த இனிய வார்த்தைகளைக் கேட்டதும், தந்தை உயிரோடிருந்த காலத்தில், வீட்டிலிருப்பதே தெரியாது, எப்போதும் மௌனமாய், அடிக்குப் பயந்து சாகும் துயர வாழ்வையே தன் தாய் வாழ்ந்து வந்தாள் என்பது பாவெலுக்கு ஞாபகம் வந்தது. தன் தந்தையைச் சந்திக்கக் கூடாது என்ற ஒரே காரணத்துக்காக, பாவெலும் எப்போதும் வீட்டை விட்டு வெளியேதான் திரிந்து கொண்டிருந்தான். எனவே அவன் தன் தாயிடம்கூட அதிகமாகப் பழகியதில்லை. ஆனால், இப்போது அவனுக்கு அறிவு தெளியத் தெளிய, அவன் தன் தாயை ஆர்வத்தோடு கவனிக்க ஆரம்பித்தான்.

(தொடர்ந்து வரும்)

பொடிக்கதை

# அன்பே ஆருயிரே.....

-கித்துள் ஐ.எஸ். கிருஷ்ணப்பிரியா-



**"சிந்தை மகிழத் தேடி சொந்தமென வந்த அன்பே சிந்து!- சில வேளைகளில் உன் சில்மிசங்கள் எனக்குப் புரியாத புதிர்கள்- ஆனால் அந்த சந்தோஷ நாட்களை-ஏன் கனவாக்கினாய்-என் கண்ணே!"**

பொழுது புலர்கிறது. வழக்கமாக மங்களமாய் ஒலிக்கும் சுப்ரபாதம் பக்கத்து வீட்டில் ஒலித்துக்கொண்டிருந்தது. அது இன்று எனக்குள் முகாரி ராகமாய் ஒலித்தது. சிந்துவின் நினைவுகளில் திளைத்திருந்த நான் கண்களைத் திறந்து சுவரில் இருந்த கலண்டரை நோக்குகின்றேன். இன்று மூன்றாம் திகதி எனக் காட்டியது.

சென்ற வாரங்களில் இந்த நாட்களில் அதிகாலைப் பொழுதுகளில் எனது கரங்களுக்குள் சிறைபட்டிருக்கும் சிந்து வலுக்கட்டாயமாய் கைகளிலிருந்து நழுவி காதுமடல்களைக் கடிப்பதும் நான் வேண்டுமென்றே கண்களை மூடிக்கொண்டு படுத்தால் கன்னத்தில் உரசுவதும் இன்னும் எனக்குள் பசுமையாய் இனித்தது.

பாதியிலே வந்த சொந்தம் பாதியிலேயே பிரிந்து விடும் என்பதை உணர்த்தவா கடும் நோயால் என் மடியில் மரணமானாய்? என்னோடும் என் குடும்பத்தோடும் இல்லறம் என்னும் சோலையில் மலர்ந்த மலராய் மணம் வீசிக்கொண்டிருப்பாய் என ஆயிரம் ஆயிரம் கனாக்கள் கண்டேனே. அன்பே! அதை கலைக்க என்னை விட்டு நீ பிரிவது தான் முடிவென்று நினைத்தாயா? காலத்தின் கோலத்தால் என்னை விட்டு நீ பிரிந்தாலும் உன் நினைவுகளை என் இதயத்தில் இருந்து பிரிக்கவே முடியாது.

உன்னை நான் சந்தித்த அந்த நாள் ஒரு சந்தோஷமான அதிர்ச்சி என்றே சொல்லலாம். "ஓ...எத்தனை அழகு?" என நான் எனக்குள் வியந்து போனேன். தாய் தந்தையற்ற உன்னை அந்தப் பெரியவர் அன்போடு வளர்த்தாலும் உனது முகத்தில் சந்தோஷத்தைத்தே நான் காண்பதில்லை. அன்றிலிருந்தே உன்மீது எனக்கு இனம் புரியாத விருப்பம். வீட்டில் எனது விருப்பத்துக்கு யாரும் குறுக்கே நிற்கமாட்டார்கள் என்ற தைரியத்தினால்தானே அந்தப் பெரியவரிடம் நெளிந்து வளைந்து முறைப்படி உன்னைக் கேட்டு என் சொத்தாக்கிக் கொண்டேன்.

படுக்கையிலிருந்து எழுந்த நான் கண்களில் பனித்த நீருடன் கண்ணாடியில் என் முகத்தை நோக்கினேன். மறக்க முடியாத-மறையாத நினைவுகள்போல் உன் சேஷ்டைகளின் விளைவாக பெரிதாக ஒருகீறல். அது உனது அழகிய நீண்ட நகத்தினால்தான் வந்தது. செல்லமாய் உன் முதுகில் தட்டிவிட்டு உன் அனுமதியின்றியே பலவந்தமாய் உனது நகங்களை வெட்டிவிட்டது நேற்றுத்தான் நடந்தது போலிருந்தது.

என் நண்பர்களிடம் உன்னை அறிமுகப்படுத்தியபோது "டேய் மச்சான் உன்னோட செலக்ஷன் ஏ வன்" என்றார்களே? அப்போது நீ துள்ளி ஓடிப்போய் சமையல் கட்டில் ஒளிந்துகொண்டாயே? வெட்கத்தினாலா? பயத்தினாலா? என்று எனக்குப் புரியவே இல்லை. அந்தப் பாவிகளின் கண் திருஷ்டியினால்தானோ நீ எதிர்பாராத நேரத்தில் என்னை விட்டுப் பிரிந்தது. என நான் இப்போதும் எனக்குள் விம்முகின்றேன்.

"சிந்து உன் முகத்தை என்னால் மறக்கவே முடியவில்லையே... மறக்க முடியவில்லையே" எனக்குள் அழுகின்றேன். அன்புக்கு இலக்கணமாய் வாழ்ந்த ஆருயிரே என்றும் நீங்காத உனது இனிய நினைவுகளுடன் நான் வாழ்கின்றேன். கண்களில் நீர் திரையிட அந்தப் புகைப்படத்தில் என் மடிமீது கொள்ளை அழகுடன் படுத்திருக்கும் என் ப்ரியம் நிறைந்த பூனைக் குட்டியான சிந்துவை ஆதரவாகத் தடவி முத்தமிடுகின்றேன். (யாரும் சிரிக்காதீர்கள்! நான் இங்கே அழுகின்றேன்)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை



# இனம் காட்டாத இரத்தம்

ஷர்மிளா இஸ்மாயில்

அவனுக்கு கடும் எரிச்சல் வந்தது. இடைவிடாது அழும் கடைசிப் பையனை அடக்குமாறு மனைவியை அதட்டினான். சாராயநெடி 'கும்'மென வாயிலிருந்து வீசவே மனைவி முகம் சுளித்து குழந்தையை குசினிக்குள் தூக்கிச் சுமந்தாள்.

இனம் புரியாத ஆவேச உணர்வுகள் மனதில் கிளர்ந்தன. 'சீ என்ன சீவியம்!' தனக்குள் முணுமுணுத்தவனாய் எழுந்து வெளியே சென்றான். கையில் ஒரு சதம் காசில்லை. நண்டும் சிண்டுமாய் ஐந்து பிள்ளைகள். மனைவி. நாளாந்த சாப்பாடே பெரும் பிரச்சனை. அது தவிர படிப்பு செலவு, நோய் நொம்பல் என வேறு. எல்லாம் சரியாகத்தான் இருந்தது முன்னர். அது அப்போது– அவன் குடிக்க ஆரம்பித்திருக்கவில்லை. நண்பர்கள் சகவாசம் தந்த குடிப்பழக்கம் தொற்றிய நாள் முதல் இந்த வாழ்க்கையே சிரமமாகிப் போனது அவனுக்கு. நிற்பாட்ட நினைத்தும் பார்த்தான். அந்த நினைப்பெல்லாம் கள்ளுக்கடை வாசலைக் காணும்வரைதான். 'வா மச்சான்' என உற்சாகமாய் அழைப்பு விடும் நண்பர்களைக் கண்டதும் எல்லாம் மறந்திடும்.

வாசலில் நின்ற மாமரம் இருளில் விழித்து இலைகளை அசைத்தது. கீழே சாய்ந்து அமர்ந்தான். மாலையில் போட்ட சரக்கின் வேகம் கை, கால் எல்லாம் ஜில்லென்றிருந்த உணர்வு. கிறக்கமாய் கண் மூடினான்.

'சுள்'ளென சுட்ட சூரிய கிரணம் உணர்ந்து விழித்தான். விடிந்து விட்டிருந்தது. தன்னை யாரும் வந்து எழுப்பவில்லை. வீட்டிற்குள் அழைக்கவில்லை. இரவு முழுவதும் மாமரத்தடியே உறைவிடம் எனவுணர்ந்து 'சுறுசுறு'வென கோபம் ஏறியது, "என்ன அலட்சியம்! பேசாமலிருந்து விட்டாளே காதகி!" மனைவியைத் திட்டியபடி எழ முயற்சித்தவன் பார்வை பக்கத்து வீட்டில் பட்டது. எழுந்தான்.

இதுவரை காலியாய்க் கிடந்த வீடு. பூட்டி வைத்திருந்தார்கள். இப்போது ஆட்களின் நடமாட்டம். இடுப்பில் கை வைத்து வேலியோரமாய்ப் போய் நின்று கவனித்தான். புதிய முகங்கள். அவனைப் பார்த்து புன்னகைத்தனர்.

"புதுசாய் வந்திருக்கிறீர்களோ? எங்கேயிருந்து? நேற்றா வந்தீர்கள்?" இவன் தனது தாய் மொழியில் கேட்க அவர்கள் விழித்தனர். ஏதோ சொல்ல வாயெடுத்தவனுக்குப் புரிந்து போனது. வேறு மொழி; வேறு இனம்; வேற்று மனிதர்கள் இவர்கள்; இவனுக்குப் பிடிக்காத இனம். காரண மில்லாத வெறுப்பு.

முகத்தை சுளித்துக்கொண்டான். அவர்கள் தமிழில் ஏதோ இவனிடம் சொல்வது கேட்டது. விடுவிடுவென நடந்து வீட்டுக்குள் போனான். "ஏண்டி, யாரது பக்கத்து வீட்ல குடிவந்திருக்கிறது? எங்கள் இன மக்களில்லை போலத் தெரிகிறது." மனைவி அவனைப் பார்த்தாள். இரவு நடந்த சம்பவத்தின் முடிவாய் தன்னை அடிப்பான் – ஏசுவான் என எதிர்பார்த்தவள் இது வேறு கேள்வியாய்ப் போனதில் லேசான சந்தோசம்.

"ஆம், யுத்த பிரதேசத்து மக்கள். அகதியாய் இருந்து பின் இங்கு குடி வந்திருக்கிறார்கள். பாவம். நல்லவர்கள்போல் தெரிகிறது. ஆனால் பேசிப் பார்க்க மொழி புரியவில்லை."

அவன் சிடுசிடுத்தான்.

"அடி! அவர்கள் வேறு இனம், வேறு மொழி புரிகிறதா? பேசாதே! பழகாதே! எனக்குப் பிடிக்காத இனம் அது. பேச்சு வார்த்தை ஏதும் இருக்கக்கூடாது. சொல்லிவிட்டேன். நல்லவர்களாம் நல்லவர்கள்!" உச்சஸ்தாயியில் உறுதியாய்க் கூறியவன் வேலிப் பக்கமாய்ப் பார்த்து காறியுமிழ்ந்தான்.

உருண்டோடிய நாட்களின் நகர்வில் பக்கத்து வீடு அவன் கண்காணிப்பின் பிடியில் சிக்கியிருந்தது. மாலையில் குடி மயக்கத்தில் முன்னர் மனைவியை ஏசிக் கொண்டிருப்பவன் இப்போது பக்கத்து வீட்டை நினைவிலிருத்தி இனத்தை இழுத்து ஏசினான். பாஷை புரியாவிட்டாலும் தமக்குத்தான் ஏதோ சொல்கிறான் என புரிந்தும் அவர்கள் மௌனமாகவேயிருந்தார்கள்.

கைக்ககப்பட்ட கல், கம்புகளை அவர்கள் கூரையில் வீசி எறிவதும் வேலியைச் சார்ந்து வைக்கப்பட்டிருந்த பூச்சட்டிகளையும் செடிகளையும் உடைத்து எறிவதும் காறியுமிழ்வதுமாக அந்த இனத்துக்கான தனது மன வெறுப்பைக் காட்டிக் கொள்வான். என்றாலும் அவர்கள் பொறுத்துக்கொண்டார்கள்.

"அகதியென்றாளே மனைவி, பார்த்தால் அது மாதிரியா தெரிகிறது? உடையென்ன? நகையென்ன? எங்கள் நாட்டில் நாம் பிச்சைக்காரர் போலிருக்க அவர்கள்...!" கொதித்தது அவன் மனம்.

"வேண்டாம். என்ன பைத்தியக்காரத் தனமான வேலை செய்கிறீர்கள்! அவர்களும் மனிதர்கள் தானே? வேறு இனம் என்றால் என்ன? உங்களுக்கு என்ன தீமை செய்து விட்டார்கள் என இப்படி துவேஷிக்கிறீர்கள்?" அவன் குடித்திருக்காத பொழுதுகளில் மனைவி மெதுவாய்ச் சொல்வாள். முறைத்துப் பார்ப்பான். "மூடி வாயை." என்பதோடு எழுவான். கதை முடியும்.

"கட கட...கட்"...வீட்டின் முன் முற்றத்திலிருந்து முப்பதடி தூரத்தில் ஆறரைக்கான இரயில் வண்டி உருண்டோடிக்கொண்டிருந்தது. எரிச்சலோடு மாமரத்தடியில் உட்கார்ந்திருந்தான் அவன். அவன் கையில் காசில்லை. குடிக்கவும் வழியில்லை. நண்பர்களைக் காணவுமில்லை. வீட்டுக்குள் குழந்தை குட்டிகளின் ஆரவாரமும் சிம்னி விளக்கின் மங்கிய ஒளியும்.

காலில் கடித்த எறும்பை நசுக்கிப் போட்டு விட்டு பக்கத்து வீட்டை பார்த்துக் கொண்டிருந்தான். மின்சார விளக்குகளின் ஒளியில் 'ஜில்'லென ஒளிர்ந்து மிளிர்ந்தது. ஆட்களின் நடமாட்டம் வேறு. ஏதேனும் உற்சவம் போல் தெரிகிறது.

"என்னங்க?" மனைவி கையில் தட்டுடன் நின்றாள். "என்னடி?" என்பதுபோல் உறுத்துப் பார்த்தான். "இந்தாங்க, சாப்பிடுங்க." பட்சணங்கள். பலவிதமாய் வாழைப்பழம். "எங்கால? யார் தந்தது?" கேட்டான்.

"அ...அது....வந்துங்க...நம் பக்கத்து வீட்டுக்காரங்க இன்னைக்கு அவங்கட உற்சவ நாளாம். அதுதான்.."

"தூ" துப்பியவன் பயங்கரமாய் உறுமினான். "கொண்டுபோய் கொட்டடி நாய்க்கு." தட்டைத் தட்டியவன் அவளது கன்னத்தை பதம் பார்த்தான். "என்ன துணிவிருந்தா எனக்கு கொண்டு வந்து நீட்டியிருப்பே இதை!"

பயத்தில் குழந்தைகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டியபடி மண்ணில் சிதறிய பலகாரங்களை பார்த்தபடி பரிதாபமாய் நின்றன. ஆத்திரமாய் நின்றவன் இரயில் பாதையைக் கடந்து எட்டிப் போனான்.

'தூ' என்ற காறல் சத்தம் காற்றைக் கிழித்துப் பறந்தது.

"அம்மா, அப்பா ஏன் கோவிச்சிக் கிட்டாரு?" மூத்தவன் மெதுவாய்க் கேட்க அவள் தடுமாறினாள். "அப்பா அப்படித் தானே பண்டா. உனக்குத் தெரியாதா? சின்ன விஷயத்துக்கெல்லாம் கத்துவாரே" சமாளித்தாள். பண்டா பேசவில்லை. சின்னப் பெண் சிரியானி சொன்னாள், "அநியாயம் அம்மா. அத்தனை பலகாரமும். நமக்கும் இல்லையென்றாகிவிட்டது."

"சரி...அப்பா திரும்பி வரமுன் படுத்துடுங்க." பிள்ளைகளை படுக்க வைத்தவள் சிம்னி விளக்கை ஊதி அணைத்தாள். "ஆண்டவனே, இவர் புத்தி ஏன் இப்படி சிறுமையாய்க் கிடக்குது? மனிதர்களை மனிதராய் மதித்துப் பழக என்றுதான் நற்புத்தியைகொடுக்கப் போறாயோ?" மானசீகமாய் வேண்டியபடி உறங்கிப் போனாள்.

மறுபடியும் மாலை குடிப்பதற்கு நண்பர்களோ, பணமோ கிட்டாத காரணத்தால் மனமும் உடலும் எரிய சோர்வாய் நடந்து வந்துகொண்டிருந்தான். வீட்டருகே இரயில் பாதை தூரத்தில் வரும்போதே தெளிவாய்த் தெரிந்தது. என்ன? அவனது கைக் குழந்தை மெதுவாய் தவழ்ந்தபடி இரயில் பாதையில் விளையாட, பக்கத்தில் மகள் சிரியானி சிரித்தபடி அவள் வயதையொத்த சிறுமிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள்.

அவசரமாய் மேட்டிலிருந்து இறங்கி ஓட்டமாய் ஓடி வந்தான். கடவுளே, ஆறரை மணி இரயில் வரும் நேரமே? எங்கே ஒரு நாளும் இல்லாதபடி இன்று இங்கு விளையாட வந்திருக்குதுகள். பதறினான்.

அவனால் நினைத்த வேகத்தில் ஓட முடியவில்லை. இரயிலின் என்ஜின் சத்தமும் சிரியானியின் 'ஐயோ' சத்தமும் ஒன்றாகக் கேட்க, மயங்கி தடாலென விழுந்துவிட்டான்.

விழித்தபோது-வெள்ளைக் கொடிகளை காற்றிலசைய பயங்கர நிஜமாய்-விபத்து விபரீதமாய்க் காத்திருந்தது-கதறியழுதான். இரயிலில் அடிபட்டு சிதைந்துபோன கடைக்குட்டிப் பையனின் உருவம். பக்கத்தில் இன்னுமொரு உடலும்! கண்ணீரின் ஊடே திகைத்தான். "சிரியானியும் போய் விட்டாளா? தெய்வமே! ஏனிந்த தண்டனை?" கதறியழுதான். துவண்டான்.

அவனைக் கவனித்த நண்பன் விஜே அருகில் வந்தான். "அது சிரியானி இல்லை. பக்கத்து வீட்டுச் சின்னப் பெண்." புரியாமல் விழித்தான் இவன். "ஆமாம். உன் சின்ன மகன் இரயிலில் அகப்படாமல் காப்பாற்ற தன் உயிரை மதிக்காது அந்தப் பொண்ணும் பாய்ஞ்சி முயற்சி பண்ணியிருக்கு"

சோகக் கடலில் மூழ்கியவனுக்குப் புரிந்துபோனது நடந்த கதை. சிரியானியும் பக்கத்து வீட்டுப் பிள்ளைகளும்தான் விளையாடிக் கொண்டிருந்திருக்கிறார்கள். இரயில் திடீரென வரவே குழந்தையைக் காப்பாற்ற பாய்ந்த பக்கத்து வீட்டுச் சிறுமியும் பலியான சோகம்! எங்கும் இரத்தமும் சதையும்! கோரமாய்க் கிடந்தது. அதில் எது தன் மகனது– எது பக்கத்துச் சிறுமியினது என பேதம் பார்த்து இனம் பிரிக்க முடியவில்லை அவனால். இறப்புக்கு இனம் இல்லை; மொழியில்லை; பேதங்களை அது பார்ப்பதில்லை. இனியாவது புரிந்து கொள்வானா இதை! ●

# ரசிகையைத் தேடி!

அந்த தொலைபேசி அழைப்பை எதிர்பார்த்துக்கொண்டிருந்த என் மனம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. நாள் தவறாமல் என்னோடு தொடர்பு கொள்ளும் அவள் இன்றுமட்டுமேன் தொடர்புகொள்ள சுணங்கிவிட்டாளோ? மனம் நன்றாக குழம்பியிருந்தது.

"ட்ரீங்!...ட்ரீங்!"

விட்டுச்சென்ற உயிர் திரும்பிவந்ததைப்போன்ற உணர்வு: துள்ளி எழுந்து ரிசீவரை கையிலெடுத்துக்கொள்கிறேன்.

"ஹலோ..!"

........

"பத்மாவா?"

"ம்..!" செல்லமாக 'இச்' பதிக்கிறேன். எதிர்முனையிலிருந்த அவளுந்தான்.

"இவ்வளவு நேரம் என்ன செய்தனீங்க? கோல்ஸ் வரும் வருமென்று பார்த்துக் கொண்டிருந்தனான். என்னக் காக்க வச்சி போட்டீங்களே!"

அவள் பல காரணங்களை சொல்கிறாள். இடைக்கிடையில் எங்களின் சிரிப்பும் ஊடலும் சேர்ந்துக்கொள்கின்றன.

"பத்மா!"

"....."

"பத்மா...போனமுற நானெழுதின தினமுரசுக் கதையைப் பார்த்தனீங்களோ?"

"ஓம்...ஓம்..! பார்த்தனான்! தலையங்கமும் நல்லம்! ஆனா ஒரு சந்தேகம்!"

"கேளுங்கோ!"

"கதையில இருக்கிறதுபோல சீதனம் வாங்காம என்ன நீங்கள் கல்யாணம் செய்வீங்களோ?"

"என்ன பத்மா இது? நான் கதையெழுதுறது ஊர் உலகத்துக்கு மாத்திரமில்ல! எனக்கும்தான்! ஏன் அப்படி என்ன பற்றி நினைச்சீங்க? உண்மையா உங்களிட்ட நான் சீதனமே வாங்க மாட்டன்?"

"குமார்..! என்னோட டெலிஃபோன்ல மட்டுந்தான் கதைச்சிருக்கீங்க! நேருல என்ன பார்த்ததேயில்ல. அப்படியிருக்க எப்படி நீங்க முடிவா என்ன கல்யாணம் செய்வீங்களென்று நான் நம்புறது?"

"பத்மா! உங்கள நேருல பார்க்கா விட்டாலும்... உங்களின்ர மனச நான் ரெலிஃபோன்ல கண்டுகொண்டன். உங்களின்ர வெள்ளை மனச உண்மையிலேயே நேசிக்கிறன். உங்ககிட்ட இருந்து கிடைக்கிற பாராட்டு, பரிவு, அன்பு, ஆதரவு, இதெல்லாம் எனக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு" வீணா மனச போட்டு குழப்பாதேயுங்கோ! நான் என்ர முடிவில தீர்மானமா இருக்கிறன்!"

"உண்மையாவா..?"

"சத்தியமா..?"

"குமார் ஒரு நல்ல சேதியொன்று இருக்கு! என்னென்டால் நாளைக்கு 10 மணிக்கு விகாரமாதேவி பூங்காவில ஒரு கண்காட்சியொன்று நடக்குது. நானும் "பிரென்ட்ஸ் ஸோட வாறன். முடிந்தால் வந்து என்ன சந்தியுங்கோ! அப்ப என்ன நேரில பார்த்த மாதிரி இருக்கும்!"

"நிஜமா!"

"உண்மையா!"

"கட்டாயமா வருவன் சரியோ?"

மீண்டும் அவளுக்கு இச் பதித்துவிட்டு ரிசீவரை வைக்கிறேன். என்மேல் ஆயிரம் மலர்களை தூவி விட்டதைப் போன்ற



ஹப்புத்தளையூர் எ.ஃப். லெனாட்குமார்

உணர்வு ஏற்படுகிறது. சந்தோசத்தால் என் மனம் நிரம்பியிருக்கிறது.

□□□

பத்மா!

என் இலக்கிய ரசிகை. பத்திரிகைகளில் வெளிவரும் என் ஆக்கங்களை பாராட்டி மடல் வரைந்தவள். நாளடைவில் அவளுறவு என்னுள் காதலாக மலர்ந்தது. தொலைபேசி அழைப்புக்களையும் கடித தொடர்புகளையும் தவிர வேறு எந்த விதமான தொடர்பும் எம்மிடையே ஏற்பட்டதில்லை.

ஆனால் இன்று அவளை பார்க்க போகிறோமென்ற சந்தோசம் மனம் முழுதும் நிரம்பியிருந்தது.

□□□

விகாரமாதேவி பூங்கா!

அவள் இன்னும் வந்திருக்கவில்லை. என் புகைப்படமொன்று அவளிடத்திலிருந்திருந்தால் அவள்தான் என்னை முதலில் அடையாளம் காண முடியும். மனம் 'பக்கு பக்கு'வென அடித்துக்கொண்டது.

"ஹலோ!" அதே குரல் திரும்பி பார்த்த என்னை ஆயிரம் சம்மட்டிகளால் ஓங்கி தலையில் அடித்ததைப்போன்ற உணர்வு ஏற்படுகிறது.

"நீ...ங்...க பத்மாவா..?"

"ஓம்...நான்தான்!"

"நோ!... இல்ல இது என் பத்மா இல்ல!" என் தலையே வெடித்துவிடுவதைப் போன்றிருந்தது. என் கனவுக் கோட்டையெல்லாம் உடைந்து விழுவதைப் போன்றதோர் எண்ணம்.

"நீங்களா என்ர பத்மா? நான் இவ்வளவு காலமும் ஒரு முடமான பெண்ணையா காதலிச்சிருக்கிறன்! நீங்கள் இத முன்னமே சொல்லாம ஏனிப்படி ஏமாத்தினீங்கள்?" புன்னகை பூத்திருந்த அவள் முகம் வாடியிருக்கிறது.

"குமார்....என்ன மன்னிச்சிக் கொள்ளுங்கோ! பிறவியிலயே இப்படி ஏற்படல. விபத்துலதான் என்ர கால இழந்தன். இத முதல்லயே உங்களுக்கு சொல்லத்தான் நினைச்சனான். ஆனா பெற்றோரை இழந்த என்ன நீங்களும் ஒதுக்கி வைப்பீர்களென்று பயந்தன். குமார் உங்கட தூய்மையான பாசத்தாலதான் நான் இன்னும் உயிர் வாழுறன். பிளீஸ் குமார் என்ன மன்னிச்சிடுங்கோ."

எனக்கு அவளை பார்க்கவே வெறுப்பாக இருந்தது. அவள் விழிகளிலிருந்து நீர் முத்துக்கள் வடிந்துக்கொண்டிருந்தன. இன்னும் அவ்விடத்திலிருக்க பிடிக்காததால் நான் மெல்ல நகர்கிறேன்.

"குமார்...! குமார்..!"

இப்போது அவளின் குரல்கூட எனக்கு கசந்தது. நடந்துவந்து திரும்பி பார்க்கிறேன். ஓரமாய் அமர்ந்து அவள் அழுதுகொண்டிருப்பது மட்டும் எனக்கு தெளிவாக தெரிந்தது.

ஆனாலும்-என் மனசாட்சி ஏதோ பேசுவதை போன்ற உணர்வு.

"முட்டாள். அவளின் மனதில் ஆசைகளை வளர்த்து அவளை வீணடித்துப் போட்டாய்! ஒரு காலை இழந்த அப்பெண்ணுக்கு வேறு என்ன குறை? நாளை உனக்கு இக்கெதி நடந்தால் என்ன செய்வாய்? ஏன் உன்னையே நம்பியவளை ஏமாற்றினாய்" லேசாக எனக்கு தலை வலித்தது.

"ஆம் நான் ஏன் அவளை ஒதுக்க வேண்டும்? எல்லாமே விதிப்படி தானே நடக்கும்? அவள்தான் என் தாரமாக இருக்க வேண்டும்." மனம் தெளிவடைகிறது.

"பத்மா!" ஓடிச் செல்கிறேன். அவள் கண்களை கசக்கிக்கொண்டு ஊன்றுகோலை எடுத்து எழும்பி நிற்கிறாள்.

"பத்மா.... என்ன மன்னிச்சிடுங்கோ!" என்ற நான் அப்படியே அவளை அணைத்துக்கொள்கிறேன். என் கை தட்டுப்பட்டு அவளின் ஊன்றுகோல் எங்களை விட்டு ஓரடி தள்ளி வீழ்கிறது. அது எதற்கு? இனி நான் தானே இவள் வாழ்வில் ஊன்றுகோல்! ■

# பக்கம் பார்த்துப் பேசுங்க

சிலாபம் பொ. புஷ்பராஜ்

அன்று கடையில் ஒரே ஜனக்கூட்டம். தினுசு தினுசான சாரி வகைகள் 'சாரிகா சில்க்ஸ்' புடவைக் கடையின் முகப்பில் தொங்கிக் கொண்டிருந்தது.

கடை வீதியில் சென்றுகொண்டிருந்த காவேரியையும், பிரமிளாவையும் "வாங்க மிஸ், வாங்க" என்று கடையின் சிப்பந்தி பரிவாக அழைக்கவே, "பிரமிளா வா இங்கேயும் பார்ப்போம்" எனக் கூறிக்கொண்டே காவேரி பிரமிளாவுடன் அந்த கடையினுள் நுழைந்தாள்.

காவேரி பிரமிளாவை விட அழகானவள். நீண்ட கூந்தலும், வளமான பரந்த கண்களும், குமிழ மலர் போன்ற நாசியும், சிவந்த வாயும், இஞ்சியைப் போன்ற இடுப்பின் அழகும் முதலாளி முத்துவை சொக்கிவிட்டது.



"அடேய் சிவா மிஸ்களுக்கு என்னா வேணும்னு கேளுடா" என்று கத்தினார் முத்து.

கடையில் சுமார் இருபதுக்கும் மேற்பட்டோர் புடவைகள் கொள் முதல் செய்வதில் ஆர்வமாக இருந்தனர்.

காவேரி "பிரின்சஸ் லைன் ஃபுறொக்ஸ் இருக்கா என்று மழலைப் பேச்சில் கேட்டாள். அந்தப் பேச்சின் மெல்லோசையில் தன்னையே மறந்து விட்டார் முத்து.

பத்து, பதினைந்து டிசைன்களை காட்டினான் சிவா. "இப்படி இல்ல தம்பி, விஸ்கோஸ் துணியில் சின்னப் பூவில் பின்னுக்கு பட்டி வைத்த பிரின்சஸ்லைன் கவுணாகப் பாருங்கள்."

"வெரி சொரி மிஸ், இந்த டிசைன்களைப் பாருங்கள்."

சிவா எடுத்து காண்பித்த டிசைன்களில் காவேரிக்கு ஒன்று பிடித்துவிட்டது.

"இதை உடுத்திப் பார்க்க வேண்டும்."

"உள்ளே ஃபிட்டிங்ரூம் உள்ளது. உடுத்திப் பாருங்கள்" என்றான் சிவா.

காவேரியும் பிரமிளாவிடம் பணப் பேசை கொடுத்துவிட்டு ஃபிட்டிங் ரூமினுள் சென்று விட்டாள்.

மெதுவாக முத்துசாமி முதலாளி பிரமிளாவிடம் பேச்சை ஆரம்பித்தார்.

"அவங்க யாரு?"

பல்லை காட்டி மெதுவாக பூமியைப் பார்த்தவாறு சிறு புன்னகையை வெளியேற்றினாள் பிரமிளா.

"ஏன் சிரிக்கிறீங்க? அவங்க என்னா உங்க அக்காவா?"

"இல்ல."

"அப்படி என்றால்? உங்கள் கூட்டாளியா?

"ம்" என்றாள் பிரமிளா.

"விசயம் சரிதான்."

பொம்பளங்க விசயத்துல முதலாளி முத்து கொஞ்சம் அப்படி இப்படி என்பதை தெரிந்து வைத்திருந்த சிவா சாடைக் கண்ணால் முதலாளியைப் பார்த்தான். முதலாளியின் முகத்தில் ஒருவித வெட்கமும் அச்சமும் தெரிந்தது.

மெதுவாக ஒரு கடுதாசி தாளில் தனது முகவரியை எழுதி "இதை அவங்க கிட்ட குடுங்க." என்று முத்து பிரமிளாவிடம் கொடுத்தார்.

இப்போது காவேரி பிரின்சஸ்லைன் கவுனுடன் ஃபிட்டிங்ரூமில் இருந்து வெளியே வந்தவள் முதலாளியிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு பிரமிளாவுடன் கடையை விட்டு வெளியேறினாள்.

"சிவா அவ இரண்டு பேரையும் தெரியுமாடா."

"தெரியும் முதலாளி."

"நல்ல சீதேவியான முகமடா மூத்தவளுக்கு. யாரு அது?"

"அது வந்து முதலாளி எங்க வீட்டுக்கும் மூன்றாவது வீட்டுக்கு புதுசா குடி வந்திருக்காங்க. நம்ப ஊருக்கு வந்திருக்கிற புது ஏ.எஸ்.பியின் மனுசியும் மகளும் முதலாளி."

சிவாவின் பதிலைக் கேட்டதும் முத்து முதலாளி மின்சாரம் பட்டவர்போல அதிர்ச்சி அடைந்தார்.

"சிவ சிவா நீதான்டா இப்ப என்னைக் காப்பாத்தணும்" என இறைவனிடம் வேண்டிக் கொண்டார். ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# பொய்யாக வந்த மேகம்

தருவது-ரசிகன்



மேகத்தின் கோபம் மின்னல். அந்த கோபத்தின் குரலே இடி ஓசை.

அச்சுறுத்தும் ஓசைதான் இடியோசை; என்றாலும் அஞ்சவில்லை அந்த கொஞ்சு மொழியாள்.

தோழிக்கு வியப்பு.

வியப்பு அவள் அஞ்சவில்லையே என்பதனால் விளைந்தது அல்ல.

ஆறாத் துயர் சூழவில்லையே அவளைச் சுற்றி என்ற நினைப்பால் விளைந்ததுதான் அந்த வியப்பு.

பட்டுப் பூச்சிகள் தரையில் வந்து தவழுகின்றன.

இவள் பட்டுடலில் தவழ்ந்தவனோ இவளை மறந்தவனாய் எங்கோ இருக்கின்றான்.

தும்பிகள் சிறகடித்து பறக்கத் தொடங்கிவிட்டன.

இவள் நம்பியிருப்பவனோ இவள் நினைவென்னும் காதல் சிறகை தொலைத்தவனாக தொலைவில் தங்கிவிட்டான்.

கார்காலம் வருமுன்னர் தேரேறி வருவேன் உன் பூந்தேகம் சூடிக்கொள்ள என்று போனவன்தான்.

கார்கால மேகம் தன் தேகத்தை பூமிக்கு காட்டத் தொடங்கிவிட்டது.

பூமிப் பெண்ணைத் தழுவிக்கொள்ள கறுப்பு போர்வையை மேகம் வீச,

வெட்கிப்போன பூமிப் பெண் புழுக்கமாய் வியர்த்துக்கொண்டு நழுவப் பார்க்கிறாள்.

பொறுமையில்லாத மோகம் அந்த பொல்லாத மேகத்திற்கு!

பூமிப் பெண் நழுவுகிறாளே விருப்பில்லையோ அவளுக்கு என்ற கோபம்.

அதுதான் மின்னல் கோபம். இடியோசை குரல் எழுப்பி மிரட்டும் வேகம்.

ஆனால் இவளுக்கு மட்டும் கார்காலம் வந்தும் இன்னும் காணாத காதலன்மேல் ஏன் வரவில்லை கோபம்?

தூரம் அதிகம்தான்; என்றாலும் சொன்ன சொல் வெறும் பேச்சாகிவிடாமல், அதனைக் காக்கும் மூச்சோடு வந்திருக்க வேண்டுமன்றோ இவள் தலைவன்?

வழி மீது விழிகள் தவமிருக்க, தனிமைத் துயர் தினம் வாட்ட, மனதுக்குள் உள்ளவனை கண்ணாரக் காண்பதற்கு இவள் துடித்து இருப்பது மெய்!

ஆனாலும், அவர் பேச்சு பொய்யாகிப் போனதென்று இயற்கை விதி இடித்துரைக்கும்போதும் இவள், இரும்பைப்போல் அசையாமல் இருப்பதென்ன மாயம்?

கூடலின்ப நேரமதில் உடைந்துவிடும் வளையல்கள் போல், கார்காலம் வந்துவிட்ட குறிப்பறிந்து துன்பத்தில் விழுந்த மனம் உடைந்து இவள் விழிகள் மழை பொழிய மறுப்பதுதான் மாயத்திலும் மாயம்!

நீளாதோ இரவென்று கள்ளுக்குள் விழுந்த வண்டாய் கலந்திருந்த பொழுதுகள் மீண்டும் வர கடுந் தாமதமாகிப்போகும் நிலை கண்டும் கலங்காமல் கற்சிலைபோல் இவள் இருப்பதுதான் விந்தையன்றோ!

போதுமோ என்று கேட்டால் பூவிதழால் புன்னகைத்து, இன்னும் தந்தாலும் மறுக்க மாட்டேன் என்று குறிப்புணர்த்தும் குறும்பான பொழுதின் சுகம் நினைத்தால் நெடுமூச்சு நெஞ்சில் எழும்!

பாலுக்குள் உள்ள சுவை பருகிய பின் தெளிவாகும். பாவைக்குள் உள்ள சுகம் பரிமாறப் பரிமாற புதிதாகும், புதிருமாகும் என்று அவன் சொல்ல உள்ளம் துள்ளினாலும் உதடுகள் மட்டும் 'போங்கள்' என்று உரை உதிர்க்கும்.

அதனை இப்போது நினைத்தாலும் நெஞ்சினிக்கும். கொஞ்சிக் கெஞ்சியவன் முகம் காண வஞ்சியவள் மனம் துடிக்கும்!

துடிப்பது மெய் என்றாலும் துவளாமல் இவள் இருப்பதுவும் மெய்யன்றோ? எப்படி இது உண்மை நிகழ்வாகும்?!

என்றெல்லாம் நினைத்தாள் தோழி. தோழியின் மனம் ஓடும் திசையறிந்து விடை சொல்ல நினைத்தாள் தலைவி.

கானமயில் களிப்புற்று தோகை விரித்து நின்றது அருகில்.

வாழைத் தண்டுகளால் நடந்து மயிலருகே சென்றமர்ந்தாள் தலைவி.

"ஏன் மயிலே ஆடுகிறாய்? கார்காலம் வந்ததுபார் என்றெண்ணி களித்தாயோ மனதில்? உவகையாலே விரித்தாயோ தோகை? மட மயிலே! ஏமாந்து போனாயே நீயே!"

கலகலவென்று சிரித்தாள் தலைவி. தோழியோ விசித்திரமாய் வீசினாள் பார்வை.

அது புரிந்து தோழியின் சந்தேக நினைப்பகற்ற தேன் இதழ்கள் பொழிந்தன வார்த்தைகளை!

தோழிக்கு உரைத்தபோதும் அவள் முகத்தைப் பாராமல் மேகத்தை விழிகள் நோக்கிக்கொண்டிருக்க இதழ்கள் மட்டும் சுவைபூசிய வார்த்தைகளை வீசிக்கொண்டிருந்தன.

"இரு உடல்கள் இணைந்தால்தான் கூடல் நேரம். அதுபோல இரு திங்கள் சேர்ந்தால்தான் ஒரு பருவம்."

கூறிவிட்டு கடைக்கண்ணால் தோழியின் முகத்தைப் பார்த்துக்கொண்டாள்.

"கார்காலம் வரும் பின்னே, அதன் முன்னே நான் வருவேன் என்று சொல்லி என் தலைவன் சென்றான் அன்றே! அவன் பேச்சு நீரின் மேல் எழுத்தல்ல! நேரத்திற்கு ஏற்ப நாவசைக்கும் பண்புமில்லை அவரிடத்தில்! அவர் பேச்சு கல்லின் மீது எழுத்தாகும்!"

தோழி தன் விழிகளால் நெளிப்புக் காட்டினாள். தலைவியோ தொடர்ந்துரைத்தாள்.

"இயற்கை விதியை எடுத்தெறிந்துவிட்டு எட்டிப் பார்க்கிறது மேகம்! இடியால் மிரட்டிப் பார்க்கிறது ஏமாற்றும் மேகம்!"

புரிந்ததோ இல்லையோ மயில் தோகையை சுருட்டிக்கொண்டது. தலைவிக்கு அது உற்சாகமாக இருந்தது.

தொடர்ந்து இதழ் மொழிந்தாள்.

"மேகமே! மேகமே! உன் இடி மெய்யல்ல நடிப்பு! என்னை வருத்தலாம் என்று உனக்கொரு நினைப்பு!

தலைவன்மீது இத்தனை நம்பிக்கையோ இவளுக்கு? காதலன்மீது வரவில்லையே கோபம். காலத்தின் மீதன்றோ கடும் சினம் வருகிறது இவளுக்கு! தோழியின் மனதில் வியப்பு மின்னல்.

"மேகமே! ஏய் மேகமே! பகல் கனவு

## இலக்கிய நயம்

போலாகும் உன் நினைப்பு! கடலுக்குள் வாழும் கயல்போல் நானும் அவருக்குள் வாழும் பெண்! மறப்பாரோ என் நினைப்பை? துறப்பாரோ எனக்கு தந்த சொல்வாக்கை?"

தெளிவான சிந்தை. சந்தேக விதையை சற்றும் அனுமதிக்காத மனம். தோழி நினைத்துக்கொண்டாள்.

தோழியின் முகமாற்றம் கவனித்தபடி தலைவி மேகத்தோடு பேசினாள்;

"காலத்தின் முன்பே கருக்கொண்ட மேகமே கேள்! மலை நாட்டு மயிலல்ல முரண்பட்ட உன் உருவால் மனம் மாறி ஏமாற நான்! பனம் காட்டு ஏரி சலசலப்பால் வெல வெலத்து ஓடாது, ஒளியாது என் றுனக்குத் தெரியாதோ? உன் இடி எனக்கும் அப்படித்தான்!"

மயிலைத் தன் விழியால் நோக்கிவிட்டு பின் மேகத்தை நோக்கியபடி இதழ் அசைத்தாள்,

"மயிலறிய மாட்டாது உன் பொய் நடிப்பு! பொய் இடியை மெய்யென்று மயங்கி மயில் ஆடக்கண்டு மங்கையிவள் மன்னன்மீது கோபம்கொள்ள நினைப்பேன் என்று நீ நினைத்தால் அது மனப்பால்! ஏய் மேகமே! போ அப்பால்!"

தலைவியின் வார்த்தைகளில் சுவை பாதி, உறுதி மீதி!

சொக்கித்தான் போனாள் தோழி! வியப்பின் உச்சியை தொட்டுத்தான் நின்றாள் தோழி!

கார்காலம் கண்டு தலைவி பட்டுத்தான் போவாள் காயம் என்று நினைத்தது தப்புத்தான் என்று தெளிந்தாள் தோழி!

"பொய்த்துவிடும் மேகம்! பொய்க்காது காதலனின் சொல், அது வேதம்! நீயறியாய் அவர் உள்ளம்! நான் அறிவேன் வெள்ளை நிறம் அவர் உள்ளம்! வீசும் காற்றில் கரைந்துபோவதல்ல என்மீது அவர் கொண்ட எண்ணம்! நான் அவர்மீது கொண்ட நேச வண்ணம்!"

தலைவி இதழ்களுக்கு ஓய்வு கொடுத்தாள். தோழி உண்மையறிந்து கொண்டாள், இனிப் போதும் இதழ் பேச்சு என்று நினைத்து கொடுத்த ஓய்வு!

தலைவன் மீது தலைவி கொண்ட தளராத நம்பிக்கையில், காலத்தையும் கார்கால மேகத்தையும் குறைகூறும் இந்த காட்சியைத்தான், சங்க இலக்கியமாம் நற்றிணையில் 248வது பாடலில் காசிபன் கீரனார் என்ற புலவர் காட்டுகிறார் தம் பாட்டுத் திறத்தால்!

**"கார்வரு பருவம் என்றனர் மன், இனிப்**
**பேரஞர் உள்ளம் நடுங்கல் காணியர்**
**அன்பு இன்மையின் பண்பில பயிற்றும்**
**பொய்யிடி அதிர் குரல் வாய் செத்து ஆலும்;**
**இமையில் மடக்கணம் போல**
**நினைமருள் வேனோ! வாழியர் மழையே!"**

**(நற்றிணை 248)**

## குறுக்கெழுத்துப் போட்டி இல-78

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | 3 |
| | ■ | | ■ | 4 | 5 | |
| ■ | 6 | | | ■ | | |
| 7 | | ■ | ■ | 8 | | ■ |
| 9 | | | | | ■ | 10 |
| | ■ | ■ | ■ | 11 | | |
| | ■ | 12 | | | ■ | |

### இடமிருந்து வலம்

1. உதவி என்ற மூன்றெழுத்தாலும் இதனை அழைக்கலாம்.
4. இதனைப் பயன்படுத்தும்போது அவதானம் தேவை.
6. எதிலும் இது நன்றாக அமைந்தால் சந்தோசம்தான்.
8. முயற்சி உடையார் இதனைக் கண்டு பின்வாங்க மாட்டார்.
9. பார்வையில் இதுவும் ஒரு விதம்.
11. மறைந்த தமிழ் நகைச்சுவை நடிகரோடு இது ஒரு பட்டமாக இணைந்திருந்தது.
12. சகல உயிர்களிடத்திலும் நமக்கு இது அவசியம்.

### மேலிருந்து கீழ்

1. சிற்பியிடம் இருக்கும்போது இதன் மதிப்பு அதிகம்.
2. கடலில் இது தெரியாது.
3. போத்தல் என்றால் உடனே புரிந்து விடும்.
5. இவ்வார முரசில் இதோடு தொடர்புடைய குட்டிக்கதை ஒன்று உண்டு.
6. தரையில் விழுந்தால் தப்பாது.
7. இதில் அதிசயமானவற்றை முரசு வெளியிட்டுக்கொண்டிருக்கிறது.
8. சில சமயங்களில் நிரபராதிகளும் இதில் சிக்கிக்கொள்வார்கள்.
9. இதன் கொடிக்கு பாரி கொடுத்தது தேர்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 10.12.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல-78
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-76க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 மா | கா | ண | ம் | ■ | 2 ச | னி |
| 3 து | க | ள் | ■ | 4 ந | ந் | ■ |
| ளை | ■ | ■ | 5 கை | த் | த | றி |
| ■ | 6 வெ | டி | ■ | தா | தி | ■ |
| 7 கோ | ட் | ■ | 8 கு | ர் | ■ | 9 மு |
| 10 ப | க | ட் | டு | ■ | 11 ச | கா |
| ம் | ம் | ■ | 12 வை | ய | க | ம் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.76இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. பி. பானுமதி
   கொழும்பு-13.
2. ஏ. ஜெய்னுலாப்தீன்
   கெக்கிராவ.
3. என். கோணேஸ்வரன்
   வவுனியா.
4. ஜமீலா காதர்
   கண்டி.
5. யுபிட்டா வெல்ற்
   திருகோணமலை.
6. கே. டிரோயன்
   மட்டக்களப்பு.
7. எல். ஜமீல்
   காத்தான்குடி-1.
8. கே. பற்குணராசா
   தலவாக்கலை.
9. திருமதி. மகேஸ்வரி ரங்கநாதன்
   மஸ்கெலியா.
10. அப்துல் லதீப்
    கொழும்பு-10.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# முடிவில் மாற்றம்

ஸ்போர்ட்ஸ்



டீன் ஜோன்ஸ்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர் டீன் ஜோன்ஸ் கடந்த ஏப்ரல் மாதம் கிரிக்கெட் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துவிட்டு, கிரிக்கெட் போட்டிகளில் இருந்து விலகி இருந்தார். அவுஸ்திரேலிய அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டபின் தனது விலகல் முடிவை டீன் ஜோன்ஸ் வெளியிட்டார்.

இப்போது டீன் ஜோன்ஸ் தனது முடிவை மாற்றிக்கொண்டு தொடர்ந்து அவுஸ்திரேலிய அணிக்காக விளையாடச் சம்மதம் தெரிவித்துள்ளார். 33 வயதான டீன் ஜோன்ஸ் அவுஸ்திரேலிய அணியில் சேர்ந்து மீண்டும் விளையாடுவது பற்றி நிருபர்களிடம் பேசுகையில்,

"எனது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் என்மீது அக்கறை கொண்டவர்களின் விருப்பப்படி, நான் டெஸ்ட் போட்டிகள், மற்றும் ஒருநாள் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணியில் இடம் பெற்று விளையாட விரும்புகிறேன்" என்று தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய முன்னாள் கப்டன் அலன் போர்டர் சமீப காலமாக, டீன் ஜோன்ஸ் தனது விலகல் முடிவை வாபஸ் பெற்றுக்கொண்டு மீண்டும் அவுஸ்திரேலிய அணிக்காக விளையாட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேற்கிந்திய தீவில் இந்திய வீரர்!

ஷிவ் நாராயண் சந்தர்போல் என்ற பெயருடைய கிரிக்கெட் வீரர் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இடம்பெற்றுள்ளார்.

21 வயதான இந்த இளம் வீரர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான கயானாவில் வசிக்கும் கிரிக்கெட் வீரர் கேம்ராஜின் மகனாவார். இவருடைய சகோதரி தாவியும் ஒரு கிரிக்கெட் வீராங்கனைதான்.

சில வருடங்களுக்கு முன்பு 19 வயதிற்குட்பட்டவர்களின் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் சேர்ந்து இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது 203 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார் சந்தர்போல். அதுவே அவருக்கு மிகுந்த ஊக்கத்தைக் கொடுத்ததாகக் கூறினார்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் ஒரு இனிங்ஸில் மிக அதிகமான ஓட்டங்களை எடுத்துள்ள பிரையன் லாரா, அந்தச் சாதனையை (375) அவர் ஏற்படுத்திய இனிங்ஸின்போது பெரும் பகுதி ஜோடியாக தான் இருந்து விளையாடியதை மிகவும் பெருமையாக நினைவு கூர்ந்தார் சந்தர்போல்.

தான் பள்ளிப் பருவத்தில் விளையாடிய முதல் போட்டியிலே 117 ஓட்டங்கள் எடுத்ததை நினைவுபடுத்திய சந்தர்போல், தான் ஒரு மீனவ குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும், கடின உழைப்பை மட்டுமே நம்பி இருப்பவன் என்றும் கூறியுள்ளார்.

# மகாபாரதம்

அங்கம் 57

**இவ்வாரம் (04.12.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்:
மகாபாரதக் கதையில் சபதங்களே அதிகம்!
சுகபோகம் தனைத்துறந்த மகாபுருடர் பீஷ்மரவர்
அஸ்தினாபுரி நாட்டின் அரியணையைத் தான் துறந்தே
அளப்பரிய சபதமொன்றை அவனி மெச்சத் தானேற்றார்.
துரியோதனன் தொடை பிளந்து
துச்சாதனன் கரமு டைத்து
செருக்களத்தில் குருதிபெய்ய பீமனவன் சபதமிட்டான்.
அங்க நாட்டான் கர்ணனவன் ஆணவத்தை அடக்கிடவே
அர்ச்சுனனும் ஆணையிட்டான்; ஐவருக்கும் தேவியான
பாஞ்சாலி தன் குழலை கோதி முடிப்பதற்கும்
வாஞ்சையுடன் காத்திருக்க வலிதான சூளுரைத்தாள்.
சதுரங்கச் சூழ்ச்சிவலை சுகமாகக்காண் சகுனி
சபதமொன்றை யேற்றுள்ளான் சமரினையே காத்து நின்றான்!

-காட்சி தொடக்கம்-

சகுனி தன் விடுதியில் தனது வாளைத் தீட்டி மெருகேற்றிக்கொண்டிருக்கும்போது காந்தார நாட்டிலிருந்து சகுனியின் மகன் இளவரசன் உல்லூகன் வந்திருப்பதாக காவலன் கூறுகிறான். தன் பணியில் கவனம் செலுத்திக்கொண்டிருந்த சகுனி சற்று நேரம் கழித்தே காவலன் செய்தியைச் செவி மடுக்கிறான்.

உல்ல: அப்பா வணக்கம்!

சகுனி: வா மகனே உல்லூகா! என்னருகில் அமர்ந்திடுவாய்! நாட்டின் நிலை என்ன? நாட்டு மக்கள் நிலை கூறு!

உல்: தாங்களிங்கு வரும்போது எவ்வா றிருந்ததுவோ தரமேதுங் குன்றாமல் தளைக்கிறது எம் நாடு.

சகுனி: நாட்டை நான் பிரியவில்லை. நினை வலைகளில் மிதந்து எம் நாட்டை நான் அடைவதுண்டு. நறுமணந்தனைச் சுவைத்து தினமும் சுகிப்பதுண்டு.

உல்: காந்தாரந்தன்னை கடுகி வந்தோர் முறைதான் பார்த்து வந்தால் நல மன்றோ?

சகுனி: அங்கோடி வருவதற்கு இங்குள்ள நிலையெதுவும் அமைவாகவேயில்லை. கைகளிலே இன்று என் பகடைக் காய்களில்லை. அளப்பரிய வெற்றிகளை அலையலையாய்த் தந்த எந்தன் அருமையான ஆயுதங்கள் அகன்றுபோய் விட்டனவே! வாளுடன் வில்லேந்தி வீரப்போர் புரியும் அந்த நாளும் விரைகிறது. காடாண்ட பாண்டவர்கள் கரந்துறையும் காலமதும் கடந்துவிடப் போகிறது. பார் என்றும் பார்த்திடாப் பெரும் போர்தான் வருகிறது. காந்தார நாட்டதிபனிந்த சகுனி மன்னனேற்ற அருஞ் சபதமதும் கைகூடும் காலமதைக் காண்கின்றேன்! கவுரவரின் குலமழியும் கொடுமையதைக் காண்பதுவே காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் பெரு விருந்து. மடிந்து மண் புரளும் கவுரவரின் உடற்கூட்டை சுமந்து எரியூட்ட எவருமங்கே மீதியிரார்!

உல்: அப்பா நீங்கள்கூறும் விபரம் புரியவில்லை!

சகுனி: (கோபத்துடன்) என் தங்கை காந்தாரி கண்ணிழந்த மன்னவனை கணவனாக வரிப்பதற்குக் காரணமதாகிவிட்ட கங்கை மைந்தன் வம்சத்தைக் கருவறுக்கவே துணிந்தேன்! தாமரை போல் விழி படைத்த தங்கைதனைக் கண்ணுற்றால் கோபக்கனல் எந்தன் குலை நடுங்கச் செய்கிறதே! அஸ்தினாபுரத்தை அழிக்கு மிருள் சூழ்கிறது. அந்த இருள் பெருகி வர கவுரவர்கள் குலமழியும்! காந்தார நம்நாட்டை எத்தீங்கும் அணுகாது.

உல்: பாண்டவரும் கவுரவரும் படை நடத்தும் பெரும் போரில் வேண்டாமல் தாங்கள் வீணே இணைவதுமேன்?

சகுனி: எனக்குமிதில் பங்குண்டு! வெற்றியதும் தோல்வியதும் வீரச் சமர்க்களத்தில் விதிப்படியேதான் நடக்கும். போராடும் செருக்களமே என் சபதத்தின் வெற்றி நிலை!

-காட்சி மாற்றம்-

துரோணாச்சாரியாரின் இல்லம்- கர்ணன் வருகிறான்.

துரோ: நீடூழி வாழ்க! ஆசனத்தில் அமர்க! அங்க நாட்டதிபன் இந்த ஏழைப் பிராமணனை நாடி வந்த காரணத்தை நானறியலாமோ?

கர்ண: போர்க்கலையில் தேர்ச்சிபெற தங்களையே தேடி அன்று ஆர்வமுடன் வந்த என்னை அவமதித்துத் துரத்தி விட்டீர்! உயர் குடியில் பிறந்தோர்தான் உரித்துடையோரா? கல்வி, உரிய முறை அறிவதற்கு உரிமை இல்லையா என்போல் ஏழைக் குடியானவர்க்கு? என்பதனை அறிந்திடவே நாடி வந்தேன் உங்களை நான்!

துரோ: கல்வி மற்றும் கலைகளினைக் கற்பதற்கு சாதி மத பேதமேதும் தேவையில்லை. அன்று நீ வந்த இடம், அரச குமாரருக்கு அறிவுதனைப் புகட்டும் அடிப்படையில் அமைந்த இடம். அதனால்தான் நான் தவிர்த்தேன். உன்னை நான் தவிர்த்ததனால், உலகினிலே உயர்ந்த குரு பரசுராமரின் துணையால் பெருமை மிகு சீடனானாய்!

கர்: உண்மைதான் ஐயா! ஆனாலும் குருபிரானின் கோபத்துக்காளாகி கொடுஞ் சாபம் பெற்றேனே!

துரோ: குருபிரானின் சாபமதா?

கர்: சாபத்துக்காளானேன்! அர்ச்சுனனுடன் பொருதுமந்தத் திருநாளை ஆவலுடன் பார்க்கின்றேன். அஞ்ஞாத வாசத்தில் பாண்டவரை கண்டுகொள்ள துரியோதனன் ஏவிவிட்ட ஒற்றர்களால் முடியாது. பெரும்போரைத் தவிர்ப்பதற்கு உரிய வழி எதுவுமில்லை. போர் முனையில் தாங்கள் பொருதுவதும் உண்மை! பெருமையுள்ள தங்களது அரிய சீடன் அர்ச்சுனனும் தேரோட்டி மகனான என்னுடனே சமர்புரிவான். வில் வித்தையில் வல்லோன் விஜயனவனா அன்றி இழிகுலத்தவனான கர்ணனவனா என்ற உண்மைதனைத் தாங்கள் திண்ணமதாய்த் தீர்க்கும் வண்ணமதைக் காண்பேன் நான்! குருதேவர் எனக்களித்த கொடுஞ் சாபமும் தொடரும்!

□□□

-காட்சி பின்னோக்கு-

குரு பரசுராமரிடம் தான் பெற்ற தண்டனையை கர்ணன் எண்ணிப் பார்க்கிறான்.

கர்ணனின் கல்வி முடிந்து விட்டமையினால் குரு குலத்தைவிட்டுப் போகலாம் என்று பரசுராமர் கூறுகிறார். கல்வியில் கர்ணன் காட்டிய திறமையே குரு தட்சணையாகி விட்டது என்று கூறிய குரு சீடனான கர்ணனின் மடியில் தலைவைத்து உறங்குகிறார். அப்போது தேள் ஒன்று கர்ணனின் தொடையினைக் கொட்டுகிறது. குருதி பெருக்கெடுத்தும் வேதனையைத் தாங்கிய வண்ணம் இருந்த கர்ணனை- தூங்கி எழுந்த பரசுராமர் வினவுகிறார். தான் ஒரு பிராமண இளைஞன் என்றுகூறி பொய் சொன்ன கர்ணன் ஒரு சத்திரியனாகவே இருக்க முடியும் என்பதனால், 'பொய் கூறி கற்ற கல்வி சந்தர்ப்பத்தில் மறக்கப்பட்டுவிடும்' என்று சாபமிடுகிறார் பரசுராமர்.

□□□

தனது பழைய நினைவுகளிலிருந்து மீண்ட கர்ணனை துரோணாச்சாரியார்....

துரோ: அங்க தேச மன்னவனை ஆட்டிப் படைக்கும் எண்ணம் என்னவென்று சொல்லலாமோ?

கர்: கற்பனையில் என் குருவை காணத்தான் சென்றிருந்தேன்!

துரோ: குருவை நினைப்பதுவே குரு வணக்கத்துக்கீடாகும்! மாதா, பிதா, குருவை மனத்தளவிலே துதித்தல் மகேசுவரன் கிருபை மகிமை பெற்றதாகு மன்றோ?

கர்: அம்மாவும் அப்பாவும் அஞ்சலிக்குரியரென்றால் அந்தணர்க்கும் அரச குல சந்ததிக்கும்தானோ அது?

துரோ: மாதா, பிதா, குருவாம் மூவருக்கும் சாதி இல்லை. வல்ல குருநாதனவன் நல்ல சீடனானவன் நீ, உண்மையிலே பெருமை பெறு பெரு வீரனானவனே! போர்க்களம் புகுமுன்னே போற்றுதற்குரிய உந்தன் அன்னையவள் ஆசியையும் அரிய குருநாதரது அடியினையும் தொழுது பெற்ற வாழ்த்தினையும் ஏற்றுச் செல்! மறந்திடாதே!

கர்: (கோபத்துடன்) வில்லும் வாளும் வேலும் வீரனுக்கு ஆயுதங்கள்! வாழ்த்துக்களேதும் போர்க்களத்தில் உதவாது. உங்களது அன்புக்கு உரித்துடையோனான அந்த அர்ச்சுனனுக்கே உங்கள் ஆசிகளைக் கூறுங்கள். எந்தனுக்கு என்றும் என் தோள் வலியும் ஆயுதமும் துணை நிற்கும் திண்ணம்!

-காட்சி மாற்றம்-

மத்சய நாடு- இளவரசி உத்தரையின் அந்தப்புரம்- பிருகன்னளை என்ற பெயரில் (அலி) பெண்ணுருக்கொண்ட அர்ச்சுனன் உத்தரைக்கு நாட்டியம் கற்றுத் தருகிறான். இந்த வேளையில் விராட மன்னனும் அரசி சுதேசினையும் வருகின்றனர்.

விரா: எமது மகள் உத்தரையின் அன்பை நீ பெற்றுவிட்டாய். ஆடலிலும் பாடலிலும் அதி சிரத்தை கொண்டவள் நீ. அருங்கலையின் செல்வியாக எம்மகளை ஆக்கிவிட்டாய். அவளுடைய ஆற்றல்களை அறிந்திடவே இங்கு வந்தோம்!

பிரு: உத்தரையின் வித்தைதனை உணர்ந்திடவோ- அன்று, ஆடற்கலை புகட்டும் எந்தனுக்கோ பரீட்சை?

விரா: இந்திரப் பிரஸ்தத்தில் கலைகளுக்கு இணையில்லை என்பதனை நாம் அறிவோம். என்றாலும் எங்கள் மகள் ஏற்றமுடன் பெற்ற கலை ஆற்றலினைக் கண்டு களிபெறவே வந்துற்றோம்.

உத்தரை ஆடுகிறாள். நட்டுவாங்கம் செய்யும் பிருகன்னளை இடைக்கிடையே திருத்தி விடுகிறாள்.

அரசனும் அரசியும் மகிழ்ச்சிடைந்து இருவரையும் வாழ்த்திவிட்டுச் செல்கின்றனர்.



-காட்சி மாற்றம்-

கங்கனன் என்ற பெயருடன் உலவும் யுதிஷ்டிரர், மன்னன் விராடனுடன் சொக்கட்டான் ஆடுகிறார்.

விரா: அன்புள்ள கங்கணரே! பிருகன்னளை பற்றி விபரம் அறிந்திருப்பீர்; ஆடலிலும் பாடலிலும் அரிய திறன் பெற்றவளோ?

கங்: ஆடலும் பாடலுமா..? அரசியல் சார் துறைகளிலே அவளுக்கு நிகர் அவளே!

விரா: (சிரிக்கிறார்) அரசியலில் அறிவா? என்ன கதைபேசுகிறீர்? பிருகன்னளைக் கெங்கே அரசியல் நிலை புரியும்?

இந்த வேளையில் அரசி சுதேசினை அங்கு வருகிறார்.

சுதே: உம்மை ஒன்று கேட்டிடவே நாட்ட முற்றேன் கங்கணரே! உமது மன்னர் யுதிஷ்டிரரே சூதாடித் தோற்றவராம்! சதுரங்க ஆட்டத்தின் விதிதன்னை அறிந்த பின்னும் அதை நாடி ஆடுகின்ற துணிவுதனைப் பெற்றீரே! உமது மன்னர் யுதிஷ்டிரர்போல், எமது மன்னர் முடியிழக்க நாட்டமது கொண்டிந்த ஆட்டமதைத் தொடர்ந்தீரோ?

விரா: என்ன வார்த்தை கூறுகிறாய்..? உம்மருகே வந்ததும் நீ!

சுதே: உண்மையைத்தான் கூறுகிறேன்! கங்கணரே விடை கூறும்.

கங்: தங்கள் கூற்றில் பொய்யில்லை! தக்கவிடை தருவதுவே என் கடமை தானன்றோ!

சுதே: உங்கள் மன்னர் யுதிஷ்டிரரை சூதாடும்படி கூறி சபைக்கிழுத்துவிட்டவர் யார்?

கங்: சத்திரிய தர்மம்தான் சூதாடும் சபையினுக்கு யுதிஷ்டிரரை ஏவியது.

சுதே: தன் நாடும் தம்பியரும் தன் தர்ம பத்தினியும் பந்தயமாய் வைத்தாடும் பண்பதனை உங்கள் மன்னர் எங்குதான் கற்றாரோ?

கங்: சதுரங்கமோ ஒரு மாபெரும் போரரங்கம். வென்றாலும் தோற்றாலும் விருப்புடனே தொடரும். ஆட்டம் தொடர்வதற்கு பந்தயத்தில் வைத்தாடும் பொருளெதுவும் தரவேண்டும். பந்தயத்தில் வைப்பதற்கு பொருளெதுவும் இல்லையெனில் ஆட்டமும் முடியாது; ஆவலும் அடங்காது.

சுதே: ஆட்டத்தில் தோற்றுவிட்ட அத்தனையையும் திருப்பி மாமன்னர் அளித்தாரே! அப்போதே ஒரு முடிவை அடைந்திருந்தால் நலம்தானே!

கங்: ஆட்சிதனை நன்கொடையாய் ஏற்பதிலோரிழுக்குண்டு! பரம்பரையாய் வரவேண்டும்; இன்றேல் போர் நடத்தி வெற்றிகண்டு பெறவேண்டும் நாடதனை!

சுதே: திருதராட்டிர மன்னர் வேறொருவராகாரே! பெரிய தந்தையாரிடமே பெறுதலையும் கொடையெனவே கொள்ளுவதாய்க் கருதிடவே காரணமும் இல்லையன்றோ?

கங்: தர்ம நெறிதனை உணர்ந்தே மீண்டுமொருமுறை தான் தாயந்தனை ஆட மாமன்னர் அழைத்திட்டார். வெற்றிபெற மீண்டுமொரு வாய்ப்பதனைத் தானளித்தார்! பாண்டவரின் விதி வலிமை வேறு திசை போனதனால் வெற்றி பெற முடியாமல் தோல்விதனைத் தானணைத்தார்.

இப்போது விராட மன்னரின் மைத்துனர் சேனாதிபதி கீசகன் வந்திருப்பதாக காவலன் கூறுகிறான். அழைத்து வரும்படி மன்னர் சொல்லுகிறார்.

கீசகன் வந்து தன் தங்கையான அரசிக்கும் மன்னருக்கும் வணக்கம் தெரிவிக்கிறான்.

<u>பின்னணிப் பாடல்:</u>

**நச்சு மரத்தாலென்றும் நன்மை நிலைப்பதில்லை!**
**இச்சக மீதினிலே எவர்க்குமே நிறைவுமில்லை!**
**விராடனவன் நாட்டின் வீரர்படைத் தலைவன்**
**கிராதகனாம் கீசகனும் கொடியதோர் நச்சரவம்!**

**பெண்ணினத்தைப் பேதமையின் பிறப்பிடமதாய்க் கருதி**
**எண்ணுவது போலணைக்க எழுகாமத் தீ அலைக்க**
**கண்ணிழந்த கயவர்களாய் பெருகி வரு மறிவிலிகள்**
**விண்ணவரின் கொடுஞ்சாபக் கோபக்குறியாவாரே!**

-காட்சி மாற்றம்-

மத்சய நாட்டரசியின் அந்தப்புரம்- அரசி சுதேசினைக்கு சௌரந்தரி என்ற பெயரில் உலவும் திரௌபதி ஒப்பனை செய்கிறாள்.

சுதே: நீ இங்கு வந்துற்ற நாளது தனிலிருந்தே உன்னிடம் வினவிடவே விரும்பியிருந்தேன் நான். கானகத்திலே படர்ந்த நெடுமரங்கள் போலடர்ந்து வானகத்திலே தவழும் கருமேகம் போல லைந்துன் கருங்கூந்தல் அலைகடல் போல் அடங்காமலே குலைந்து கலைந்திடவே ஏன் விடுத்தாய்? கொய்து முடித்தாலுன் கொள்ளை அழகுக்கு எல்லை இருக்காதே!

சௌ: முன்னாளில் என் குழலை வாரி முடித்திருப்பேன்! அந்நாளில் பாஞ்சாலி அழகுக்கு அழகூட்டும் அரும்பணியிலிருந்தவள் நான்! அன்னவளும் ஏற்ற அருஞ் சபதம் சார்பாக அவள் கூந்தல் தன்னை இணைத்து முடிவதில்லை. அன்புக்குரிய எந்தன் எஜமானி அனுதாபம் என் முடியை மூடியாமல் விட்டுவிடத் துணிந்திட்டேன். திரௌபதியாள் தன் கூந்தல் முடித்திடும் நாளன்றே என் குழலை நான் சீவி வாரி முடித்திடுவேன்!

சுதே: பாஞ்சாலியின் சபதம் பெரு வெற்றி தருமென்று பேதை என் உள்ளமதில் உறுதியேதும் உதிக்கவில்லை. அஸ்தினாபுர நாட்டின் ஒற்றர்கள் அலைகின்றார்; பாண்டவர்கள் மறைந்திருக்க மார்க்கம் எங்கேதானிருக்கும்? அழகினுருக்கொண்டவர்கள், அரிய வீர மரபினர்கள் அவர்களது அடையாளம் இலகுவிலே வெளியாகும்.

சௌ: அஞ்ஞாத வாசத்தில் அலைகின்ற பாண்டவர்கள் அடையாளம் காண்பதிலே தங்களுக்கே நலமுண்டோ?

சுதே: அவ்வாறு கூறவில்லை! உண்மையிலே பாஞ்சாலி தனை நினைத்தால் விம்முகிறேன். சூதாட்டம் தன்னில் தன் மனையாளை வைத்தாடத் துணிந்த அந்த மன்னவனை சாபமிட்டே சபிக்க துணிகிறது எந்தன் மனம்!

சௌ: வேண்டாம் அம்மா வேண்டாம்! சாபமேதும் வேண்டாம்! என்னைப் பொறுத்தவரை, திரௌபதிக்கும் இந்தத் தண்டனையும் தேவைதான்! அவளிடமும் தவறுண்டு. அவர்விட்ட தவறுதலால் எதிர்காலம் பதிலளிக்கும்!

சுதே: உன்னுடைய வார்த்தையிலும் சத்திரியருக்கான சாயல் படர்கிறதே!

சௌ: திரௌபதியின் அரண்மனையில் தொன்றுதொட்டு வாழ்ந்ததனால் தோன்றியுள்ள தோஷமது!

சுதே: உண்மைதான் உணர்கின்றேன். சின்னப் பருவம் முதல் திரௌபதியுடன் வாழ்ந்தவளோ?

சௌ: திரௌபதியின் நிழலாக என்றும் இணைபிரியாதிருந்த அந்த அருமையான நாட்களை இவ்வரிவை என்னால் நினையாதிருப்பதற்கு முடியாதிருக்கிறதே! பாஞ்சால நாட்டதிபரென்னை அருமை மகளே என்று பாசமுடனே அழைப்பார்! இளவரசர் எனைத் தனது தங்கை என்றே அழைத்து இனிய வார்த்தைதனைப் பொழிவார்! (விம்மி அழுகிறாள்)

அரசி: உன்னுடைய நிலை என்னை நிலை குலைய வைக்கிறது. உன்னைப் போலொருத்தி உதவிக்கு அமைவதுவும் அரிய பெரும் பேறன்றோ? கலங்காதே அம்மா! கண்ணீரைத் துடைத்துக்கொள்!

சௌரந்தரி அரசியிடம் விடைபெற்று வெளியேறும்போது அரசியின் அண்ணனான கீசகனை நேராகவே சந்திக்க நேரிடுகிறது. திரௌபதியின் அழகு கீசகனை நிலை தடுமாற வைக்கிறது.

சௌ: மன்னிப்புக் கோருகிறேன்!

சௌரந்தரியான திரௌபதி போவதையே பார்த்துக்கொண்டிருந்த கீசகனிடம் அவன் தங்கையான மத்சய நாட்டரசி..

சுதே: அண்ணாவா..? ஏன் அங்கே அப்படியே நின்றுவிட்டீர்?

கீச: யாரிந்தப் பணிப்பெண்? எப்போதிவள் வந்தாள்?

சுதே: அரசி திரௌபதியின் அலங்காரப் பொறுப்பினையே கவனித்து வந்த இவள், இங்கு வந்து ஆண்டொன்று ஆகிவிட்டதே அண்ணா!

கீசக: பாஞ்சாலிதனைப் பார்க்கும் பாக்கியம் தான் எமக்கில்லை! பணிப்பெண்ணின் பேரழகே பிரமிப்பிலாழ்த்தியது. அலங்காரம் செய்பவளே அழகின் திருவுருவாய் அமைந்தே இருக்கின்றாள். அருகில் வரும்போதே அனல் தாவித் தகிக்கிறதே! அழகியவள் உடலினிலே கொழுந்துவிட்டு எரிகின்ற தீச்சுவாலை வீசிடுதே!

அரசி சிரிக்கின்றாள்!

கீசக: பேரழகுப் பெண்ணவளைக் கண்டதுடன் என் மனதில் பேராசைத் தீ யெழுந்து பொசுக்கி[illegible]யைத்தான் கூறுகிறேன். உளறலில்லை என் வார்த்தை. அடிமைப் பெண்ணொருத்திக்கு உரிய நடை இதுவல்ல; உயர் குடியிலே யுதித்த உத்தமி தானிவளாவாள். அடிமையாக வைத்திவளை அவமதித்தலாகாது. அனுப்பி வைப்பாய் அவளை எந்தன் அரண்மனைக்கே இன்றுடனே!

சுதே: நான்தான் மறுத்தாலும் நீ விடவா போகின்றாய்?

-காட்சி மாற்றம்-

அந்தப்புரத்தை அடுத்த பூங்காவில் திரௌபதி இருக்கிறாள். கீசகன் அவளை அணுகுகிறான்.

கீசக: சௌரந்தரி மாதே! சௌந்தர்ய தேவதையே! சிங்காரத் தோப்பிலே சிரித்திருக்கும் பூக்களெல்லாம் உன்னுடலழகுகண்டே எழிலுருவம் பெற்றதுவோ? உன்னழகைக் கண்டபின்னர் முழு மதியினெழிலுருவைப் பருக மனமொப்பவில்லை! எழிலரசி ரதிதேவி உன்னிடத்தில் கையேந்தி அழகுருவம் பெற்றனளோ? பார்த்தனவன் கணைதனிலே பாய்ந்து வரும் கூர் நுனியும் உன் காந்த விழிக் கூர்மைக்குவமையாகாதே! உன் கண்வீசு கணையுமெந்தன் கடு மார்பைத்தான் பிளந்து காமதீ படர்வதற்கு வழி வகுத்துவிட்டதுவே! என்னுடனே வந்துவிடு! அரியணையில் உனை ஏற்றி அகமகிழ வைத்திடுவேன்.

சௌ: வேண்டாத ஆசைகளைவிதைத்திடவும் வேண்டாம் நீர்! வேறொருவர் மனைவிதனை விரும்புவது வீரருக்கு ஏற்றதொரு வழியுமல்ல. மாற்றானின் மனைவி மானம் காப்பதுவும் உம் போன்ற காவலரின் கடமையன்றோ!

கீசக: வீரர்களின் கடமை பற்றி நீ விளக்கம் கூறாதே! நேர்மை வழிகளை நான் நின் பொருட்டு நீக்கி வைப்பேன். என்னை நீ ஏற்பதுவே இருவருக்கும் நன்மை தரும்.

சௌ: ஆசைத் தீ அதனை நீ அணைக்கவில்லையானால் உன்னாசையே உன்னை சுட்டெரிக்கும் மறவாதே! உற்ற துணை யாருமற்ற அபலையல்ல யான் உணர்வாய்! அரிய வீரர் ஐவருக்கு அருந்துணைவியாவேன் நான். என் மானந் தனைக் காக்க அன்னவர்கள் முன்வந்தால் உன்னுருவம் உருக்குலைந்து உடைந்து சிதைந்துவிடும். எந்தனை ஆதரித்து அன்பூட்டும் உன் தங்கை உயிரற்ற உன் உடலை அரவணைத்துப் புலம்புதற்கு அழிவு வழி தேடாதே!

-காட்சிமாற்றம்-

அரசியின் அந்தப்புரம்- சுதேசினையிடம் அண்ணன் வருகிறான்.

கீசக: தங்கை சுதேசினையே! உன் அண்ணன் உரை கேட்பாய்! சௌரந்தரி தன்னை நானடைய வேண்டு மவள் என்னுடமையாவதற்கு ஏற்ற வழி பார்த்துவிடு. இல்லையெனில் என்னுயிரை இன்றே நான் போக்கிடுவேன்!

சுதே: வேண்டா விருப்பத்தால் வேதனைதான் மீதமாகும். சௌரந்தரி எந்தன் பாதுகாப்பி லிருக்கின்றாள். அவளை மறந்துவிடு! ஆசைத் தீ வளராமல் அணைத்துவிடு அறமதுவே!

கீசக: உன் அண்ணன் உயிர்மீது உனக்குள்ள அக்கறையும் அன்பதுவும் இதுதானோ?

சுதே: உயிர் விடப்போவதாக உரைக்காதீர் என் அண்ணா! ஆன மட்டும் பார்க்கின்றேன்; அமைதி அடைந்திப்போ அரண்மனைக்கே போய்வா நீ! புண்ணியமும் பாவப்பழியதுவும் எண்ணாமல் அண்ணா உன் உயிர் காக்க அரிய துணையாய் இருப்பேன்!

□□□

அரசி சுதேசினையிடம் சௌரந்தரி வருகிறாள். அரசி தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சௌரந்தரியை வரவேற்கிறாள்.

சுதே: உன்னைத்தான் நினைத்திருந்தேன். உடனோடி வந்துவிட்டாய்!

சௌ: கட்டளைதான் எதுவோ? காத்திருக்கிறேன் அம்மா!

சுதே: அண்ணன் கீசகனின் அரண்மனைக்குப் போய் வாநீ! அயல் நாட்டிலிருந்து பெற்ற அரிய மதுவுளதாம். அதனை எடுத்து வந்து சேர்ப்பதுதான் உன் கடமை!

சௌரந்தரி அசையாமல் நிற்பதைக் கண்ட அரசி..

சுதே: ஏன் போகாதிருக்கின்றாய்? கீசகன் என் அண்ணனன்றோ?

சௌ: அதனைத் தெரிந்து கொண்டேன்! ஆனாலும் இப்பணிக்கு மணமான இப்பெண்ணை அனுப்புவதைவிடுத்து வேறொருத்தி தன்னை அங்கே அனுப்புவது நல்லதன்றோ?

சுதே: உன்னைத்தான் இப்பணிக்கு உறுதியெனத் தேர்ந்தெடுத்தேன்!

சௌ: கட்டளையை ஏற்கின்றேன்! இப்பணிதனில் தோன்றும் எத்தகைய எதிர்ப்பலனும் ஏற்பதுவே உங்கள் எண்ணத்தின் விளைவாகும்!

<u>பின்னணிப் பாடல்:</u>

**கேடு விளை வேளைதனில்**
**கண்களையு மிருள் கவ்வும்**
**கொடு வினையின் கெடுதிதனை**
**கடு மனமு மொப்பும்.**

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

அருள் ஜுவலர்ஸ்
4 3 6 3 3 1
வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11



Kala
JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11
4 3 3 6 8 6



ரு வ து

லி டெ யோ







## லாராவால் மட்டும் முடிந்தது! இனி யாரால் முடியும்?

சாதனையை லாரா உடைத்துப் போட்டு விட்டார்.

சாதனை படைத்துவிட்டு ஓயவில்லை. இங்கிலாந்தில் வார்விக்ஷையர் அணிக்காக முதல்தர போட்டி ஒன்றில் ஆடி 501, ரன் குவித்துவிட்டு அவுட் ஆகாமல் திரும்பினார். இது ஒரு சூப்பர் சாதனை.

பணம் குவிகிறது. பரிசு மழை பொழிகிறது. மேற்கிந்திய தீவு தனது சாதனை நாயகனை 'டிரினிடி கிராஸ்' என்னும் உயர் விருது கொடுத்து கௌரவித்திருக்கிறது. அங்கு ஒரு வீதிக்கு லாராவின் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.




பிரையன் சார்ள்ஸ் லாரா, கிரிக்கெட் உலகின் கில்லாடி வீரன். இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அண்டிகுவாவில் இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஒரே இன்னிங்ஸில் 375 ரன்கள் (45 பௌண்டரிகள் உட்பட) லாராவால் குவிக்கப் பட்ட போது கிரிக்கெட் வரலாற்றில் அது ஒரு புதிய சரித்திரமானது.

117 வருட கால கிரிக்கெட் டெஸ்ட் போட்டி வரலாற்றில் ஒரே இன்னிங்ஸில் அதிக ரன் குவித்த சாதனை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டது.

ஏற்கனவே ஒரே இன்னிங்ஸில் 365 ரன் குவித்தவர் மேற்கிந்திய தீவின் வீரர் காரி சோபர்ஸ். 36 வருடத்திற்கு பின் தன் நாட்டு வீரரின் ↑

## மோதுவதும் ஒரு கலை!







## லாராவின் சாதனைப் பட்டியல்

முழுப் பெயர்- பிரையன் சார்ள்ஸ் லாரா.
பிறந்த இடம்- டிரினிடாட் மாகாணத்தில் உள்ள கண்டரா கிராமம்.
பிறந்த திகதி- 02.05.69.
துவக்கம்- 1988 முதல்தரக் கிரிக்கெட் போட்டிகளின் மூலம். மே.இ.தீவு அணியில் இடம்பெற்றது 1989இல்.
சாதனைகள்: சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் குவித்துள்ள மொத்த ரன்கள் 6679, 91 கேட்ச் பிடித்திருக்கிறார்.
1990 டெஸ்ட் போட்டிகளில் நுழைந்து இதுவரை, 16 போட்டிகள், 2 செஞ்சரி, 1628 ரன்கள், 27 கேட்ச் பிடித்துள்ளார்.
ரன் குவிப்பு சராசரி வீதம்- 62.61 சதவீதம்
ஒரு நாள் போட்டிகள்:
இதுவரை 68 போட்டிகள், 2329 ரன்கள். ஒருநாள் ஆட்டத்தில் சராசரி விகிதம் 40. பாகிஸ்தானுக்கு எதிராக 153 ரன் உச்ச பட்சம். 37 கேட்ச் பிடித்துள்ளார்.

இந்த ஆண்டு பிலிப்பைன்ஸில் நடந்த அழகிப் போட்டியில் உலக அழகுராணியாக ... தென்னாபிரிக்காவில் நடந்த அழகுராணிப் போட்டியில் ... உலக அழகுராணியாகி விட்டார். →

இருவருமே இந்தியர் தான். ஒட்டுக்குப் போட்டியாக அழகுராணிப் போட்டிகள் நடக்கின்றன. வெவ்வேறு அழகுராணிகள் அறிவிக்கப்படுகிறார்கள். ஒரே குழப்பம். இவர்களில் உண்மையான அழகுராணி யார்? யாருக்கு டாட்டா காட்டுவது, யாரை வரவேற்பது? அழகுராணிப் போட்டியும் விளம்பர உத்தியாகி பணம் குவிக்கும் → தொழிலாகிவிட்டது.

சர்வதேச மகளிர் உரிமை அமைப்புக்கள் அழகுராணிப் போட்டிகள்மீது கண்டனம் தொடுத்துள்ளன →

கண்டன மழை பற்றி அழகிகள் கவலைப்படவில்லை. பண மழை பொழிகிறது போட்டிகளில். அதில் நனைவதுதான் விருப்பம்.

## யாருக்கு டாட்டா

## அழகிகள் மீது கண்டன மழை









